பஞ்சாமிர்தம்

மலர் ௨ கா.அ3

ஜூன் 1925

௧

ஙL
rn211, N24PM
N25.2.3
20165

காலஞ்சென்ற தேச பக்தர்கள்

பத்திராதிபர்

"அவன் அன்றி அணுவும் அசையாது" என்பர் அறிவாளர். தோன்று தொட்டு இன்று மட்டும், அப்படிப்பட்ட கடவுளுமே இல்லை என்பாரும் பலர் உளர். எனவே, மனிதன் எவனைத் தான் உலகத்துக்கு இன்றியமையாதவனாக இயம்பலாகும்? பல்லாயிரம் நாகரிகர் எல்லாவிதச் சுக சௌகரியங்களுக்கும் நடுவே இனிது வாழ்ந்து வந்த பம்பைமாநகரம், எரி மலையின் தீக்குழம்பு பொங்கியெழுந்து வழிய, சிறு பொழுதிற் புதையுண்டு மறைந்தொழிகின்றது; அலை கடலின் மீது நடமாடி விரைந்தோடிய தைத்சானிபக் கப்பல், சாலப்பல மாந்தர் ஓலமிட்டு நடுங்க, கண்ணிமை கொட்டுமுன் தண்ணீருள் மூழ்கி, பாழ் இருட் பாதலத்துள் ஆழ்ந்து விடுகின்றது; செல்வமும் செருக்கும் பல்பெரு மக்களும் செழித்தோங்கி, உதய ஞாயிற்றின் உன்னத பீடமாய் ஒளிரும் புகழ்ப் பெருந் தீவின் மிகப் பெரும்பகுதி, அகழ்வாரையும் தாங்கும் பூதேவியே உடலகம் சிலிர்த்துப் பகுவாய்திறக்க, அவள் மின்னைத் தீயினிற் கருகிப் பொசுங்கியும், கொடிய பாழ் வயிற்றினுள் குப்புற விழுந்தும், நசித்து விடுகின்றது. மற்றை நாட் காலையிலே, கற்றையஞ் சோதிக் கதிர்களைப் பரப்பி மண்ணுலகனைத்தையும் பொன் மூலாம் பூசிக்கொண்டு, என்றும் போல் எழுந்து சூரியன் பிரகாசிக்கிறான். தலை மகவைப் பெற்றெடுத்த தாயென்ன, நீலப் பெருங்கடல் சரலக் களிக்கின்றது; குன்றருவிகளும் கான் யாறுகளும் துள்ளிச் சுழித்துக் குதித் தோடுகின்றன; மந்த மாருதம் மணந் தலவுகின்றது; பறவைகளும் மிருகங்களும் பல வகை பாடி விளையாடுகின்றன; சாவாது தப்பிய மனிசருமே, ஓவாதிலங்கும் உலக நாடக மேடையிலே, உகந்துலாவி நடிக்கின்றனர் எனின், மற்று யாவரை யாது சொல்வது? "நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ் உலகு." ஆயினும், ஓதப் பெருங் கடலில் ஒரு துளி நீரே போல, ஆதிப் பேர் அண்டகோடிகளின் நடவுள்ள இச்சிறு பூமியின்மீது மனித வர்க்கம் தோன்றிய முதுநாள் தொட்டு இதுநாள் வரையில், உடல் எழில் வலியிலோ, உள்ளத்தின் உறுதியிலோ, அருவினைத் திறனிலோ, பிறிதொரு பெற்றியிலோ, மற்றெவரினும் மிக்கு விளங்கிய மனிதன் ஒருவன் மாண்டக்கால், அவன் குழுவினர் வருந்தி நைவதும்,

நினைந்து நினைந்து உருகுவதும், குருட்டுத் தெய்வத்தைப் பழித்து நோவதும், அவனது பெருஞ் சிறப்புக்களைப் பாராட்டி அவனை வணங்குவதுங் கூட, நிகழ்ந்து வருகின்றது. இதுவே புகழின் உரு. இப் புகழின் பெருமையும் கால வுறுதியும், மாண்டவரால் மனிதர் அடைந்த பேற்றினைப் பொறுத்தனவாகும். மற்றொன்றும் கூறுதற் குளது: அவர் வாழ்வால் பயனுற்று மகிழ்ந்தவர் பின்பு வருந்துவது போல, முன்பு வருந்தியவர், பின்பு அச்சம் நீங்கி மகிழ்வது முண்டு.

தேசபந்து சித்தரஞ்சன தாஸ்

மேலே கூறிய புகழ் முழக்கோலைக் கொண்டு இவர் புகழை அளக்குங்கால், 32 கோடி இந்தியர்களிலே, இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்துக்கு இன்றியமையாத வீரசிகாமணிகளாக

OFFICE OF THE REGI
7- JUL
MADR

32 இந்தியரை, இல்லை, இருவர் மூவரையே, வோட்டுக்களின்படி பொறுக்கி யெடுப்பினும், இவர் ஒருவராக விளங்குவர் என்பது திண்ணம். இந் நாடு சுவாதீனம் பெற, இந்தியர்க்கு இன்றியமையாத குணங்கள் நான்கு; ஒற்றுமை, மானம், அஞ்சாமை, தியாக புத்தி. ஒற்றுமை பலரைப் பொறுத்தது; இவர் மட்டில், சாதிமத பேதங்களைத் தழுவிய விருப்பு வெறுப்புக்கள் யாதுமின்றி இவர் விளங்கினமையே, இவர் சீலத்தை நன்கு துலக்கும். தன் தந்தையாருற்ற அவமானத்தைத் தானும் வலிந்தேற்று இன்

சால்வெண்டானது மன்றி; விடுதலையான பின்னரும், தான் தனவானான போது, பழைய கடன்காரர்களை யெல்லாம் தேடிப் பிடித்து, ஒரு பைசாவும் குறை வின்றிக் கொடுத்துக் கடனை தீர்த்து, தன் தந்தையின் நற்பெயரைத் துலக்கினமையே, இவர் மான வுணர்ச்சியை நிரூபிக்கும். இந்திர போகத்தை அநுபவித்து வந்தவர் ஒருவர், தானாகவே மனமுகந்து ஐசுவரியம் அனைத்தையும் தியாகம் செய்துவிட்டு, தன்னைச் சிறைப்படுத்திக் கொண்டது மன்றி, தன் உயிரினும் இனிய தன் மனைவி மக்களின் சுவாதீனத்தையும் இழக்கச் செய்யத் துணிந்தாராயின், கொடியவற்றில் எல்லாம் கொடிய வறுமையையே அஞ்சிலராயின், அவருடைய வீரத்தையும் தியாக புத்தியையும்பற்றி, வேறு கூறவும் வேண்டுமோ? இப்போர்க்கொத்த வீரசூரரை இத் தறுவாயிலே இழந்தது, இந்தியாவின் பாக்கியக் குறைவேயாம். அவர் காட்டிய வழியினில், நமக் கியன்றமட்டும் நாமும் நடக்க முயலுவதே, தேசபந்துவுக்கும் இந்தியத் தாய்க்கும் நாம் செலுத்துதற்குரிய கடமை

ஆசாரியர் வ. வெ. சு. ஐயர்

புடமிட்ட பொன் ஒளிருவது போல, ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு கிளப்பிவிட்ட குருகுலப் போராட்டத்திலே, இவர் காட்டிய சாந்தகுணமும் தியாகபுத்தியும், இவரது பெருந்தன்மையை நன்று விளக்கின. தன் அருமை மகளுடன் இவர் திடீரென அருவிக்கு இரையாகி மறைந்த செய்தியைக் கேட்டுத் தமிழ் நாடனைத்தும் கிளர்ந்தோங்கிய அநுதாபமும் ஆறாத்துயரமும், பத்திரிகைகளில் வெளிவந்த இவரது சரித்திர விவரங்களும், எத்துணைப் பெரியோர் இவர் என்பதைப் பின்னும் விளக்கலாயின. தான் மற்றொருவர் என்று சொல்லிப் போலீஸாரை ஏமாற்றி, இவர் இங்கிலாந்தை விட்டுப் பிரான்ஸுக்குத் தப்பியோடினதை, சில பத்திரிகைகள் வியந்துகூறின. இது புகழத்தக்கதேயோ என்ற ஐயம், மனத்தில் உதிக்கலாம் ஆயினும், போலீஸ் முதலிய சர்க்கார் உத்தியோகங்களில், இப்படிப்பட்ட பொய்களும் ஏமாற்றுக்களும் சில வேளைகளில் கடமைகளாகி விடுவதை எண்ணிப்பார்த்தால், தேசத்தொண்டுக்காகத் தன் சுவாதீனத்தைக் காப்பாற்ற விரும்பி, இவ்வாறு ஒழுகுதையும், கடமையென நினைக்கலாகும். இவர் வெளியிட்ட கம்பராமாயணப் பகுதியைப் படித்தபோது, சாதாரணப் பண்டிதர்களைப் போலாது, உண்மைக் கவிநயச் சுவையறிவதில் இவர் கைவல்லவர் என்பது துலங்கிற்று. கல்வியறிவும் நாட்டுப்பற்றும் வீரமும் அமைதியும் ஒருங்கு சேர்ந்தமைந்த இவர் போல்வார், எந்நாட்டிலுமே அரியராவர்; நமது தென்னாட்டிலோ, முயற்கொம்பென்னலாம். இப்படிப்பட்ட பெரியோரை இழந்தது நமது துர்ப்

பாக்கியமே. பத்திரிகைகள் ஒன்றேனும், இவர் பிறந்த ஆண்டு, பெற்றார் உற்றார், இளம்பருவ நிகழ்ச்சிகள், முதலியவற்றைப் பற்றிக் கூறவில்லை. நம்மவர் ஜீவிய சரித்திரங்களில் இது ஒரு பெருங்குறையாம். இப்பொழுதே இவர் சரித்திரத்தைப் பற்றி முழு விவரங்களையும் விசாரித்துத் தெளிந்து, இவர் பெற்று விட்ட "பாலபாரதி"யின் வாயிலாக விரிவா யெழுதி வெளிப்படுத்துதல், நமக்கும் பிற்காலத்தவர்க்கும் பயன்படும்; இவரைப் பெருமதிக்கும் இக்காலத்தவர் கடமையுமாகும். நொடிப்பொழுதிலே மணவாளனையும் மகளையும் இழந்த இவர் மனைவியாருக்கும், போதிய பொறுமை உண்டாவதாகுக! இவர் ஆன்மாவும், சுபத்திரையின் ஆன்மாவும், அமைதி அடை! உரிய காலத்திலே, மீண்டும் இவர் தமிழகத்தில் தானே பிறந்து, தான் இவ்வளவு நேசித்து வந்த நாட்டுக்காகப் பின்னும் உழைத்து மகிழ்வாராகுக!

ஸ்ரீமான் ஜி. ஏ. சுந்தரமையர், பி.ஏ., பி.எல்.

தேவபக்தியில் போலத் தேசத்தொண்டிலும், சிறுமை பெருமை என்ப தில்லை. குசேலர் அவற்கிழியும், கண்ணப்பர் எச்சில் இறைச்சியும் சிறந்தது போல, முழுமனத்தோடு செய்யப்படும் சிறு தியாகமும், தன் சக்திக்கு மிஞ்சியதாயின், தேசத்தொண்டிலே பெருமதிக்கப்படும். இந்த நியாயப்படி, "சுதேசமித்திரன்" துணையாசிரியா யிருந்து, 18—6—1925 காலை, தன் 39-வது வயதிலே, அகாலமரணத்தை யடைந்த இவரும், தேசபந்து, ஆசாரியர்களுடன், சேர்த்து எண்ணுதற்குரியவராவர். தன் அளவுக்கு மிஞ்சிய தியாகத்தைச் செய்து, பல கஷ்டங்களைச் சிரித்த முகத்தோடு பொறுத்திருந்து, இந்தியாவின் சுயராஜ்யத்துக்காக இவரும் பாடுபட்டு வந்தார்.

அந்தோ! நவஇந்தியாவின் பிதா எனலாகும் ராஜா ராமமோஹனராய், இங்கிலாந்தில் ப்ரிஸ்டல் நகரத்திலே, 92 ஆண்டுகளுக்கு முன் உயிரைத் துறந்த நாள்முதல் இதுகாறும், எத்தனை மகான்கள் இந் நாட்டின் பொருட்டு மடிந்திருக்கின்றனர்! இன்னும் வானம் கறுத்திருண்டுகுமுறுவதன்றி, சோதி விளிம்பினைக் காண்கிலோமே! ஆயினும் என்? ஆங்கில கவி பைரன் கூறியுள்ளது மெய்வாக்கே:

"சுதந்திரப் போர்தான் தொடங்கியதாயின்,
உதிரம் ஒழுகிடுந்தை மகன் எனப்
பரம்பரை வந்து, பலமுறை தோற்கினும்,
நிரந்தரம் வெற்றி பெறல் நிச்சயமே!"

இந்தியத் தேசியக் கல்வி

ஸ்ரீயுத லாலா லஜபதிராய்

(154-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மூன்றாவது அதிகாரம்

தேசிய மேல்நோக்கங்கள் (National Ideals)

இந்தியாவிலே தேசியக் கல்வி முறை இவ்வாறு தான் நடைபெற வேண்டுமென்று நிருணயிப்பவர் மறக்கலாகாத சில பிரமாணங்களையும் உண்மைகளையும் இனிக் கூறுவேன். ஒவ்வொருவர் தனிவாழ்விலும், சமூக வாழ்க்கையிலும், கல்விப்பயிற்சி ஆணிவேர் போன்றது, அதி முக்கியமானது என்பதே, முதற் பிரமாணமாகும். தனிப்பட்ட மனிதர் பலர் கூடியதே ஒரு ஜன சமூகம் ஆகின்றது; ஒருவனுக்கோ ஒருத்திக்கோ நன்மை பயப்பது, ஜனசமூகத்துக்கும் நன்மை பயக்கின்றது; ஆதலினால், எந்த வழியில் எண்ணிப் பார்த்தாலும், கல்விப் பயிற்சியின் சிறப்பும், ஜனசமூகத்துக்கு அதன் முக்கியமும் விளங்கா நிற்கும்.

கல்விப்பயிற்சி, தன்னில்தானே ஒரு புருஷார்த்தம் அன்று; சிறந்ததொரு காரியத்துக்குக் கருவியே அது. அந்தக் காரியம், உயிர் வாழ்க்கையே; தொடர்ந்து, முடிவின்றி, தடையின்றி, நமது வாழ்வில் நாம் மேன்மேலும் அபிவிருத்தி அடைவதே. உயிர் வாழ்க்கையைப் பாகுபடுத்திப் பிரிக்கமுடியாதது போல, நமது அபிவிருத்தியையும் வெவ்வேறு பகுதிகளாகப் பிரிக்க ஒண்ணாது. உடலைப் பற்றியவை, அறிவைப் பற்றியவை, சமுதாய வாழ்வைப் பற்றியவை, நல்லொழுக்கத்தைப் பற்றியவை, ஆத்மலாபத்தைப் பற்றியவை என்று, நமது உயிர் வாழ்க்கையைப் பலதுறைகளாகப் பிரித்துப் பேசுவது சௌகரியமாயிருப்பினும், அடிப்படையான நியாயத்தைக் கவனித்தால், அது விபரீதத்தை விளைக்கலாகும். உத்தமமான உயிர்வாழ்க்கை, எல்லாத் துறைகளிலும் ஒத்து, ஒரேகுறியை நோக்கி, சகல சக்திகளோடும் உழைக்கும் உழைப்பே யாகும்; நாம் மேன்மேலும் ஒருமைப்பட்டு எல்லோரும் அபிவிருத்தி யடைவதே, அந்த லக்ஷியம்.

ஒரு கணப்பொழுதேனும் ஒரே நிலையிலின்றி மாறிக்கொண்டு வருவது, உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. இப்படிப்பட்ட மாறுதல்,மேன்மேலும் நன்மைபயப்பதுதான், அபிவிருத்தி. மனித சுபாவம் ஒரு நிலையானதன்று; மாறிமாறி அபிவிருத்தி யடையும் குணம் அதில் அடங்கி யிருக்கிறது. கரும சக்கிரம் ஓய்வொழிவின்றிச் சுழன்று, மனித சுபாவத்தை மாற்றிக்கொண்டே இருக்கிறது. ஒவ்வொருவருடைய தனிக்கரும பலனால் ஜன சமூகமும், ஜனசமூகத்தின் கருமபலனால் தனித்தனியே ஒவ்வொருவரும், பாதிக்கப்பட்டு மாறுகிறோம்.

ஒரு நாட்டின் சீதோஷ்ணம், நீர்வள நிலவளப் பான்மை, முதலியவற்றால் அமையும் இயற்கை நிலைமை; கலைகள் தொழில்களின் முன்னேற்றம், ஜனங்களின் சுபாவம், அறிவு வளர்ச்சி ஆகியவற்றின் பலன்களைத்தான், ஜனசமூக அபிவிருத்தி என்கிறோம். இன்னும் ஆழ்ந்து ஆலோசித்தால், யாவற்றுக்கும் அடிப்படையாகும் காரணம், ஆசாபாசங்களும் விவேகமும் முதிர்ந்து பலத்துள்ள மனசுதான் என்பது துலங்கும். மேற்கூறிய இயற்கை நிலைமையின் அடிமையாக மனிதனைக் கூறுதல் பொருந்தாது.

சுதந்திர விருத்தியே முன்னேற்றத்தின் அளவுகோல். தான் எண்ணிச் சூழும் முயற்சியினால், இயற்கை நிலைமையால் ஏற்படும் இடையூறுகளைக் கடந்து மேற்செல்லும் சக்தியே, சுதந்திரம். "சுதந்திர விருத்தி யாதெனின், இயற்கை நிலைமைக்கு ஏற்றபடி தானாக மாறியும், ஜனசமூகத்துக்குத் தன்னைக் கீழ்ப்படுத்தியும் ஒழுகும் சுபாவமானது, தன் முயற்சியால் இயற்கை நிலைமையை அடக்கித் தனக்குக் கீழ்ப்படுத்தியும், தன் சொந்த நலமும் ஜன சமூகத்தின் பொது நலமும் ஒன்றுதான் என்பதைத் தான் உணர்ந்தும் நடக்கும் ஒழுக்கமாக மாறுவதுதான்."

சுதந்திர மின்றிச் சுக மில்லை; அடிமைக்கு ஆனந்த மில்லை. இங்கே 'சுதந்திரம்' என்றது, கேவலம், பிறர் ஏவியபடி செய்ய வேண்டாமலிருக்கும் சுயாதீன மாத்திர மன்று; கூடியமட்டில், தன் மனத்தில் எழும் ஆசைகளுக்கும், தான் வாழும் நிலைமையால் ஏற்படும் பந்தங்களுக்கும் அடிமைபா யில்லாமையு மாகும். தன்னைத்தானே அடக்கி யாளும் சக்தியில் எல்லா விதத்திலும் உயர்பவனே, சுதந்திரத்தில் வளர்பவனாவான்; ஆயின், அதனால் அவன் ஜனசமூக வாழ்க்கைக்கு உதவாதவன் ஆகிவிடும அவசியமில்லை. ஒரு மனிதனுக்குப் போல ஒரு ஜனசமூகத்துக்கும், இந்த நியாயம் பொருந்தும். ஒரு சாதியாரின் முன்னேற்றம், அவர் ஜன சங்கைப் பெருமையைப் பொறுத்த தன்று. "பெரிய ஜனசமூகங்களல்ல, ஆரோக்கியமும் வினைமுடிக்குந் திறனும் தமக்குள் ஒற்றுமை கட்டுப்பாடுமுள்ள ஜனசமூகங்கள்தான், முன்னேற்றம் அடை

யும் சக்தி வாய்ந்தனவாம்.'' 'ஒற்றுமைக் கட்டுப்பாடு' என்றால், ஒரு ஜன சமூகத்தைச் சேர்ந்தவர் எல்லோரும் ஒரே மாதிரி இருப்பதன்று. காரியக் குறியிலும், அதை முடிக்கும் ஊக்கத்திலும், ஒரே மனதாய் இருப்பதுதான்; தேசிய வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும், தேசிய முயற்சிகள் யாவற்றிலும், ஒருவருக்கொருவர் உதவிபுரிந்து, ஒத்துழைக்கும் மனப்பான்மையே அது.

'சுதந்திர வளர்ச்சிதான் முன்னேற்றம்; ஒவ்வொரு மனிதனின் அத்தியந்த நிலைமைக்கும், அவனே யஜமானன்; கருமம், விதி என்பன வெல்லாம், மனிதர் கைக்குள் அடங்கினவே; ஒவ்வொருவனும் தன்னலத்தைப்போல் சமுதாயப் பொதுநலத்தையும் தானாகவே பாராட்டி யொழுகுவதுதான், முன்னேற்ற வழி; ஒரு தனிச் சாதியார், அல்லது நாட்டார் என்பது, அதில் அடங்கிய ஆண்கள் பெண்கள் ஒவ்வொருவரும் தன்னைப்போல் பாவித்து அபிமானிக்கும் ஜனசமூகமே; இவ்வாறு தன்னலத்தைப்போல் தன் சமூகநலத்தையும் ஒவ்வொருவரும் கருதி உழைத்தாலன்றி, முன்னேற்றம், அதாவது சுதந்திர அபிவிருத்தி, சாத்தியமாகாது.' இந்தத் தத்துவங்களை ஒவ்வொருவருக்கும் போதிப்பதே, எவ்வித உத்தமக் கல்விப்பயிற்சிமுறையின் முதற்குறியா யிருக்கவேண்டும். விதியும் கருமபலனும் விலக்கமுடியாத சக்தியுள்ளனவாக, பொதுவாய் இந்தியாவில் மதிக்கப்படுகின்றன. 'விதி' என்று தனிச் சக்தி ஒன்றில்லை, கருமபலனை ஒவ்வொருவரும் தன் முயற்சி உழைப்புக்களால் மாற்றிக்கொள்ளக்கூடும் என்ற உண்மையை, நமது ஜனங்களுக்குள் வற்புறுத்திப் பறைசாற்றவேண்டும். ஹிந்து மதம் 'விதி'யை நிலைநாட்டவில்லை; ஆனால், கருமபலனுக்கு அதிக ஆதிக்கம் கொடுக்கின்றது; ஆகையால், இந்தப் பிறப்பில்தானே, நாம் முன்னாலோசனையோடு செய்யும் செயல்களால், நம்முடைய சமுதாய நிலைமையை மாற்றும் முயற்சிகளால், பழ வினைப்பயனைக் கடக்கவும் எதிர்க்கவும் மாற்றவும் நம்மால் கூடும் என்பதை, நன்றாய் வற்புறுத்தி விளங்கவேண்டும். இஸ்லாம் மதம் கிஸ்மத் அல்லது விதியை வற்புறுத்தவில்லையாயினும், அந்த நம்பிக்கை அதில் தொனிக்காமலில்லை.

ஒரு தேசத்தின் சீதோஷ்ண ஸ்திதி, நீர் நில மலை வளங்கள் முதலியவற்றின்படியே அந் நாட்டாரின் சுபாவம் அமைகின்றது. என்னும் பழைய கொள்கை, இப்பொழுது தவறாக எண்ணப்படுகின்றது. இயற்கை நிலைமையினால் ஜனங்களின் சுபாவம் பாதிக்கப்படுவது உண்மையாயினும், இயற்கையால் அபிவிருத்திக்குண்டாகும் இடையூறுகளை மனுஷப் பிரயத்தனத்தாலும் முயற்சியாலும் விலக்கி மேற் செல்லக்கூடும். இதுபோலவே, சாதி சுபாவம், இரத்த சுபாவம், பாரம்பரைக்குணம், மேல்தோலின் நிறம், மூளைக்

கனம், இவைகளை அதி முக்கியமாகக் கருதுவது தவறென்பதே, இக்காலத்து அறிவாளர் கொள்கை.

இந்தியர்களின் மனம், சில நூற்றாண்டுகளாக, பந்தப்பட்டிருக்கிறது. கண்டிப்பான ஆசார அநுஷ்டானங்களுக்கும், நியமம் நிஷ்டைகளுக்கும், புரோகிதர் ஆதிக்கத்துக்கும், உட்பட்ட வாழ்க்கையும்; கல்விப்பயிற்சி வசதிக்குறைவும்; தேசத்தை நிலைகுலைக்கும் ராஜீயக் கலகங்கள் குழப்பங்கள் புரட்சிகளும்; வேதாந்த வைராக்கியத்தையும் சந்நியாச தருமத்தையும் பெருமதித்துப் போதிக்கும் மதப்பிரசாரங்களும் ஒன்றுகூடி, சில நூற்றாண்டுகளாக, இந்தியர் உயிர் வாழ்க்கையின் ஆவேசத்தை மந்தப்படுத்தி, ஸ்தம்பிக்கும்படி செய்துவந்திருக்கின்றன. இதனால், இப்பொழுது ஓராயிரம் ஆண்டுகளாக, இந்தியா முன்னேற்றம் அடைவதற்குப் பதிலாக, அடிக்கடி பல அம்சங்களில் பின்னிட்டிருக்கின்றது.

நமது பழைய நிலைமையை ஒட்டிய பிரசினை இருவகைப்படும். நம்மை அவமதித்துத் தூற்றுவோர், 'என்றுமே இந்தியா நாகரிகம் அடையவில்லை, அதன் நாகரிகம் மத்திய காலத்தில் தடையுண்டதென்பது பொய்; இந்தியர் என்றுமே நாகரிகமற்ற மிருகப் பிராயத்தினர்களே; எந்தத் துறையிலும் அவர்கள் எவ்வித மேன்மையும் அடைந்ததேயில்லை' என்பர். ஸம்ஸ்கிருத பாஷையும் கிரந்தங்களும் நமது புராதன சரித்திரமும் மேல்நாட்டாருக்குத் தெரியவந்த பிறகு, வேதாந்த விசாரணையிலும் சாஸ்திர ஞானத்திலும் ஆதி இந்தியர் எய்தியுள்ள சிறப்பை ஐரோப்பியர் அறிந்து புகழ்ந்து கொண்டாடி, புத்தி கோசரத்தில் தமக்குச் சிறிதும் தாழ்வில்லாத மேதாவிகளின் சந்ததியாராக நம்மைக் கருதலாயினர். இதனால், இந்தியர்களின் தன் மரியாதை உணர்ச்சி வளர்ந்தேறி, பண்டைப் புகழை மீண்டும் அடையவேண்டுமென்ற அவா இந்தியர் மனத்தில் உதித்து, நவ இந்தியா உற்பவித்தது. ஆனால், இந்த மாறுபாட்டிலே, நம்மவரில் சிலர், நிதான புத்தி தடுமாறித் தலைகிறுங்கிவிட்டனர். நம்மைப் பழித்துத் தூற்றுவோருக்குப் பதிலுரைக்கும் ஆவேசத்தில், 'ஆதி இந்தியர் அறியாததொன்றில்லை. இக்காலத்திலே உலகத்திற் சிறந்தன யாவும் முற்காலத்திலே அவர்கள் தெரிந்து உண்டாக்கினவைகளே' என்று, மிதமிஞ்சிப் பெருமை பேசலாயினர். இந்தப் பழஞ் சிறப்பையும் பெருமையையும் இராஜீய விஷயத்திலும் புகுத்தி, அவற்றுக்கேற்ற உயர் பதவியை நாம் நாடவே, நம் விரோதிகள், முன்னிலும் அதிகமாக நம்மை இழித்துப் பழித்து, எவ்வித யோக்கியதையுமில்லாத வெறும் உதவாக் கட்டைகளாக நம்மைத் தூற்றலாயினர்.

அந்நியர்களாலும், தங்கள் தலைவர்களாலுமே, ஒரு சமூகத்தார் சருவதா சிறுமதித்துத் தூற்றப்பட்டால், அவர்களுக்குள்

தன் மரியாதையும் மனோதைரியமும் வளரமுடியாது. இவ்விரு குணங்களும் இல்லாதவர், விரைவில் சிதைந்து நசித்துப்போதல் திண்ணம. இதனால், நம்முடைய நாகரிகத்தை எல்லா முகத்திலும் இழித்துப் பழித்துக் கூறுவோரை எதிர்த்துப் பிரசாரம் செய்தல் அவசியமாகிறது. ருஷியா தேசத்தைத் தமது சர்வ மானியக் குத்தகையாகக் கொண்டு என்றும் கொள்ளையாட விரும்பும் ஜெர்மானியர், இவ்வண்ணம் ருஷியர்களை இழித்துப் பேசித் தூற்றுவதைக் காணலாம். நம்மைக் குறை கூறுவோரும், இயற்கையில் நாம் பிற்போக்கான சுபாவமுள்ள ஜனங்களென்றும்; நமக்குள் சாதி மத பாஷைகளிலுள்ள வித்தியாசங்களினால், குடியாட்சி மார்க்கத்தில் மேற்செல்லத் தகாதவர் என்றும்; ஒருவாறு நாம் மேற்செல்வதாயினும், நமது மேற்போக்கு மிகமிக மெதுவாகவே நிகழக்கூடும் என்றும்; அதிகாரப் பொறுப்பை வகிக்கும் சக்தி நமக்கு ஏற்பட இன்னும் எத்தனை தலைமுறைகளோ கழியவேண்டுமென்றும் ஓய்வொழிவின்றிப் பறையடிக்கின்றனர். ஆயினும், நாம் முன்னேற்றம் அடைவதற்கு இன்றியமையாத ஆரம்பக் கல்வியையும், கைத் தொழிற் பயிற்சியையும், நமது மகா ஜனங்களுக்குக் கொடுக்க, அவர்கள் முன்வரவில்லை. சாதிபேத விலங்கக்களுக்கு உட்பட்டு, அஞ்ஞான மூடக் கொள்கைகளில் ஆழ்ந்து நாம் அடிமைகளாயிருப்பதே, அவர்களுக்குச் சௌகரியமாயிருக்கிறது. ஆதலால் நமது பண்டைப் புகழையும் நாகரிக முறைகளையும் நம்மவர்க்கு எடுத்தோதி, அவர்கள் மனத்தில் தன் மரியாதை உணர்ச்சியும் தன்னம்பிக்கையும் உதித்தோங்கும்படி செய்தல் அவசியம் ஆயின், வருங்கால அவசியங்களைக் கவனியாதிருக்காமலும், ஆதி ஆரியர்களின் காலத்துக்குப் பின் உலகம் எவ்வளவு அறிவுப் பெருக்கம் அடைந்திருக்கிறது என்பதை மறந்துவிடாமலு மட்டும், காத்துக் கொள்ளவேண்டும்.

உண்மை என்றும் உண்மையே; பழைய உண்மை, புதிய உண்மை என்பதில்லை. இக்காலத்திலே கண்டு பிடிக்கப்பட்ட தத்துவங்களை, நமது புராதனமான சாஸ்திரங்களையும் ரிஷிவாக்குகளையும் கொண்டே அளந்து, அவற்றுடன் பொருந்தினால் மாத்திரம் நாம் ஏற்றுக்கொள்ளலாமென்று கூறுவதாயிருந்தால், இந்தியா ஒருநாளும் முன்னுக்கு வராமல் நாசமுறும் என்பது திண்ணம். தற்காலத்துப் பேரறிவின் மூலங்களை முற்காலத்துக் கிரந்தங்களில் கண்டறிந்து, வற்புறுத்துவது சரி; ஆனால், பழைய கொள்கைகளோடு பொருந்தாதவற்றை, அப்படிப் பொருந்தவில்லை என்ற காரணத்தினால் மட்டும் தள்ளிவிடுவது, நமது முன்னேற்றத்துக்குத் தடையாகும்; மதவிஷயம், சமுதாய விஷயம், அரசியல் விஷயம், பொருளாதார விஷயம், கலைஞானம், சாஸ்திர ஞானம், முதலிய

பலதுறைகளில், நமது ஆதி முன்னோர்க்குத் தெரியாதது ஒன்றுமேயில்லை, நாம் புதிதாய்த் தெரிந்துகொள்ளக்கூடியது, தெரிந்துகொள்ள வேண்டியது, ஒன்றுமேயில்லை' என்னும் மூடபக்தி ஒழிந்தாலன்றி; இந்த விஷயங்களில் புதிய உண்மை எது கிடைப்பினும் ஏற்கத்துணியும் திறந்த மனத்தினராய் நாம் இருந்தாலன்றி, அபிவிருத்தி என்பது கனவிலும் கைகூடாது. நமது முன்னோர் வாழ்ந்த உலகம் வேறு; சில அம்சங்களில் பின்னிட்டதாயினும், பல அம்சங்களில் நாம் வாழும் உலகம் பண்டைய உலகத்தினும் அறிவிற் சிறந்தது என்பதை, நாம் உணர்ந்து தெளிவது அத்தியாவசியம். பழையவற்றை இகழாமலும், வருங்காலத்தில் கண்ணும் கருத்துமாயும், பண்டைப் புகழினும் மிக்க புகழைப் படைக்கத் துணிந்தவராயும் ஒழுகினால்தான், நாம் முன்னேற்றம் அடையமுடியும். இப்பொழுதுள்ள நிலைமையில், நாம் தாழ்ந்தவரென்றும், நாகரிகமற்றவரென்றும், முன்னேற்றமடையும் சக்தியில்லாதவரென்றும், நமது விரோதிகள் கூறுவதை நாமும் நம்பிவிடுவோமென்ற பயத்துக்கிடமில்லை. நமது பழஞ்சிறப்பைப் பெருமதித்துத் தற்புகழ்ச்சியினால் மதிமயங்கி, தற்கால நாகரிகத்தைச் சிறுமதித்துவிடுவோம் என்றுதான், அஞ்சவேண்டியிருக்கிறது. இது பெரியதோர் அபாயமாகும். இப்படி நேர்ந்துவிடாமல், நாம் விழிப்புடன் காக்கவேண்டும். இந்த ஓர் எச்சரிக்கையைக் கூறிவிட்டு, "மகத்தான தேசபக்தியின் ஜோதியிலேதான் தேசியக் கல்வி வளர்ந்தேற வேண்டும்; இந்திய இலக்கியங்கள், இந்திய சரித்திரங்கள் முதலியவற்றை இடைவிடாது பயிலுவதால், தேசியக்கல்வி வளரும் மனோநிலை, எப்பொழுதும் இனியதாய், புதியதாய், சக்தியளிப்பதாய், விளங்கவேண்டும்" என்று, பெஸண்டம்மையார் சொல்வதை நானும் ஆமோதிக்கிறேன். மார்க்கத்திலே நேரக்கூடிய அபாயங்கள் கேடுகளை எல்லாம் விலக்கித் தடுத்து, அந்தக் காரியத்தை எவ்வாறு நிறைவேற்றி முடித்துக்கொள்ளலாம் என்று ஆலோசித்தல், அத்தியாவசியமாகும்.

(தொடரும்)

குறள் நானூறு

ராப்பர் - 0—4—0; டக்லீன் - 0—6—0;

பஞ்சாமிர்தம் ஆபீஸ் - மயிலாப்பூர்,
சென்னை.

விவேகமுள்ள சிறுமிகள்

(ருஷிய மஹான் லியோ டால்ஸ்டாய் எழுதியது)

ஸ்ரீ. K. விசுவநாதையர், B.A;L.T; சித்தூர்.

'ஈஸ்டர்' ஆரம்பத்தில், ஸ்லெட்ஜ் வண்டியில், பனிக்கட்டியின்மீது சறுக்கிப் போகும் வழக்கம், அப்பொழுதே ஓயத்தலைப்பட்டது; ஆயினும், முற்றங்களில் பனிக் கட்டிகள், தேய்ந்த வண்ணமாகவே கிடந்தன. கிராம வீதிகளில், தண்ணீர் சிற்றருவியாக ஓடியது. சிறு பெண்கள் இருவர், இரண்டு வீட்டிற்கு மத்தியிலிருக்கும் ஒரு சந்தில் சந்தித்தார்கள். அவர்கள் ஒரே வீட்டுக் குழந்தைகள் அல்லர். கொல்லை கழனிகளினின்று ஓடி வந்த அழுக்கு நீர், ஒரு மடுவாக அந்தச் சந்தில் தேங்கியிருந்தது. ஒரு பெண் மிகவும் சிறிய குட்டி, மற்றொருத்தி சிறிது பெரியவள். அவர்களின் தாய்மார்கள், அவர்களுக்குப் புதிய மேலங்கி உடுத்திருந்தார்கள். சிறுமி, நீல நிற மேலங்கி தரித்துக் கொண்டிருந்தாள்; பெரியவள் உடை மஞ்சள் நிறம். இருவரும் சிகப்பு நிறமான கைக் குட்டைகளைத் தலையில் தரித்திருந்தார்கள். அவர்கள், மாதாகோவில் சென்று, அப்பொழுதுதான் திரும்பினார்கள். முதலில் ஒருவருக்கொருவர் தங்கள் பட்டாடைகளைக் காண்பித்துக் கொண்டார்கள்; பிறகு விளையாட ஆரம்பித்தார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம், அம்மடுவில் விளையாடவேண்டுமென்னும் ஆசை அவர்களுக் குண்டாயிற்று. இளையவள், தன் ஜோடு முதலியவைகளுடனே, மடுவில் பிரவேசிக்க எத்தனித்தாள். ஆனால், பெரியவள் அவளைத் தடுத்து, "மாலதீ! நீ அப்படியே போகாதே. உன் தாய் உன்னைத் திட்டுவள். நான் என் ஜோடுகளையும், மேல் ஜோடுகளையும் எடுத்து விடுகிறேன்; நீயும் அப்படியே செய்," என்றாள்.

அவ்வாறே இருவரும் செய்தார்கள். பின்னர் தங்கள் ஆடைகளைக் கைகளால் உயர்த்திக் கொண்டு, மடுவில் இறங்கி, ஒருவருக்கொருவர் எதிரில் உலாவ ஆரம்பித்தார்கள். மாலதியின் கணைக்

கால் வரையில் ஜலம் வந்தது. உடனே அவள் பெரியவளைப் பார்த்து, "ஆகுல்யா! மிகவும் ஆழமாக இருக்கிறது; எனக்குப் பயமாக இருக்கிறது!" என்றாள்.

மற்றவள், "பயப்படாதே! வா! இனிமேல் ஆழமாக விருக்காது," என்றாள்.

இருவர்களும், சமீபத்தில் வந்ததும், ஆகுல்யா சிறுமியை நோக்கி, "மாலதீ! ஜலத்தைத் தட்டாதே, தெரியுமா! ஜாக்கிரதையாகப் போ," என்றாள்.

இவள் இவ்வார்த்தைகளைச் சொல்லி முடித்தாளோ இல்லையோ, அப்பொழுதே, மாலதி தன் காலைத் தூக்கி ஜலத்தில் உதைத்தாள். உடனே பளீர் என்று சேற்று நீர் ஆகுல்யா மேலங்கியிலும், அவள் மூக்கிலும், கண்களிலும் சிதறியது. தன் உடை கறைப்பட்டுப் போனதைக்கண்டு மிகக் கோபித்து, மாலதியை அடிக்கும்படி, ஆகுல்யா ஓடினாள். மாலதி பயந்து, மடுவை விட்டு, வீட்டை நோக்கி ஓட ஆரம்பித்தாள். அப்பொழுது ஆகுல்யாவின் தாய், அங்கே தற்செயலாக வர, தன் பெண்ணின் உடைகளில் சேற்றுநீர் அடிக்கப்பட்டிருப்பதை நோக்கி, மிகக் கோபங்கொண்டு, "இங்கே, என்னடீ செய்து கொண்டிருக்கிறாய்? ஏனடி உன் புது அங்கி யெல்லாம் சேறாக இருக்கிறது?" என்று சொல்லிக்கொண்டு, பலவாறாகத் திட்ட ஆரம்பித்தாள்.

"மாலதி வேணுமென்று செய்தாள்" என்று, ஆகுல்யா பதில் சொன்னாள்.

இதைக் கேட்டதும், ஆகுல்யாவின் தாய், மாலதியைப் பிடித்து இழுத்து, அவள் முதுகில் அடித்தாள். மாலதி, தெருவெங்கும் கேட்கும்படியாக, கூக்குரலிட்டு அழ ஆரம்பித்தாள். அதைக் கேட்டு, அவள் தாய் வெளியே வந்து பார்த்து, "எதற்காக என் பெண்ணை அடித்தாய்?" என்று அயல் வீட்டுக்காரியைத் திட்ட ஆரம்பித்தாள். ஒரு வார்த்தையிலிருந்து மற்றொரு வார்த்தை பெருகி, இருவருக்கும் சச்சரவு விளைந்தது. வீட்டுப் புருஷர்களும் வெளியே வந்தார்கள். தெருவில் கூட்டங் கூடியது. ஒருவர் சொல்வதை மற்றொருவர், கேட்காமல், அவரவர்கள் தலைக்குத் தலை கத்த ஆரம்பித்தார்கள். இவ்வாறு அவர்களுக்குள் சண்டை பலக்கவே, ஒருவரை யொருவர் தள்ளி கை கலக்கும் தறுவாய்க்கு விவகாரங்கள் முற்றிவிட்டன. அப்பொழுது, ஆகுல்யாவின் பாட்டி, ஒரு தொண்டு கிழவி, அவர்களுக்கு மத்தியில் வந்து, அவர்களைச் சாந்தப்படுத்த முயன்றாள்.

"ஏன் இப்படிச் சண்டை போடுகிறீர்கள்? இவ்வாறு நடந்து கொள்ளுவது நமக்கு அழகா? வருஷத்திற்கு ஒரு நாளில், இப்படிச் செய்யலாமா? எல்லோரும் சந்தோஷமாக நடந்து கொள்ள

வேண்டிய காலத்தில், புத்தி யில்லாது இப்படிச் சண்டை போடுதல் சரியா ?'' என்று, கிழவி பலவாறாக வேண்டிக் கொண்டாள்.

அவளை ஒருவரும் மதிக்கவில்லை. அச் சண்டை மும்மரத்தில், அவள் இடி யுண்டாள். அவள் கீழே விழாது பிழைத்தது, கடவுள் செய லென்றே சொல்லவேண்டும். வீதியில் ஒருவரை யொருவர் வைதுகொண் டிருக்கையில், ஆகுல்யா, தன்மேலங்கியி லிருக்கும் மண்ணைத் துடைத்து விட்டு, ஜலம் தேங்கியிருக்கும் இடத்திற்குச் சென்றாள். அவள், ஒரு கல்லை யெடுத்து, மடுக்கரையின் மண்ணைச் சிறிது சிறிதாகச் சுறண்டி, நீரானது ஒரு சிறு கால்வாய் வழியாகத் தெருவிற்குள் போகும்படி செய்ய ஆரம்பித்தாள். உடனே, மாலதியும், ஒரு சிறு மரத்துண்டை யெடுத்து, அவளுக்கு உதவியாகக் கால்வாயைத் தோண்டினாள். பெரிய புருஷர்கள் கைகலந்து சண்டைபோடும் தறுவாயில், இச்சிறுமிகள் தோண்டிய கால்வாயின் வழியாக,நீரானது தெருவிற்குள் பாய்ந்து, சமாதானம் செய்வதற்கு முயன்று கொண்டிருந்த கிழவி நிற்கும் இடத்திற்கு வந்தது. அவ்விரு பெண்களும், அந்த ஓடையின் இருபக்கத்திலும், ஜலத்தைத் தொடர்ந்து கொண்டே வந்தார்கள்.

''மாலதி! அதைப்பிடி! அதைப்பிடி!'' என்று ஆகுல்யா உரக்கக் கத்தினாள். மாலதி சந்தோஷத்தினால் பேசமுடியாதிருந்தாள். இருவரும் மிகுந்த களிப்புடன், மரத்துண்டு ஓடம்போல் நீரில் வேகமாக ஓடுவதைக் கவனித்து, அதைப் பின் தொடர்ந்து கொண்டே சண்டை நடக்கும் இடத்திற்கு வந்து விட்டார்கள்.

கிழவி, அப்பெண் மணிகளைப் பார்த்து, புருஷர்களை நோக்கி ''உங்களுக்கு வெட்கமில்லையா? இச் சிறுமிகளிருவரும், தாங்களே தங்கள் சச்சரவை மறந்து, குதூகலத்தோடு விளையாடிக்கொண்டிருக்கையில், அவர்களுக்காக நீங்கள் சண்டைபோடுகிறீர்களே! என் அருமைக் கண்மணிகள், உங்களைவிட எவ்வளவு புத்திசாலிகள் !'' என்று, இடித்துக் காட்டினாள். புருஷர்கள், அப்பெண் குழந்தைகளைக் கண்டு, வெட்கமுற்று, ஒவ்வொருவரும், தங்கள் தங்கள் பேதைமைக்காகத் தலைகுனிந்து, சிரித்துக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினர்.

''நீங்களும், குழந்தைகளைப்போல், கபடமற்று வாழ ஆரம்பித்தாலொழிய, மோக்ஷ சாம்ராஜ்யத்தை, ஒருக்காலமும் அடைய மாட்டீர்கள்.''

மதிப்புரைகள்*

(164 ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இந்தியாவின் கல்வி அபிவிருத்தி

பத்திராதிபர்

ஜனங்களின் கல்விப் பயிற்சிக்கு ராஜாங்கத்தை ஜவாப்தாராக்குதல், நவநாகரிக நியாயங்களில் ஒன்று. பண்டைக் காலத்து அரசர்கள், கலாசாலைகளை ஸ்தாபித்தும், போஷித்தும், வித்துவான்களையும் வித்தியார்த்திகளையும் ஆதரித்தும், வித்தியாதானம் செய்தனர்; ஆயினும், தமது குடிகளில் ஒவ்வொரு நபரும் தற்குறியா யின்றிப் படிப்பாளியா யிருக்கும்படி செய்வது தமது பொறுப்பென் றுணர்ந்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நாடு முழுதும் அமைத்ததாகத் தெரிய வில்லை. இக்காலத்திலோ, ஜனசமூகத்திலே ஒவ்வொருவனும், ஒவ்வொருத்தியும், இயன்றமட்டும் படித்துத் தேறுதற்கும், நோயுற்றால் சிகிச்சை பெறுதற்கும், தான் செய்யும் வேலைக்குத் தக்க கூலிபெறுதற்கும், துரைத்தனமே பொறுப்பாளியாகக் கருதப்படுகின்றது. இந்த நியாயங்களை அனுசரித்து, தற்கால அரசாட்சிகளும் குடியாட்சிகளும், தம்மா லியன்ற மட்டும் அடிப்படைக் கல்வியையேனும் தம் ஆட்சிக்குட்பட்ட எல்லோருக்கும் கட்டாயமாக்கி, இலவசமாயளிக்க, முயன்று வருகின்றன. ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இந்தியாவை ஆண்டு வரும் ஆங்கிலேயர் துரைத்தனம் நிறைவேறிக்கொண்டு வந்திருக்கும் முறையை, இந்நூல் ஆராய்வதாகும். இது, செவ்வையாய் மேல்தரமான காகிதத்தில் அச்சிட்டுக் கட்டடஞ்செய்யப்பட்டிருப்பதோடு, ஸர்க்கார்ப் பிரசுரங்களிலிருந்தே பெரும்பாலும் எடுத்துத் தொகுக்கப்பட்ட கல்விவிருத்தி சம்பந்தமான பல கணக்கு விவரங்களை அடக்கிக் கொண்டிருக்கிறது. அந்த விவரங்கள், 'பிரிட்டிஷ் ராஜாங்கத்தினர் நூற்றைம்பதாண்டுகளாக இந்நாட்டை ஆண்டு வந்தும், கல்வியபிவிருத்தி விஷயத்தில், துரைத்தனத்தாருக்குரிய கடமையைச் செலுத்த வில்லை' என்று, இந்நூலாசிரியர் குறை கூறுவதை நன்கு நிரூபிக்கின்றன.

இந்தியாவின் முதலாவது கவர்னர்—ஜெனரலான வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவர், இந்தியர்களின் புராதன நாகரிகம் கல்விப்பயிற்சிகளின் அபிமானமுள்ளவர்; அவற்றையே பின்னும் தழைத்து வளர்ந்தோங்கச் செய்ய விரும்பினார். மேலையர் நாகரிகமும் ஆங்கிலேயர் கல்விப்பயிற்சியும் இந்நாட்டில் வேரூன்றியதற்குக் காரண புருஷர், கிறைஸ்தவப் பாதிரிகளே யன்றித் துரைத்தனத்தாரல்லர். 1813-ம் வருஷத்தில்தான், ஈஸ்டிந்தியா கம்பெனியார், இந்நாட்டிலே கல்வியைப் பரவச் செய்தற் கென்று, ஒரு லக்ஷம் ரூபாவை ஆண்டுதோறும் ஒதுக்கி வைக்கலாயினர். இந்நாட்டில் ஏற்பட்ட முதலாவது இங்கிலீஷ்ப் பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்தவர், ராஜா ராமமோஹன ராயும், வில்லியம் ஹேர் என்ற ஆங்கிலேயரு மாவர். 1813-ம் ஆண்டுமுதல் துரைத்தனத்தார் உதவி வந்த லக்ஷம் ரூபாவும், மேல் நாட்டுக் கல்வியைப்

* *England's Educational Policy in India*—By V. V. Oak, B.A., S. T. C., (Ed.) M.A., (Econ) B.S., (Jour.) Published by Messrs B. G. Paul & Co, 15, Broadway, Madras Price-Rs. 2.

பரவச்செய்வதற் கன்றி, புராதனமான கல்விப் பயிற்சியை வளர்ப்பதற்கே உபயோகப் படுத்தப்பட்டு வந்தது. 1835-ம் ஆண்டிலே, பொது ஜனக் கல்விப்பயிற்சிக் கமிற்றி ஏற்பட்டபோது, அதன் தலைவராயிருந்த மக்காலே என்ற பேரறிவாளர் சிபார்சின்படி, அக்காலத்திலே கவர்னர்–ஜெனரலாயிருந்த பெண்டிங்க் பிரபு, "இந்தியர்களுக்குள் மேல்நாட்டு இலக்கியங்களையும் சாஸ்திர ஞானத்தையும் பரவச் செய்வதே பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் குறியாயிருக்க வேண்டும்; இதன் பொருட்டு ஒதுக்கி வைக்கும் திரவியத்தையெல்லாம், ஆங்கிலக் கல்விப் பயிற்சியில் செலவிடுவதே உத்தமம்" என்று, தீர்மானஞ் செய்தார். அப்பொழுது, இங்கிலீஷ் பாஷை மூலமாகவே மேல்நாட்டுப் படிப்பைப் புகட்டுவ தென்றும் தீர்மானமாயிற்று: அதே ஆண்டிலே, பத்திரிகைகளுக்கு முழுச்சுதந்திரம் அளிக்கப்பட்டதுமன்றி, அதுகாறும் ராஜ பாஷையாக வழங்கிவந்த பாரசீகம் மாறி, நியாய சபைகளிலும் கச்சேரிகளிலும் இங்கிலீஷே ராஜபாஷை யாயிற்று. இதுநிகழ்ந்து தொண்ணூறாண்டுகளாகின்றன: ஆயின், ஆரம்பக் கல்வியபிவிருத்தியைப் போதுமான அளவு கவனியாமையால், பிரிட்டிஷார் ஆட்சிக்குட்பட்ட இந்நாடு, பரோடா, திருவாங்கூர் முதலிய சில சுதேச ராஜ்யங்களுக்கும்; அமெரிக்கர் ஆட்சிக்குட்பட்ட பிலிப்பைன் தீவுகளுக்கும், கல்வியபிவிருத்தி விஷயத்தில், இன்னும் மிகப் பிற்பட்டே காண்கின்றது. 1854-ம் வருஷத்தில்தான், ஆரம்பக் கல்வியைப் பரப்பும் சிரத்தை முதலில் ஏற்பட்டது. 1882-ம் ஆண்டிலே, ரிப்பன் பிரபுவின் ஆட்சியிலே, ஒரு கல்விக் கமிஷன் ஏற்பட்டு, அடிப்படைக்கல்வியை அபிவிருத்தி செய்யும் முக்கியத்தைப் பின்னும் வற்புறுத்திற்று. துரைத்தனத்தாரால் ஏற்படுத்தப்படாத, அவர்கள் ஆதிக்கத்துக்குட்படாத, பள்ளிகளும் கலாசாலைகளும் மிகப்பெருகி, நாளுக்குநாள் வளர்ந்தேறி வருவதைக்கண்டு திகிலுற்ற கர்ஸன் பிரபு, 1904-ம் ஆண்டிலே, உயர்தரக்கல்வித்தேரின் மேற்போக்கையும் வேகத்தையும் சறுக்குக்கட்டை கொடுத்து மிதப்படுத்துவதுபோல, யூனிவர்ஸிடி சட்டத்தை ஏற்படுத்தினர்-1911-ம் ஆண்டிலே கோக்கலே பிரேரேபித்த ஆரம்பக் கல்வி மசோதா நிறைவேறாமல் போயிற்று. 1922-ம் ஆண்டில் நிறைவேறி அமுலுக்கு வந்த கட்டாய அடிப்படைக் கல்விச் சட்டங்களால், சில சில முனிசிபாலிடிகளில், இப்பொழுது தான், ஆரம்பக் கல்வி முயற்சி தலைநீட்டித் தழைக்கப் பார்க்கின்ற தென்னலாம். ஆயினும் செலவுக்குப் போதிய பணமில்லாத ஸ்தல ஸ்தாபனங்களால் மட்டும்; துரைத்தனத்தாரின் பேருதவி யின்றி, ஆரம்பக் கல்வியைப் பரப்பிவிட முடியா தென்பது நிச்சயம். கல்வி யிலாகா இப்பொழுது மந்திரிகள் கைவசமா யிருப்பினும், பணப் பெட்டியின் சாவி பிறர் கையிலிருப்பதால், இவர்களாலுமே ஒன்றுஞ் செய்ய முடிய வில்லை. பொருள் வருமானமுள்ள அம்சம், இவர்கள் கைவசமுள்ளது, லாகிரி வஸ்துக்களே. நாட்டிலே குடியைப் பெருக்கி விருத்தி செய்தால்தான் இவர்கள் வருமானம் அதிகப்படும். அப்படிச் செய்து, அந்தப் பணத்தைக்கொண்டு கல்வி யபிவிருத்தியை நாடுதல், 'பசுவைக் கொன்று செருப்புத்தானம் செய்வது' போலாகு மன்றோ? அமெரிக்க ஐக்கிய மாகாணங்களிலே ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் கல்வி பயிலும் மாணவர் தொகை (மொத்த ஜன சங்கையின் விகிதத்துக்கு) 20 என்று வைத்துக்கொண்டால், இங்கிலாந்தில்—$17\frac{1}{2}$; ஜப்பானில்—15; ஜெர்மனியில்—15;

(இதன் தொடர்ச்சி 249-ம் பக்கம் பார்க்க)

அன்பு

ஸ்ரீமதி மஹாலக்ஷ்மி அம்மாள், சென்னை.

"உடல்குழைய என்பெலாம் நெக்குருக விழிநீர்கள்
ஊற்றென வெதும்பி யூற்ற
ஊசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
யோருறவு முன்னி யுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துள் நடுக்குறப்
பாடி யாடிக் குதித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பி யார்த் தார்த் தெழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித்துக் கூப்பி,
வானே! அவ்வானில் இன்ப
மழையே! மழைத்தாரை வெள்ளமே! நீடூழி
வாழி யென வாழ்த்தி யேத்தும்
கடன்மடை திறந்தனைய அன்பரன்புக்கெளியை
கன்னெஞ்சனுக் கெளியையோ
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே."

என, அன்பின் பெருக்கினால் கசிந்துருகி மன்றாடும் எந்த பக்தனுக்குத்தான், கருணை வள்ளலான எம்பிரான் திருவுளமுவந்து அருள் சுரக்காது இருக்க முடியும்? "அன்பரன்புக் கெளியை" என்ற ஸ்வாமிகளின் திருவாக்கானது அன்பின் பெருமையை நன்கு வெளியிட்டது. எல்லாவற்றிற்கும் அதீதமான பரமாத்மஸ்வரூபியான பகவானை யணுக அன்பிற்கு ஆற்றலுண்டாயின், அதன் வயப்படாத பொருளும் ஜகத்திலிருக்கிறதா? அன்பே, பகவானிடத்தில் செலுத்தப்படுகையில் பக்தியென்பதாகக் கூறப்படும்; அந்த அன்பையே, மனைவி, மைந்தர், உடன் பிறந்தோரிடம் செலுத்தப்படுகையில், ப்ரேமை என்பதாகக் கூறுகிறார்கள். பாமரர்களான மாந்தர்களுக்கு அன்பின் தன்மையை நடத்திக் காண்பித்து, அறிவிப்பதற் கென்றே ஸ்ரீ கிருஷ்ண பகவான் கோகுலத்தில் அவதரித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. அவதார புருஷரெனப் படுபவரான கௌதம புத்தரின் உபதேச மொழியாகிய அஹிம்ஸை

என்னும் பதத்தின் மறுபொருள், அதாவது உத்தாம், சமரஸ அன்பு என்பதாகவே விளங்குகின்றது. கடவுளின் மைந்தரெனக் கிருஸ்தவர்கள் பூஜித்து வரும் கிருஸ்து என்பார் நாட்டிய மதமும் அன்பையே ஆதாரமாகக் கொண்டுள்ளதாக மொழிகிறார்கள். இந்திய ஜனங்களின் பொருட்டுப் பாடுபடுவரும், ஜகத்குரு வென்று போற்றப் படுபவரும், ஜன ஸமூகத்தின் முன்னேற்றத்திற்குக் காரண பூதராக இருப்பவருமான மகாத்மா காந்தி, அபேத ஞானமாகிற அன்பை, ஜனங்களுக்குத் தான் நடாத்திக் காட்டுவதனாலும், நூல்களின் வாயிலாகவும், ப்ரசங்கங்களின் மூலமாகவும், பன்முறை வெளியிட்டு வருகிறார்.

சாதாரண மனிதர்களால் அன்பின் எல்லா முறைமைகளும் பிசகாது அனுஷ்டிக்க இயலாதாயினும், ஒவ்வொருவரும் தங்களால் கூடியவரை தம்மைத் திருத்திக் கொள்ள முயலவேண்டும். அன்பு ஒரு மனிதனிடம் எவ்வளவில் விருத்தி யடைகிறதோ அவ்வளவில் ராகத்வேஷங்கள் அவனிடம் குறைவு படுகின்றன. ஒருவரிடத்தில் அதிகமான அபிமானம் வைத்துவிட்டால், பிறகு அவரைப் பாதிப்பதான பெருமையோ சிறுமையோ தனதாய் விடுகிறது; அவர் பொருட்டுப் படும் சிரமம் சிரமமாகத் தோற்றுவதில்லை; செலவிடும் தனமும் இலக்ஷியத்திற் ககப்படுவதில்லை. அவர் தீயகுண முடையவரா யிருப்பினும், அதைச் சிறிதாகப் பாவித்து மறந்து மன்னிப்பதற்கு இடம் தரும். அவர்மேலிருக்கும் ப்ரேமையின் மிகுதியினால் அவரைப்பற்றிய குணதுணங்கள் புலப்படுவதில்லை.

விடனாய்த் திரியும் கணவனையும், அவன் செய்த குரூரச் செயல்களை மறந்து, அன்பு கொண்டொழுகும் உத்தமியான மனைவி மன்னித்து விடுவதில்லையா? தான்தோன்றியாய்ப் பெற்றோர் சொல்லைத் தட்டித்திரியும் புதல்வனுக்கு, அவன் அவமதிப்பதை பொருட் பண்ணாமல், அவனது நன்மையையே வாஞ்சையுள்ள பெற்றோர்கள் மேன்மேலும் தேடுகிறார்கள். தன்னய மற்ற நட்புடைய நண்பர்கள், ஒருவருக்கொருவர் எதுதான் செய்யப் பின்வாங்குவார்கள்? இடைவிடாது மோதும் அலைகளினால் கற்பாறைகளும் எவ்வாறு கரைந்து போகுமோ, அவ்வாறே, தன்னயம் கருதாத சலிப்பற்ற அன்பினால், எவ்வளவு மூர்க்கரையும் தன் வயமாக்கலாம். மனைவியிடம் என்னதான் வெறுப்புற்றவனாயிருந்த போதிலும், அவள் திரும்பத் தன்னிடம் அதிருப்தியையோ, அசிரத்தையையோ காட்டாமல் பூர்ணமான பிரியத்தைச்செலுத்தி வந்தால், அக் கணவனும் அவளிடம் மனமிரங்குவான். பகுத்தறிவற்ற விலங்குகளும் அன்பிற்கு வசமாகின்றன. அப்படி யிருக்கையில், சேதனர்களான மானிடர்கள் அதற்குக் கீழ்ப்படிவதில் என்ன ஆச்சரியம்? மனிதன் ஒவ்வொருவனும் தன் கடமையைச் சரிவரச் செலுத்துவதற்கு, முதன் முதலில் அன்பைக் கைப்பற்ற வேண்டும். ஓரிடத்தில் அதிக விருப்போ அல்லது வெறுப்போ ஏற்பட்டால், அவன் தன் கடமையைத் தப்பாது நடத்தி வர இயலாது. தன் விரோதிக்குக் கஷ்டம் நேர்ந்த காலத்துக் களிக்கவும், ஸுகம் நேர்ந்த போது பாறாமைப் படவும் அது இடம் தரும். அவ்வாறே அவர் விரும்புவோருக்கு நேரும் இடைஞ்சல்கள் தமக்குப் பெரும் துன்பத்தைத் தருவனவாக இருக்கின்றது. பிரியர்களின் இன்பத்தைத் தேடும் பொருட்டு, சிறிது சிறிதாகத் தம் கடமையினின்றும் வழுவ நேருகிறது; ஆகையால், ஒரு முகப்பட்ட அன்பும் உயர்வான தன்று.

ஏற்றத்தாழ்வின்றி அன்பானது ஒருவனிடம் எப்பொழுது சிறிதாயினும் உண்டாகிறதோ, அப்பொழுதே அவனது ஜீவிய காலம் ஸுகமுள்ளதாக மாறும். காமகுரோதங்களில் மூழ்கித் தவித்துக்கொண்டிருந்த மனமானது, சிறிதுசிறிதாகப் பரிபக்குவமடைய, நிம்மதியை நாடும். எல்லா விதமான மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையை விட்ட துறவிகளுக்கும், அபேதஞானம் சிறிது குறைவுபட்டிருக்குமாயின், ஈசன், அவர்கள் குறைவை நீக்குமளவில்தான் அருள் புரிகின்றார். அன்பினுருவான ஈசன், அபேத ஞானமுள்ள அடியார்களிடமே பிரகாசிக்கிறார்.

அவ்விதமான சமரஸ அன்பு பாமர ஜனங்களால் பழக எளிதல்லதாயினும், கற்றுணர்ந்த பெரியோர்களிடம் கேட்டும், அவர்களைப் பார்த்தும், நடக்கப் பயிலவேண்டும். “கற்க கசடறகற்பவை, கற்ற பின் நிற்க அதற்குத் தக” என்றவாறு, படித்தால் மட்டும் போதுமா? அதன்படி ஒழுகி வரவேண்டும். ஒவ்வொருவரும் அவர்கள் கருதும் எண்ணங்கள், சரியானவையா, அல்லனவா என்பதைக் கற்றும், கேட்டும் தெரிந்துகொண்ட பின், நடந்து வரப் பழகவேண்டும். உதட்டி லொன்றும் உள்ளத்தி லொன்றுமாக நடந்தால், அது அவ்வாறு நடப்பவருக்கே இகபரம் இரண்டிற்கும் இன்னல் விளைப்பதுவாம்.

மனோ வாக்குக் காயங்களாகிற மூன்றிலும், முதன் முதலில் எவையும் மனதிலுதித்துப் பின் வாக்கினால் வெளி வருகிறது; பிறகு நடத்திக் காண்பிக்க வேண்டும். எல்லாருக்கும் பிரியமாய் நடக்க வேண்டுமாயின், இன்சொல்லானது இன்றி யமையாத ஸாதனமாகும். முதலில் இன்சொல் பகருவது வெளி வேஷமாகத் தோற்றும். அப்பொழுதே அவன் தன்னிடமிருக்கும் குறைவை யுணர்கிறான். மனச்சாக்ஷி யொன்று அவன் உள்ளத்தில் புகுந்து அவனை வாட்டிவதைத்து எச்சரித்துக் கொண்டே யிருக்கும். ராவணன் சீதையை அபகரிக்க நினைக்கும் காலத்தில், சிலர் ராம

வேஷம் புனைந்து ஸீதையைக் கொண்டு வரலா மென்று யுக்தி கூறினார்கள். அவ்வாறே ராவணன் ராமவேஷம் பூண்டு புறப்படுகையில், "ஸீதையையாவது அபகரிக்கவாவது? பரதார கமனம் பாபமானது" எனக் கூறினனாம். ஆதலால் வேஷத்திற்கும் சிறிது மகிமை யிருக்கிறது. கடுமையான வாக்கியங்களைக் கூறுங்கால் சரீரத்திற்கு நரம்பின் அதிர்ச்சி யுண்டாகிறது. வைத்திய முறைமைப்படி, சரீர சுகத்திற்கும் அதனால் பாதகமேற்படுகிறது. இன் சொற்களைப் பகரும் பொழுது, கேட்பவர் மனமும் குளிர்ந்திருக்கும். எப்பொழுதும் மென்மையான வாக்கியங்களையே கூறுவதென்பதை ஒரு சபதமாகக் கொண்டால், எவ்வளவு பொறுத்தற்கரிய செய்கையை யார் செய்திருப்பினும், அச்சமயம் உள்ளத்தெழும்பும் கோபத்தை வெளிக்கிளம்பும் மிருது வசனங்கள் தணித்து விடும். அன்பின் வெளி வேஷமாகிற இவ் வுரைகளுக்கே இத்தகைய பெருமை வாய்ந்திருக்கிறது.

மனிதருள் யாவருக்குமே இது மிக்க அவசியமா யிருக்க வேண்டியது. அதிலும் பெண்பாலாருக்கு மிருதுவாய்ப் பேசுவதுதான் அவர்கள் தன்மைக்கு ஏற்றது. புருஷர்களுக்கு, அவர் தனத்தினாலும், சரீர வலுவினாலும் புரியும் பல உபகாரங்கள், அவர்களிடமிருக்கும் குற்றம் குறைவுகளை மறைத்து விடுகின்றன. அபலைகளான ஸ்திரீகளுக்கு அவ்வித வன்மையும் ஸ்வதந்திரமும் இல்லாமையினால், பிரியமான வார்த்தைகளைப் பகருவதே அவர்களை மேன்மை யாக்குகின்றது. தூய தன்மை வாய்ந்த தாய் எனப்படும் பெயர் கொண்ட மாதரிடம், இனி உலக முன்னேற்றத்தை வெளிக்கிளப்ப வேண்டிய பாலர்களின் பராமரிப்பு அமைந்திருக்கிறது. சிசுக்களின் பிறவித் தன்மை முதிரும் சிறு பருவம், தாயின் பாதுகாப்பிலே நடைபெறுகிறது. சிறுவர்களை நல் வழித் திருப்பவும், அறிவூட்டவும் ஏற்ற பருவமான அக் காலத்தில், அன்பினுருவான தாய்மார்கள், தாங்கள் நடந்து காண்பிப்பதினாலும், அவர்கள் பிறரிடம் புகலும் நற் சொற்களாலும், பாலர்களின் மனதைப் பக்குவப் படுத்துவார்கள். இம்மைக்கும் மறுமைக்கும் பயனளிப்பதான ராகத்வேஷ மற்ற அன்பு, இல்லாளிடம் அமைந்திருக்குமாயின், அவள் கணவன் பெற்ற பேறு வேறு ஒன்று மில்லை. ஸ்திரீகள் மூலமாகவே புருஷர்களுக்கு அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்றும் பயப்பதாக, பாரத முதலிய புராணங்கள் கூறுகின்றன. பொறுமை, தயை, மறத்தல், மன்னித்தல், அன்பு பாராட்டுதல், ஆகிய இவ்வைந்து குணமும் படைத்த மட நல்லாளா லன்றி, மற்ற ஸ்திரீகளால் இயலாது. இனி உலக உத்தாரணம் செய்யும் சக்தி வாய்ந்த குழந்தைகளை அளிக்க வேண்டிய மாதர்கள் இயற்கையிலில்லாவிடினும், ஆத்ம சக்தியால்

இயன்ற வரை காமக்ரோதங்களை அடக்கிவரக் கற்றுக்கொள்ள வேண்டும். தேச முன்னேற்றத்தைக் கருதியாவது ஸ்திரீகள் ஒத்துழையாமையைப் பழகி வரவேண்டும்? ஜன சங்கையில் பாதி பெண் பாலாராகையால், தங்கள் சகோதரர் சகோதரிகளின் கஷ்ட நிவர்த்தியின் பொருட்டு, சமரஸ அன்பைக் கைப்பற்றி ஒத்துழைத்தல் மிக அவசியமாகும்.

நாடெங்கும் அமைதி பரவவும், தேசம் முன்னேற்றத்தையடையவும், ஈசன், அபலைகளான மாதரின் உள்ளத்தில் புகுந்து, அவர்களை அன்பின் வழி செலுத்தட்டும். தேசமெங்கும் பகைமையும், சச்சரவும் அடங்கி, மகாத்மா காந்தி புகலும் நல் வழியின்படி சென்று, மாசற்ற தூய பதவி வாய்க்கப் பெறட்டும். எங்கும் நிம்மதியும் மனக் களிப்பும் பெருகுமாறு ஈசன் அருள் புரிவாராக!

தானே தானும் தக்கடி தங்கம்

(65-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

5. மகாமூட யாகக் கதை.

ஒரு நாள், பிள்ளையார் கோயில் வாசலின் முன்பு தக்கடி தன் தோழப் பிள்ளைகளுடன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, நானும் போய்ச் சேர்ந்தேன். என்னைக் கண்டவுடன், "அப்பேன்! வா, அப்பேன்! வீட்டிலே ஆய்ச்சி சுகந்தானா?" என்று கேட்டான். இதைக் கேட்டு எல்லோரும் சிரித்தார்கள். நான், முதலில் கொஞ்சம் வெள்கி, அப்பால், "அதிருக்கட்டும், தக்கடி; ஒரு நல்ல கதை சொல்லு" என்றேன்.

தக்கடி—கதையா? சொல்கிறேன் கேள், அப்பேன். கஞ்சனூர் லோபி செட்டியார் என்று கேட்டதுண்டா? அவர் கதையைக் கேள். ஊரெல்லாம் அவர் மானிபம்தான். ஆனால், மனிசன், ஊருக்கும் பேருக்கும் ஏற்றவர்: வாய் சருக்கரை, கை கரணைக் கிழங்கு. அப்பன் திதிக்கு, ஐயருக்குப் பிரயோசனங் கொடுத்தால், கொழியல் அரிசியும், அவிசல் கத்தரிக்காயும், அழுக வாழைப் பழமும்தான் மனசோடு கொடுப்பர். அந்தக் கருணை அண்டிப்

பிழைத்து வந்தார், பஞ்சாங்கம் பப்பு சாத்திரியார். ரெட்டியார் கொடையும் சாத்திரியார் படிப்பும் ஒரே திட்டம்தான்.

நான்.—யதா ராஜா ததாப் பிரஜா!

தக்கடி.—அப்படியே. சாத்திரியார் மகளுக்கு வயசு பத்தாகி விட்டது; கலியாணம் முடிக்கவேணும்; என்ன செய்வார்? ரெட்டியார் வீட்டுத் திண்ணையிலிருந்து ஒருநாள் பேசிக்கொண்டிருக்கையிலே, திடீரென, கையையும் காலையும் உதறிக்கொண்டு, "அடாடா! மகா தோசம்! குடிமோசம்" என்றார் சாத்திரியார்.

ரெட்டி.—என்ன, சாமி! என்ன சங்கதி?

சாத்திரி.—நீங்க பாக்கலை, அந்தப் பூச்சியும் குட்டிகளும் குளியைத் தாண்டினதை? கெட்ட சகுனம்! கெட்ட சகுனம்!

நான்.—நீ, தமிழ்ப் புலவனாச்சே, தக்கடி; பூச்சிக் குட்டிகள் என்று சொல்வதுண்டா?

தக்கடி.—ஆமாம் அப்பேன், நான் தான் தமிழ்ப் புலையன், அந்தப் பஞ்சாங்கப் பார்ப்பானுமா புலையன்? அப்படி யில்லை, அப்பேன், ரெட்டியார் வீட்டுப் பெட்டை நாயின் பேர் 'பூச்சி'.

நான்.—அப்படியா! மன்னித்துக் கொள்; கதை மேல்நடக்கட்டும்.

தக்கடி.—"ஆமாம், நானும்தான் பாத்தேங்க; அதுக்கென்ன சாமி?" என்று கேட்டார் ரெட்டியார்.

சாத்திரி.—அதர்வண வேதத்திலே, சகுன சாகையிலே, மண்டுக ரிஷி சொல்லுகிறார்:—

"சுவானஸ்ச்ச பஞ்சகுஷ்டிஸ்ச்ச தாண்டிதே மறு தாண்டிதே;
ரெட்டிஸ்ய ரெட்டி கொடுகஸ்ய ஆமூலம் விநசியதீ:"

ரெட்டி.—அதென்ன, சாமி அது? அப்படியின்னா?

சாத்திரி.—தாய் நாயும் அஞ்சு குட்டிகளும், இப்போ நாம் பார்த்தோமே இதுபோல, குளியைத் தாண்டினால், ரெட்டியாரும் ரெட்டியார் கொடுக்கும், மூலத்தோடு, அதாவது வேரோடு, நசித்துப்போய் விடுவார்கள் என்பது தாத்பரியம்.

ரெட்டி.—ஆத்தாடி, இதென்ன எளவு, இடி விழுந்தாப் போல! அப்புறம்? தம்பி கூடவா? நான் மட்டு மில்லையா?

சாத்திரி.—ரிஷிதான், "ரெட்டிஸ்ய ரெட்டி கோடுகஸ்ய" என்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லி யிருக்கிறாரே. ஆனால், ஏதாவது பரிகாரமிருக்கும்; நாளைக்கு கிரந்தத்தைப் பார்த்துக்கொண்டு வருகிறேன். ஏதோ ஒரு யாகம் பண்ணினால் தோஷம் விலகிவிடு மென்று வாசித்ததாக ஞாபகமிருக்கிறது. நாளைக் காலமே ஏட்டையே கொண்டு வருகிறேன், பார்ப்போம்.

அப்பேன்! இராத்திரி யெல்லாம் ரெட்டியாருக்கு உறக்கமில்லை; காலமே தலைநோவு. அவர் மகன், கருவாட்டுப் பொரியலை

ஒரு கை பார்த்து விட்டான், வயிற்று நோவு. ரெட்டியாருக்கு நெஞ்சிலே பயம் கொஞ்ச மில்லை. ஆள்மேல் ஆள் விட்டிட்டார், ஐயரை அழைத்துவரச் சொல்லி. வந்தவுடனே, "என்ன, சாமி, பாத்தீகளா, ஏட்டை?" என்று ஆத்திரமாய்க் கேட்டார்,

சாத்திரி.—ஆமாம், பார்த்தேன்; மகாமூட யஜ்ஞம் செய்தால் நிவர்த்தியாகும்; அதுதான் ஒரே பிராயச்சித்தம் என்கிறார் மண்டுகர்.

ரெட்டி.—அந்த எளவு சடங்குக்கு என்ன செல்லும், சாமி?

ரெட்டியாரிடத்திலே பணம் அதிகமாய்க் கேட்டால் கிடையாது; அவரிடம் வெள்ளமா யுள்ள பொருளானால்தான் கிடைக்கும் என்று, சாத்திரியாருக்குத் தெரியும். அதனாலே, "யாகசாலைக்கு ஒரு சின்னப் பந்தல் போடவேணும்; வேறு சாமான்களுக்குப் பத்து ரூபா செல்லும்; தட்சிணை மட்டும் நூறு எருமை மாடு" என்று பதில் சொன்னார். கடைசியிலே, ரெட்டியார் ஒப்புக்கொண்டார்; பனையோலையையும் அகத்திக் கொம்பையுங் கொண்டு ஒரு பந்தலைப்போட்டு, யாகமும் நடத்த ஆரம்பித்தார் சாத்திரியார். ஒரு குழியை வெட்டினார்; காட்டு விறகை முறித்துப் போட்டுத் தீயை மூட்டினார். வாயிலே வந்தபடி முணுமுணுத்துக் கொண்டு, ஓமஞ்செய்யத் தொடங்கினார். அன்றைக்குப் பார்த்து, அவர் துரதிட்டம், காசிவாசிப் பண்டிதர் ஒருத்தர், கஞ்சனூர் வழியே வேதகிரிக்குப் போகிற வழியிலே, புதுப் பந்தலையும் புகையையும் சாத்திரியார் முழக்கத்தையும் பார்த்துவிட்டு, உள்ளே நுழைந்தார். அவரைக் கண்ட கணமே, சாத்திரியார் முகம் சுண்டிப்போச்சு. ரெட்டியாரும் மகனும் ஊராரும் பந்தலுக்கு வெளியே நிற்கிறார்கள்; காசிவாசி கேள்விகள் கேட்கிறார். தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போகட்டுமென்று, சாத்திரியார் ஒரு யுக்தி செய்தார்: பண்டிதரைப் பார்த்து:—

"சுவானஸ்ச்ச பஞ்சகுஷ்டிஸ்ச்ச தாண்டிதே மறு தாண்டிதே:
ரெட்டிஸ்ய ரெட்டி கொடுகஸ்ய ஆமூலம் விநசியதீ:
மகாமூடஸ்ய யஜ்ஞஸ்ய மகிஷீ சத தக்ஷிணை:
தவாப்பியர்த்தம் மமாப்பியர்த்தம் நிர்விக்னம் குரு பண்டிதோ:
ஸ்வா:"

என்று சொல்லிக் கொண்டே, ஓமத்திலே ஆகுதி பண்ணினார். வந்தவருக்குச் சங்கதி புரிந்து விட்டது; "ததாஸ்து!" என்று ஒத்துப் பாடினார். யாகம் முடிந்தது; ரெட்டியார் கொடுத்த நூறு எருமைகளையும் வீட்டுக்கு ஓட்டிக்கொண்டு போய், சந்தையிலும் குடியானவர்களுக்குமாக விற்றுக் காசாக்கிக் கொண்டார், சாத்திரியார். அதுவரை, காசிவாசி, அவர் வீட்டிலேயே சாப்பிட்டுக்கொண்டிருந்தார். அப்புறம், பண்டிதர், தன் பங்குக்குள்ள பாதிப் பணத்

தைக் கேட்டார். இத்தனைநாள் சோறு போட்டதற்குச் சரியாய்ப் போய் விட்டதென்றார் சாத்திரியார். ஆடு பிழைக்கவிட்டு ஆட்டு மயிர் தான் கொடுக்கிறவர் யார்? காசிவாசிக்குக் கோபம் வந்து விட்டது. செட்டியாரிடத்திலே போய் இரகசியமாய்க் குட்டை வெளுத்துப் பற்றவைத்து விட்டார். செட்டியார் கேட்டதற்கு, "இவனுக்கென்ன தெரியும்? மண்டூகப் ப்ரும்மரிஷியைவிடவா இவன் படித்தவன், பெரியவன்? அருமையைத் தவிர வேறில்லை. வேணுமானால், ஊர் அம்பலத்திலே, ஒரு பரீக்ஷை வைத்து, என் சாமர்த்தியத்தையும் பாண்டித்தியத்தையும், அவன் படிப்பையும், நீங்களும் ஊராரும் சோதித்துப் பாருங்கள்; அப்பொழுது அவன் சாயம் துலங்கி விடும்" என்று விருது கூறினார் சாத்திரியார். அப்படியே ஏற்பாடாயிற்று.

(தொடரும்)

வேலை நிறுத்தும் சுதந்தரம்

மில்கள் ரெயில்வே முதலிய வேலைக்கூடங்களிலும், காப்பி டீ ரப்பர் முதலிய பயிர்த்தோட்டங்களிலும்,வேலைசெய்யும் தொழிலாளிகளும் கூலியாட்களும், சம்பளம் போதாது என்றேனும், யஜமானர் தம்மைச் சரியாய் நடத்தவில்லை என்றேனும்,வேறு காரணங்களாலும், ஒன்று சேர்ந்து வேலை செய்வதை நிறுத்தி விடுவதும்; அதனால், அவர்களுக்குப் பல கஷ்டங்களும் பட்டினியும், முதலாளிகளுக்குப் பொருள் நஷ்டமும், பொது ஜனங்களுக்கு அசௌகரியங்களும், பண்டங்களின் கிராக்கியும் ஏற்படுவதும், இக் காலத்தில் அடிக்கடி நேருகின்றன. கடைசிவரை, இந்த வேலை நிறுத்தங்களால், ஏழைக் கூலிகளே மற்றெல்லாரினும் அதிகம் கஷ்ட நஷ்டங்களை அடைகிறார்கள். இவற்றை யெல்லாம் ஆலோசித்து, "வேலை யாட்கள் எந்த நிமித்தமாகவும் வேலை நிறுத்தக்கூடாது; தங்கள் யஜமானரோடு தகராறு விவாதங்கள் ஏற்பட்டால், இருவருக்கும் பொதுவான மத்தியஸ்தர்களை ஏற்படுத்தி, அவர் தீர்மானப்படியே இருவரும் நடக்கவேண்டும்" என்று, துரைத்தனத்தார் சட்டத்தை ஏற்படுத்தி விடவேண்டுமென்பது, சிலர் கொள்கை. மேற் பார்வைக்கு முற்றிலும் நியாயம்போல் தோன்றும் இந்த அபிப்பிராயத்தை நன்கு ஆராய்ந்து பார்த்தால், அதன் கோணலும் கொடுமையும் வெளிப்படும்.

முதலாளிகள் இலாபத்தைக் கருதித் தொழிற்சாலைகளை ஏற்படுத்துகின்றனர்; வேலையாட்களோ, அன்றாடம் வயிறு கழுவும் பொருட்டு, அங்கே போய் வேலை செய்கின்றனர். எவ்வளவு நியாய உணர்ச்சியுள்ள மத்தியஸ்தர்களுங்கூட,தங்கள் பிறப்பு வளர்ப்பு அந்தஸ்துக்கள் காரணமாக, தாம் அறியாமலே, முதலாளிகள் பக்கமே சாய்வர். அப்படிக்கின்றி, தொழிலாளிகளையே மத்தியஸ்தராக்கினாலும் கூட, 'எங்களுக்குக் கட்டிவராது' என்று சொல்லி, முதலாளிகள் வேலைக் கூடங்களை அடைத்து விட்டால், வேலையாளிகள்பாடு திண்டாட்ட மாகிவிடும்; ஆதலால், தொழிலாளிகளுமே, முதலாளிகளுக்கு விரோதமாக, தம்மவர்க்கு அதிகம் அநுகூலஞ் செய்யக் கூசுவர். வேலை யாட்கள் வேலை நிறுத்தும் சுதந்தரம் ஒன்று தான், ஏதோ ஒருவாறு, அரைகுறையாக வேனும், முதலாளிகளை வழிக்கு வரும்படி செய்யும் ஆயுதமாகின்றது. இந்த ஆயுதத்தை வேலையாளர் கையினின்று பிடுங்கிவிடும் எந்தச் சட்டமும், நியாயமாகாது.

ஒரு நிலச்சுவான், தன் குடியானவர்களை, எப்படித் தன் சொற்படி கேட்கச் செய்கிறான்! 'இந்தக் கூலியானால், இன்ன வாரமானால், பயிர் செய்; இல்லாவிட்டால், என் புலங்கள் சும்மா கிடக்கட்டும்' என்கிறான். என்ன செய்வான் குடியானவன்? ஒரு வருஷம் பயிர் வேலை யில்லாவிட்டால், அவனும் அவன் மனைவி மக்களும் பட்டினியால் சாகவேண்டியது தான். நிலச்சுவானுக்கோ, அப்படி யில்லை. கை முதலைக்கொண்டு சுகமாய் வாழ்கிறான்; பயிரிடாத புலங்களுக்குச் சர்க்கார் வரியும் கொடுக்க வேண்டிய தில்லை. வேலை நிறுத்தும் சுதந்தரம், ஒரு வகையில், நிலச்சுவான் பயிர்த்தொழிலை நிறுத்தும் உரிமைக்குச் சமானமாகும்; ஆனால், வேலையாட்களில் மிகப்பலர், சிறிதளவே, சில நாளே, அந்த ஆயுதத்தைப் பிரயோகிக்க முடியும்; நிலச்சுவான்களில் பலர் பாடு, அவ்வளவு கஷ்டமில்லை.

நிலச்சுவான்களுக்கும் வேலையாளருக்கும் அடிப்படையான வித்தியாசம் மற்றொன்றுண்டு. நிலச்சுவான்கள், பிறக்கும்பொழுது தம் புலன்களைத் தம்முடன் கொண்டு வரவில்லை. தகப்பனுக்கு மகனாகப் பிறந்ததனால், நில உரிமையைப் பெறுகிறார்கள்; தம் சரீரப் பாட்டினால் செய்தது, ஒன்று மில்லை. மனிதர்களாகச் செய்துகொண்ட சட்டத்தினால்தான், இயற்கை அமைப்பி லுள்ள நிலம்,ஒரு சிலருக்குமட்டும் சொந்தமாகி விடுகின்றது. அதனால், நிலச்சுவான்கள் பயிர்த்தொழிலை நிறுத்துவது,ஒரு வகையில் பொருந்தாது; அநியாயமாகும். வேலைக்காரரின் வேலை நிறுத்தமோ, அப்படிப்பட்ட தன்று. உடல் வியர்க்க, மூளை வியர்க்க, அவனவனே உழைக்கும் உழைப்பே அது. அதை மறுக்கும் சுதந்தரத்தைப் பிடுங்கி விடுதல், மனிதரைக் கட்டாயமாய் அடிமைப்படுத்துவதே யாகும். எவருமே, இக் காலத்தில், அடிமைத்தனத்தை நியாய மென்று சொல்லத் துணியு[illegible]

202657

தமிழ் மொழி ஆராய்ச்சி

(23-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கொம்மை—இந்தச் சொல்லுக்கு, 1. அகங்கை விரித்துக் கொட்டல்; 2. அழகு; 3. முலை; 4. இளமை; 5. கொம்மட்டி; 6. திரட்சி; 7. வட்டம்; 8. வலி; 9. கொத்தளம், என்று 9 பொருள்களை அகராதிகள் கூறும். 1-வது பொருளில், 'கும்மி' என்று சாதாரணமாயும், 'கொம்மி' என்று சிறுபான்மையும் (இராமலிங்க சுவாமிகள்) வழங்குகிறது. இச் சொல்லை, இலக்கிய வழக்கில், பெருவாய் ஸ்தனத்துக்கு அடை மொழியாகக் காண

லாம். 'அழகு, இளமை, திரட்சி, வட்டம் என்னும் பொருள்களைத் தழுவிய பிரயோகமே அது' என்று, நான் முதலில் நினைத்திருந்தேன். ஒரு நாள், வீட்டிலே களிமண் பிசைந்து அடுப்புப் போட்டுக் கொண்டிருந்த என் தாயார், "அடுப்புப் போட்டு முடிந்து விட்டது; இன்னம் கொம்மை மட்டுந்தான் வைக்கவில்லை" என்றனர். அதைக் கேட்டவுடன் விசாரிக்க, அடுப்பின் மேல், பாத்திரத்தைத் தாங்கும்படி வைக்கும் முக்கட்டிகளைக் 'கொம்மை' என்று சொல்லும் வழக்கம் தெரிய வந்தது; அப்பொழுதுதான், 'கொம்மை' (ஸ்தனத்துக்கு) வெறும் பெயரெச்ச அடைமொழியன்று; மிகப் பொருந்திய, அழகிய உவமானச் சொல்லே என்பது துலங்கிற்று. 'கொம்மை'யின் இந்தப் பொருள் பேச்சு வழக்கிலிருக்க, அகராதிகள் எதுவும் கூறாதது வியப்பாயிருக்கின்றது.

வெள்ளாட்டி—"சுவர்க்கீரையை வழித்துப் போடடி சுணை கெட்ட வெள்ளாட்டி" என்னும் வசனத்தையும், அதை யொட்டிய கதையையும், பலர் கேட்டிருப்பர். 'வெள்ளாட்டி' என்றால், 'ஏவற் பெண்' 'பணிப்பெண்.' அதன் மூலம், "செந்தமிழ்" (XXIII-3) பத்திரிகையில், ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்கள், "கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி" என்ற தலைப்பின் கீழ் எழுதியுள்ள சிறந்த கட்டுரையைப் படிப்போர்க்கு, நன்கு விளங்கும். பண்டைக் காலத்துச் சோழ மன்னர்கள், பிற நாட்டரசர்களை வென்று, அவர்களின் மகளிரைச் சிறைப்பிடித்துக் கொண்டபோது, அவர்களைத் தம் அந்தப்புரத்துப் பணிப்பெண்களாக்கி, அவர்கள் தங்கி வாழுதற்கென்று, தமது தலை நகரிலே ஒரு தனிமையான கட்டடம் கட்டி வைத்திருந்தனராம். இந்தக் கட்டடத்துக்கு வேளம் என்று பெயர். அதனால், இதில் வாழ்ந்து, வேளத்தை ஆளும் மகளிர்கள், 'வேளாட்டி'கள் என்றழைக்கப்பட்டனர். 'வெள்ளாட்டி' என்பது அதன் திரிபேயாம். வேளாண்மைக்கும், வேளாளருக்கும், இச் சொற்களுக்கும் சம்பந்தமில்லை. இந்த வழக்கத்தை, பல பழைய மேற்கோள்களால், ஐயங்காரவர்கள் விளக்கியிருக்கின்றனர்.

தாத்தி—பேச்சு வழக்கில், சில குடும்பங்களில் நடைபெறும் இந்தச் சொல், 'பாட்டி'யைக் குறிக்கும்; 'தாத்தா' (தாதா) என்பதன் பெண்பாலாகும்—'தாதி'க்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இதுபோலவே, 'அண்ணி' 'அப்பி' என்ற சொற்களும் வழங்குகின்றன.

—மா.

(தொடரும்.)

சுப்பிரமணிய பாரதியார் கவிதை

(78-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சிவி. மா. அனந்தநாராயணன்,
சென்னை



விஞர்' என்று யாரைச் சொல்லலாம்? யாப்பிலக்கணம் கற்றுச் செய்யுள் புனையும் வல்லமை அடைந்த எல்லோரையும் 'கவிஞர்' என்றழைத்தால், அது கௌரவப்பட்டமே ஆகிவிடும். படிக்க மாத்திரம் தெரிந்தவனைப் 'பண்டிதன்' என்பதெப்படி? தமிழ்த்தாய் சுவாசமற்றுக் கிடக்கும் தற்காலத்திலோ, இந்தக் கௌரவப் பட்டத்துக்குமே தகுதியானவர் அருகி விட்டனர். இஃது எப்படியாயினும், 'கவிஞர்' என்ற பதத்தை விளக்க வேண்டும். "கருவில் திருவுடையவர் கவிஞர்" என்கிறார் ஒருவர். கருவை உட்புகுந்து பரிசோதிக்க முடியாத வரையில், இந்தப் பாக்கியவான்களை, மற்றவர்களிலிருந்து எந்தக் குணத்தினால் வேறு படுத்தலாம்? உயர்ந்த கருத்துக்களை, ஓசை நிறைந்த, இனிய பாக்களில் அமைப்பது, கவித்திறன். இயற்கை வனப்பு, காதலின் சிறப்பு, வீர சோக ரஸங்கள், மனுஷ சுபாவம்—இவைகளைத் தழுவிய மேலான எண்ணங்களும், மனசுக்கும் செவிக்கும் ஆனந்தத்தைத் தரும் செய்யுள் நடையும், ஒருங்கே அமைந்த நூல்களை இயற்றுபவர், கவிஞர். யமகம், திரிபு முதலிய எதுகை நயங்கள் மாத்திரம் கவித் திறமைக்கு அறிகுறிகளாகா. இது போலவே, சிலேடைகளும் சித்திரக் கவிகளும், பாண்டித்தியத்தைத்தான் நிரூபிக்கும். பெருங் காப்பியங்களில், இந்த விதமான 'சரக்கு' அருமையா யிருக்கும். தவிர, சாதாரணப் பேச்சில் வழங்கும் சொற்களுக்கு அதிக வன்மை யுண்டென்பதும், "கொச்சை"யாயில்லாமல், ஆனால் எளிய நடையில், எழுதுவதே சிறப்பென்பதும், கவிச் சக்கிரவர்த்திகள் நன்குணர்ந்திருந்தனர். கம்பர், காவியத்திற்குரிய காம்பீரியம் சிதைவுறாமல், பல விடங்களில் எளிய நடையைக் கையாண்டிருக்கிறார். கும்பகருணன் வதைப் படத்திலே, தன் செஞ்சோற்றுக் கடனைக் கழிக்கும் கும்பகருணன் காமப்

பித்தனாகிய இராவணனுக்குக் கூறும் புத்திமதிகளும், அவன் போருக்கு விடைபெற்றுச் செல்லும் முடிவுரைகளும், கவிதையின் மெய்ப்பண்பு செறிந்து திகழ்கின்றன. இதன் காரணம், கடின பதங்கள் இல்லாமையே. சமையற்காரன் வேடம் பூண்ட நளன், தன்னை இன்னானென்று அறியாத தன் குழந்தைகளைக் காணும் சந்தர்ப்பத்தை, புகழேந்திப் புலவர், எழுதப் படிக்கத் தெரியாதவனும் கேட்டால் மனம் உருகும்படி, நளவெண்பாவில் வருணித்திருக்கிறார். பின் வரும் வெண்பாக்களைப் படித்துப் பாருங்கள்:—

(நளன் சொல்வது)

மக்களை முன் காணா, மனம் நடுங்கா, வெய்துயிரா,
புக்குளடுத்து வீரப்புயத்து அணையா,—" மக்காள், நீர்
என்மக்கள் போல்கின்றீர்! யார்மக்கள்?" என்று உரைத்தான்,
வன்மக் களியானை மன்.

(குழந்தைகள் சொல்வது).

" மன்னன், நிடதத்தார் வாழ் வேந்தன், மக்கள்யாம்.
அன்னை தனைக் கான்விட்டு அவன்ஏக,—இந்நகர்க்கே
வாழ்கின்றோம்; எங்கள் வளநாடு, மற்றொருவன்
ஆள்கின்றான் " என்றார் அழுது.

(நளன் சொல்வது.)

" உங்கள் அரசு ஒருவன் ஆள, நீர் ஓடிப்போந்து
இங்கண் உறைதல் இழுக்கன்றோ?—செங்கை
வளவரசே!" என்று உரைத்தான், மாதவத்தால் பெற்ற
இளவரசை நோக்கி எடுத்து.

(குழந்தைகள் சொல்வது.)

" நெஞ்சால்,இம் மாற்றம் நினைந்துஉரைக்க, நீஅல்லாது
அஞ்சாரோ, மன்னர், அடுமடையா!—எஞ்சாது,
தீமையே கொண்ட சிறுதொழிலாய்! எம்கோமான்
வாய்மையே கண்டாய் வலி."

(நளன் சொல்வது.)

" மன்னர் பெருமை மடையர் அறிவரோ!
உன்னை அறியாது உரைசெய்த—என்னை
முனிந்து அருளல்" என்று முடிசாய்த்து நின்றான்,
கனிந்துஉருகி நீர்வாரக் கண்."

"புகழ் ஏந்தி" என்னும் பெயர் இவர்க்கு ஏற்றதேயாம்!

உவமைகளை உபயோகிப்பதிலும், இயற்கைக்குப் பொருத்தமே சிறந்த குணம். ஆகாயத்தைத் தாமரை இலைக்கும், நக்ஷத்திரங்களைத் தெளித்த ஜலத் துளிகளுக்கும், சந்திரனை இலையின் மீது வைத்த பழஞ் சோற்றுக்கும், சந்திரனிலுள்ள களங்கத்தைச் சோற்றின்மேல் ஊற்றிய பழங்குழம்புக்கும் ஒப்பிட்டவர், சாதுர்ய முடையவர்தான்; ஆனால், இந்த வர்க்கத்தைச் சேர்ந்த

நுட்பமான உவமைகளை, தனிப்பாடல்களில் அன்றி, ஒரு காவியத்தில் கையாண்டால், ஹாஸ்ய விஷயமாய் முடியும். உவமைப் பொருத்தத்திற்கும் அழகிற்கும், கம்பரை மேம்பட்டவர் ஒருவருமில்லை. அசோக வனத்திலே சிறைப்பட்ட சீதை, ஏக்கத்தினாலும் துன்பத்தினாலும் உடல் மெலிந்திருந்த கோலத்தை, அவர், சுந்தர காண்டத்தில் வருணிக்கிறார்:—

"வெயிலிடைத்தந்த விளக்கென்ன ஒளியிலா மெய்யாள்"

"தேவு தெண்கடல் அமிழ்துகொண்டு, அனங்கவேள் செய்த
ஓவியம் புகையுண்டதே ஒக்கின்ற உருவாள்."

இந்த உவமானங்களின் பொருத்தமும் நயமும் சிறப்பும் அளவற்ற சந்தோஷத்தையும் ஆச்சரியத்தையும் தருகின்றன.

ஆகையால், முக்கியமான கவிதா லக்ஷணங்கள் ஆவன, உயர்ந்த கருத்துக்கள்; ஓசை நிறைந்த, சீர் சிதையாத, எளிய நடை; வழக்குச் சொற்களின் மலிவு; உவமை அழகு. பாரதியார் கவிதையில், இந்த லக்ஷணங்கள் எல்லாம் பொருந்தி யிருத்தலைக் கவனிப்போம்.

உவமைகளைக் கையாளுவதில், பாரதியாரைப் போல் சிறந்தவர், தற்காலக் கவிஞர்களில் எவருமில்லை, யென்று தடையின்றிச் சொல்லலாம். பாரதியாரின் கற்பனாசக்தி சாதாரணமானதன்று. இதனால், சிறிய, தனிப்பட்ட உவமைகளன்றி, நீடித்த உருவக நூல்களை இயற்றும் திறமையும், பாரதியாருக் குண்டு. இப்படிப் பட்ட வசன நூல், "ஞானரதம்;" செய்யுள் நூல், "குயிற்பாட்டு." பிற் கூறியதின் வெளிப் பொருள், அழகான உருக்கமான ஒரு குயிலைப் பற்றிய கதை. இந்தக் கதையை, பாரதியார் வேண்டுகோளின்படி, "வேதாந்தமாக விரித்துரைக்க" வல்லவர் ஒருவரிருந்தால், அவர் மஹா மேதாவியாவர்.

"கண்ணன் பாட்டு"ம், பாரதியாரின் உருவக வன்மையை நன்கு விளக்கும். கண்ணபிரானைத் தாயாகப் பாவித்துப் பாடிய, "கண்ணன்—என் தாய்" என்ற சிந்து முழுதும், ஒரு நிகரற்ற உருவகத் தொடர்ச்சியாம்:—

" உண்ண உண்ணத் தெவிட்டாதே—அம்மை
உயிர் எனும் முலையினில் உணர்வுஎனும் பால்
வண்ணமுற வைத்தெனக்கே—என்றன்
வாயினிற்கொண் டூட்டும் ஓர் வண்மை யுடையாள்.
கண்ணன் எனும் பெயருடையாள்—அவள்
கட்டி நிறை வான்எனும் தன் கையில் அணைத்தே,
மண்ணெனும் தன் மடியில் வைத்தே—பல
மாயமுறும் கதை சொல்லி மனம் களிப்பாள்.
" இன்பம் எனச் சில கதைகள்—எனக்கு

ஏற்றம் என்றும் வெற்றி என்றும் சில கதைகள்;
துன்பம் எனச் சில கதைகள்--கெட்ட
தோல்வி என்றும் வீழ்ச்சி என்றும் சிலகதைகள்;
என்பருவம், என்தன் விருப்பம்,—எனும்
இவற்றினுக் கிணங்க, என் உளம் அறிந்தே
அன்பொடவள் சொல்லி வருவாள்--அதில
அற்புத முண்டாய்ப் பரவசம் அடைவேன்.”

பாரதியாரின் சிறிய உவமைகளும் கவனிக்கத் தக்கவை. மகா யுத்தத்தில், எல்லா நாடுகளிலும் சின்னதும், பலங்குறைந்ததுமான பெல்ஜியம், தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதின் பொருட்டு, படைச்செருக்குற்ற ஜெர்மனியைத் தன்னந்தனியே முதலில் எதிர்த்தது, பாரதியாருக்கு அதிக உற்சாகத்தை அளித்தது. “பெல்ஜியம் நாட்டிற்கு வாழ்த்து” என்ற கவியில், அவர், மிக அழகான உவமை யொன்றை அமைத்திருக்கிறார்.

“ அறத்தினால் வீழ்ந்து விட்டாய், அன்னியன் வலியனாகி
மறத்தினால் வந்துசெய்த வன்மையைப் பொறுத்தல் செய்யாய்,
முறத்தினால் புலியைக் காக்கும் மொய்வரைக் குறப்பெண் போல
திறத்தினால் எளியை யாகிச் செய்கையால் உயர்ந்து நின்றாய்.”

வேறு காதற்பாட்டொன்றில், காதலன் காதலியை நோக்கி,

“ வட்டங்க ளிட்டும் குளம் அகலாத
மணிப் பெரும் தெப்பத்தைப் போல—நினை
விட்டு விட்டுப்பல லீலைகள் செய்தும், நின்
மேனி தனை விடலின்றி ”——என்கிறான்.

பின் வரும் உவமையும் பல விதத்தில் சிறந்தது—

“ ஆங்கொரு கல்லை வாயிலிற் படி என்று
அமைத்தனன் சிற்பி; மற்றொன்றை
ஓங்கிய பெருமைக் கடவுளின் வடிவென்று
உயர்த்தினான்; உலகினோர் தாய் நீ!
யாங்கணே எவரை எங்கனம் சமைத்தற்கு
எண்ணமோ, அங்கனம் சமைப்பாய்.”

பாரதியாரின் எளிய நடையைப்பற்றிப் பேச வேண்டியது ஒன்றுமில்லை? ஏனெனில், வேறெந்த நடையும் அவர் உபயோகிக்கவில்லை. “செந்தமிழ் நாடு,” “பாப்பாப் பாட்டு,” “முரசு” “சுதந்திரப் பள்ளு” முதலிய செய்யுள்களில், சாதாரண வழக்கில் காணப்படாத வார்த்தைகளே யில்லை. அப்படி யிருந்தும், ஓசையினிமையும் கருத்துயர்வும் பொருந்தி யிருப்பதுதான் கவித்திறன்.

வழக்குச் சொற்களைப் பாரதியார் வெகு பொருத்தமாக உபயோகித்தார். ஆங்கிலத்திலே “idiomatic” என்ற சொல்லால் குறிப்பிடும் குணம், பாரதியார் கவிதையில் முக்கியமானது. இவ்

விதச் சொல் வன்மையைச் சில உதாரணங்களால் காட்டுவோம். [தனிப் பதங்களை யன்றித் தொடர்களை உபயோகித்திருத்தலும் காண்க].

“ கோளுக்கு மிகவும் சமர்த்தன்—பொய்மைக்
சூத்திரம் பழி கூசாச் சழக்கன்
ஆளுக் கிசைந்தபடி பேசித்—தெருவில்
அத்தனை பெண்களையும் ஆகாத டிப்பான்.”
“ பட்டப்பகலிலே பாவிமகள் செய்தியைப்பார்!
கண்ணாலங்கூட இன்னுங்கட்டி முடியவில்லை;
மண்ணாக்கி விட்டாள்! என் மானம் தொலைத்துவிட்டாள்!
‘நிச்சய தாம்பூலம்’ நிலையா நடந்திருக்கப்
பிச்சைக் கிறுக்கிசெய்த பேதகத்தைப் பார்த்தாயோ!”
“ உள வென்றும் நட்பென்றும் கதைக்கிறான் ”...
“ பானையிலே தேளிருந்து பல்லால் கடித்த தென்பார்.
வீட்டிலே பெண்டாட்டிமேல் பூதம் வந்ததென்பார்
பாட்டியார் செத்துவிட்ட பன்னிரண்டாம் நாளென்பார்.”
“ சிரித்துஉரை கூறியும் செள்ளென விழுந்தும்.”
“ வெறும் வாய் மெல்லும் கிழவிக்கு, அஃதோர்
அவலாய் மூண்டது.”
“ யந்திர சாலையென்பர், எங்கள் துணிக ளென்பர்,
மந்திரத்தாலே யெங்கும்--கிளியே—மாங்கனி வீழ்வதுண்டோ.”

தாமரைக் சொற்றொடர்களைப் புனைவதிலும், சுருக்கமாகவும் சாதுர்யமாகவும் வருணிப்பதிலும் பாரதியார் தேர்ச்சியுள்ளவர். “ சிற்றடிச் சீனம்” “ தோள் நவத்த துருக்கம் ” முதலிய சொற்றொடர்களையும்,

“குரங்கன் ஓடியிருப் பதோர் உண்மையையும் மாடனிடம்
யாரோ உரைத்துவிட்டார். ஈரிரண்டு பாய்ச்சலிலே
நீரோடுமேனி நெருப் போடுங் கண்ணுடனே
மாடனங்கு வந்து நின்றான்.”
“ கவிதைக் கனிபிழிந்த
சாற்றினிலே பண், கூத்தெனும் இவற்றின் சாரமெல்லாம்
ஏற்றி அதனோடே இன்னமுதைத் தான்கலந்து,
காதல் வெயிலிலே காயவைத்த கட்டியினால்
மாதவளின் மேனிவகுத்தான் பிரமன் ” என்று வரும் வாக்கியங்களையும் நோக்குக.

(தொடரும்)

பத்மாவதி சரித்திரம்
முதல் 2 பாகங்களும்—படங்களுடன்-
ஐந்தாம் பதிப்பு ரூ. 2—0—0
பஞ்சாமிர்தம் பத்திரிகை ஆபீசு,
மயிலாப்பூர், சென்னை.

கம்ப ராமாயண இன்கவித் திரட்டு

(117-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G. B. V. C., வெள்ளக்கால்

[கரும்பாலையிற் கிடையாத கருப்பஞ்சாறும் தேன் கூட்டிலும் மலரிலும் இல்லாத தேனும் சுள்விற்பார் மனையில் வாங்கலாகாத கள்ளும் கடலிற் கடைந்தெடுக்க முடியாத அமிழ்தமும் ஆன இனிமை மிகுந்த மாதர் வாயூறலை மாந்தி மயங்கி யிருக்கும் அரக்கரையும், ஒரு தாமரை மலர்மீது மற்றொரு தாமரை மலரை வைத்தாற்போலக் கணவரைப் பிரிந்த சோகத்தாற் சோர்ந்து சாயும் முகத்தைத் தாங்கிய கையராகிய இராக்கதத் தையலாரையும், பிரிவாற்றாமையால் சோகித்து, உடல் தானே சாய்ந்தாற்போலப், படுக்கையிற் சாய்ந்தவராய்த் தம் கணவர் பாற் சென்ற தூதியர் வரும் வழிமேல் விழி வைத்து, பிராணன் போனதோவென, அடங்கிக் கிடப்பார், அத் தூதியர் புன்முறுவலோடு வரக்கண்டு, இனிக் கணவர் வந்து விடுவாரென்ற களிப்பினால், அடங்கிய உயிர் திரும்புதற்குத் துடிக்கின்ற அரக்கியரையும் அநுமான் கண்டு சென்றான்.]

23. பள்ளியில் மைந்தரோடும் ஊடிய பண்பு நீங்கி,
ஒள்ளிய கலவிப் பூசல் உடற்றுதற் குருத்த நெஞ்சர்,
மெள்ளவே இமையை நீக்கி, அஞ்சன இழுது வேய்ந்த
கள்ளவாள் நெடுங்கண் என்னும் வாள்உறை கழிக்கின்றாரை.

இ-ள். ஒரு சயனத்தில் (தம்முடனிருந்த) கணவருடன் ஊடல் (யுத்தஞ் செய்து செயமடைந்து அவ் யுத்தத்தால் நேர்ந்த சிரமத்தைச் சாந்தி செய்யத் தூங்குவார் போலக் கண் மூடியிருந்தவர்தள் அவ் ஊடற் போர்) செய்த (குரோத) குணம் மாறிக் கூடற் போர் செய்யத் தோன்றிய நினைவினராகி (அப் போர்க்கு ஆயத்தமாகும் அறிகுறியாக) இமை (யாகிய உறை) யை நீக்கி மையாகிய நெய் பூசிய கண்ணாகிய வாளை அவ் உறையினின்று கழற்றுவா (ர்போல மூடியிருந்த கண்ணை மெல்லத் திறக்கின்ற அரக்கி மா) ரையும் (அநுமான் கண்டு சென்றான்.)

பள்ளி—படுக்கை. மைந்தர்—கணவர். (பரிபாடல்) பண்பு—குணம். (ஒண்மை—அழகு) ஒள்ளிய—அழகான. பூசல்—போர். உடற்றுதல்—உக்கிரமாய் நடத்துதல் (சங்க அகராதி) உருத்தல்—தோன்றுதல் (பதிற்றுப் பத்து] நெஞ்சு நினைவைக் குறித்தது. (சிந்தாமணி 458-ம் பாட்டில் 'நெஞ்சின் ஒத்து' என்பதன் உரையைப் பார்க்க.)

"கொழுநர் அறியாதபடி மெல்லப்பார்த்து அவரியல்பை அறிய முயன்றமைபற்றிக், 'கள்ளம்' என்ற அடைமொழி கண்ணுக்குக் கொடுக்கப் பட்டது."

[கணவர் வரவை எதிர் பார்த்து வாசலில் நின்ற தம்பால் அக் கணவர் வந்து நெருங்க, அவரோடு ஊடி, ஊடிய உணர்வும் உள்ள முதலிய அந்தக் கரணங்களும் வீட்டுக்கு வெளியே அக் கணவரோடு தங்கவிட்டு, உயிரைமட்டுங் கொண்டு உள்ளே சென்று, ஒருவாறு கதவை அடைக்கமட்டும் சத்தியுடையாராய்த் தாளிடச் சத்தியற்ற அரக்க மாதரையும்,—முரசு முழங்க முனிவர் மங்கள வர்ழ்த்து மொழிய அமரர் ஆசீர்வதிக்கத் தேவர் தேவியரும் முனிவர் மனைவியரும் பல்லாண்டு பாடக்கல்யாணஞ் செய்யும் இராக்கத தம்பதிகளையும்—எங்கெங்கும் இனிதிருக்கும் இராக்கத மகளிரே யல்லாமல் இடையிடையே காணப்படும் இயக்க மாதர் நாக கன்னியர் வித்தியாதர மின்னார் முதலிய பெண்களெல்லாரையும், அவருள் எவளாயினும் சீதையாயிருப்பாளோ வென்று தெரியும் நோக்கத்துடன், நன்றாக நோக்கிக்கொண்டு சென்ற அநுமான் கும்பகருணனைக் கண்டான்.

அப்போது மலைபோலப் பிரமாண்ட காத்திரமுடையனாய், அலை கடலிலே திருமால் பள்ளிகொள்ளும் ஆதிசேடனே போலவும், அந்தக் கடலே போலவும், உலகத் திருளெல்லாம் ஒருங்கே திரண்டு ஓரிடத்தே ஒதுங்கி உற்றாற் போலவும், பாவமே உருவெடுத்தாற் போலவும், தண் கடலிற் றோய்ந்து குளிர்ச்சியும் நறுமலர்ச் சோலையூடு தவழ்ந்து மணமுங்கொண்டு தென்றல் வீசத் தேவ மாதர் கால் பிடிக்க, ஊழிக் காற்றுப்போல மூச்சு இயங்க, நிலாவை இரு கூறுபடுத்தி இருகடைவாயாலும் உண்ண வைத்த தருணத்தில் விளங்கும் அந் நிலாப் பகுதிகள் போல வக்கிர தந்தங்கள் விளங்க, மந்திரத்தால் தடையுண்டு எவரையும் கொல்லாது தம்பித்திருக்கும் சர்ப்பம் போலவும், எல்லா உலகையும் எளிதே பொங்கி அழிக்கக் கூடிய கடல் கடவுள் ஆணைக்குக் கட்டுப்பட்டு நிலை கடவாது நிற்றல் போலவும், சர்வ லோகத்தாரையும் இலகுவாகக் கொல்லவல்ல கும்பகருணன் அசையாது நெடிய பெரிய தூக்கந் தூங்கிக்கொண் டிருந்தான்.

அநுமான் அவனை இராவணனோவென்று ஐயுற்றுப் பொங்கியெழுந்த கோப வடவா முகாக்கினியைப் பத்துத்தலை யிருபது கை யில்லாமை கண்டு இராவணன் அல்லனென்று தெளிந்த அறிவுக் கடல் நீரால் அவித்தான்.

அவன் அப்பாற் செல்வானாகி எல்லா மாளிகைகளையும் ஆடற் சாலைகளையும் பாடல் மேடைகளையும் பள்ளிக்கூடங்களையும் முதலாக உடைய எல்லா இடங்களையும் பார்த்துச் சென்றான்.

அவ்வாறு செல்லும்போது, கற்பகச் சோலை மத்தியில் விளங்கிய ஒரு பவள மாளிகையை அடைந்தான். அங்கே, இயல்பாக வெண்ணிறம் படைத்த தரும தேவதை தன் சுபாவ வருணத்தோடு இராக்கதர் மத்தியில் வெளிப்படையாகத் தங்குதல் சாத்தியமன்றென்று அவரை வஞ்சித்துக் கரிய அரக்கனாகி வாழ்கின்றதை ஒத்த விபீடணனைக் கண்டான்.

அப்பால் மற்றொரு மாளிகையுள் பிரவேசித்தான். அங்கே பன்னிரண்டு கைகளும் ஆறு முகங்களும் உள்ள குமாரக்கடவுள் ஐந்து முகங்களையும் பத்துக் கைகளையும் மறைத்து வந்தானோ வென்றெண்ணும்படி அழகும் வீரமும் அமைந்த இந்திரசித்தைக் கண்டான். கண்டவன், 'இவனை வெல்ல இலக்குமணனும் இராமனும் நெடுநாள் அமர் செய்ய நேரும், இவனைப் போர்த்துணையாகப் பெற்ற இராவணன் மூன்றுலகங்களையும் வென்றது அரிய செயலன்று என்று கருதி, அவனைவிட்டு நீங்கி, ஏனைய இராவண குமாரர் இராக்கத சேனாவீரர் மந்திரிமார் முதலியோர் மாளிகைகளை யெல்லாம் பார்த்துச் சீதையைத் தேடிச் சென்றான்.

அப்போது, அர்த்தராத்திரியாகக், குடியர் கள்ளுண்ணோ தோய்ந்தனர்; கம்மாளர் முதலியோர் தத்தம் கைத் தொழில் விட்டொழிந்தனர்; ஆடல் பாடல்கள் அடங்கின; விட்ட நெய் வற்றி விளக்குகள் அவிந்தன; தூங்காத யோகியரும் பித்தரும் தூங்கினர்; என்றால், ஏனையோரெல்லோரும் உறங்கினரென்று கூறுவானேன்?

... மாளிகை சந்திரனாக, அச் சந்திரனைச் சூழ்ந்த தாரகைகள் போல விளங்கிய அவனுடைய மனைவிமார் மாளிகைகளை அநுமான் அணுகினான். அவர் பல சாதி மாதரினின்றும் தெரிந்தெடுத்து மணந்து கொள்ளப் பெற்றவர்.

அவருள்ளே, இயக்க மனைவியர் சிலர், இராவணன் மீது பதித்த மனத்தினராய்க், காதல் மீதூர மூச்சடங்கி, இமைப் பொழிந்து, அசைவின்றிச் சித்திரங்களை ஒத்திருந்தனர்.

வேறு சிலர், மன்மதன் எதிர்த்து வருவானென்று அவனைக் காண அஞ்சியோ, தூங்கினால் கனவில் இராவணனைத் தழுவலாமென்று கருதியோ, கண் மூடி உண்மையில் தூங்காமல் தோற்றத்தில் தூங்குகின்றார்கள்.

மற்றும் சிலர், இராவணனைச் சித்திரத்திலாயினும் காணக் கருதி அவன் வடிவைச் சித்திரிக்க முயன்று, அவன் அழகு சித்திரத்தில் அமையாதென்று தியங்குகின்றார்கள்.

இன்னுஞ் சிலர், தாம் தாம் வளர்க்கும் கிளியை நோக்கி 'என்னுயிரை (இராவணனை) அழைத்து வருகின்றாயில்லை; யான்

படுந் துன்பத்தைப் போய்ச் சொல்லுகின்றாயில்லை; எனக்கான தொன்றும் செய்வாயல்லை' என்று குறை கூறுகின்றார்கள்.

இன்னும் சிலர், மேருமலையை வில்லாக வளைத்த மகா தேவனோடு அவனிருந்த கயிலாய மலையைத் தூக்கியெடுத்த தோள்களிற் பூசிய சந்தனம் அவனைக் கூடியிருந்தபோது தம் தனங்களில் தோயப்பெற்று, அவன் பிரிந்த நாள் முதல் குளியாமையால் அழியாமல் விளங்குதலை நோக்கிப் பிரிவாற்றாமைத் துன்பத்தை ஒரு வாற்றால் மறந்து குதுகலிக்கின்றார்கள்.

இவ்வாறாகவுள்ள, இராவணனது இயக்க மனைவியர் மாளிகைகளைக் கடந்து அவனது குலமனைவியராகிய இராக்கத மாதர் வாழும் மாளிகைகளை அநுமான் அடைந்தான்.

24. எரிசுடர் மணியின் செங்கேழ் இளவெயில் இடைவிடாது
விரிஇருள் பருகி நாளும் விளக்கின்றி விளங்கும் மாடத்
தரிவையர் குழூவும் நீங்க, ஆசையும் தாமு மேயாய்
ஒரு சிறை யிருந்து போன உள்ளத்தோ டூடு வாரும்.

இ-ள். (சுவர்களிற் பதிக்கப்பட்டிருக்கிற) மாணிக்கங்களின் சிவந்த நிறத்தையுடைய இளஞ்சூரிய (ஒளி போன்ற) ஒளி இருளை விழுங்கி (ப் போக்கி விடுதலால்) எந் நாளும் விளக்க (வேண்டிய அவசியம்) இல்லாமல் தாமே (சுயம்பிரகாசமாய்) விளங்கா நின்ற மாளிகைகளிலே (தோழியர் பணிப் பெண்களாகிய) மகளிர் கூட்டமும் (மற்றவர் கூட்டங்கள் நீங்கிய பின் தூங்குதற்கு) நீங்க, (இராவணன் மேல் வைத்த தணியாத) காதலும் தாமுமே (தனி)யாகி (ஒதுங்கிய) ஒரு புறத்தில் (தூங்காமல்) இருந்து (அவன் பாற்) போன நெஞ்சோடு ("பரிந்து அவர் நல்கார் என்று ஏங்கிப் பிரிந்தவர்-பின் செல்வாய் பேதை என் நெஞ்சு!" என்றும் "அவர் நெஞ்சு அவர்க்கு ஆதல் கண்டும் எவன் நெஞ்சே!—நீ எமக்கு ஆகாதது?" என்றும்) ஊடுவாரையும் (அநுமான் கண்டு சென்றான்.)

எரிசுடர்-நெருப்பு (சங்க அகராதி). எரி சுடர் மணி-நெருப்புப் போன்ற (மிக்க சிவப்பும் அதி பிரகாசமும் உடைய) மாணிக்கம்; சுவாலிக்கின்ற ஒளியையுடைய மாணிக்கம் எனலுமாம். கேழ்-நிறம். பருகல்-விழுங்குதல் (பத்துப்பாட்டு). சிறை-இடம்; பக்கம்.

கல்யாணஞ் செய்யக்கூடாத தவப்பெண்ணென்று தான் கருதி யிருந்த சகுந்தலை தவக்கோலம் பூண்டிருந்தாலும் அக் கோலம் யாத்திரைக் காவி போலத் தற்காலக் கோலமாய் நிலையான தன்றென்றும் அவள் மணஞ் செய்தற்குரியளென்றும் அவள் காதலன் துஷ்யந்தனுக்குத் தெரிய வந்தபோது, அவன் தன்னெஞ்சை நோக்கி 'நெஞ்சே! நீ தீண்டக் கூடாத தீக்கங்

கென்று பயந்தது மகிழ் கூர்ந்து மார்புற அணியும் மாணிக்க மானது' என்றானென்ற கருத்துப்படக் காளி தாசர் கூறியதை, இங்கே கம்பர் மாணிக்கத்தை நெருப்புப் போன்றதென்றது, நினைவு கூரச் செய்கின்றது.

அவ் அரக்க மனைவியர், கரிய மலை போலக் கறுத்த பருத்த உடலும் அம் மலை மீது எரியும் தீப்போலச் சிவந்த கூந்தலும் அத் தீமேற் புகைபோல அக் கூந்தல்மேல் அதன் இயற்கை மணத்தை நாடிச் சுழலும் வண்டும் விளங்க வீற்றிருந்தார்கள்.

கரியவானம் தேகமாகச், செவ்வானம் சிவந்த கூந்தலாகப், பிறைச் சந்திரன் நெற்றியாக, நட்சத்திர சாலம் விரக வெம்மை தணிய அணிந்த முத்து மாலையாகக் கொடி மின்னல் இடையாக அவ் அரக்கியர் அந்திக்காலத்து ஆகாயத்தை ஒத்து விளங்கினார்கள்.

இராவணன் சீதை காதலால் தம்மைப் பிரிந்த விரக வேதனையால் தூக்கம் வரப்பெறாத அவ் அரக்க மனைவியருள்ளே,—சிலர் தம் விரகத்தை மறப்பிக்கும் பொழுது போக்காக, அவன் வித்யாதர வேந்தர் நாகராசர் முதலியோரை வென்று பறித்துத் தமக்குக் கொடுத்திருந்த கிரீடங்கள் முதலிய ஆபரணங்களைப் பந்தயமாக வைத்துச் சூதாடுகின்றார்கள்; வேறு சிலர் சித்த மாதர் பாட, நாக கன்னியர் முழவந்தட்டத் தேவ மாதரை நர்த்தனம் செய்யச் செய்து பார்த்திருக்கின்றார்கள்; பின்னும் சிலர் வீணை இசையும் தம் குரல் ஓசையும் வெவ்வேறு பிரித்தறியாதவாறு, வேற்றுமையின்றி ஒற்றுமையாக, இராவணனது புகழைப் பாடுகின்றார்கள்; இன்னும் சிலர் கள்ளுண்டு துகில் சோர்தல் உணராது கண்கள் சுழலக் குண்டலங்கள் தாண்டவம் புரியத் தோழியரோடு கை கோத்துக் குரவைக் கூத்தாடுகின்றார்கள்.

இவ்வாறான இராவணன் குல மனைவியர் வீதியைக் கடந்து வித்தியாதர மனைவியர் வீதியை அநுமான் அடைந்தான்.

அவ் வித்தியாதர மனைவியருள் சிலர் நடு நிசிவரையும் நித்திரை வாராதிருந்தவர்க்கு, நித்திரை வரும்படி பிரதிதினமும் வழக்கமாகப் பாடும் பாடகர் வந்து இனிதாகப் பாட, அவ் இனிய பாடல் அவர் செவியுள்ளே பாம்புபோல நுழைந்து விரக வேதனையை மிகுவிக்க வருந்துகின்றார்கள். வேறு சிலர், 'தேவ கண்டகனான இராவணன் மீது உண்மையான அன்புடையார் இவர்' என்று அத்தேவரினத்தைச் சேர்ந்தவனாகிய, இயல்பாகக் குளிர்ச்சியுடைய, சந்திரன் கோபத்தீக் கொளுந்திச் சுடுதல்போலச் சந்திர கிரணங்கள் தனங்களில் விழுந்து வெதுப்பத் துடிக்கின்றார்கள்.

அந்த வித்தியாதர மின்னார் வீதியை விட்டு நீங்கி இராவணன் அரண்மனையைச் சமீபித்த அநுமான் அவன் பட்ட மகிஷி மந்தோதரி மாளிகையைக் கண்டான்.

(தொடரும்)

சைவ சமய வரலாறு

ரேவ். F. கிங்ஸ்பேரி, B.A., சென்னை.

I. சிவனை வழி படுவோர் சைவர். சைவரது சமயம் சைவம். 'சிவன்' என்னும் சொல் இருக்கு வேதத்தில் முதலிற் காணப்படுகிறது. ஆயினும் உருத்திரன் என்னும் தெய்வத்துக்கு அடை மொழியாக, உருத்திர—சிவன் என்று வருகிறதேயன்றித் தனியே வருவதில்லை. சிவன் என்னுஞ் சொல் வடமொழியிலே மங்கலமுடையான் என்று பொருள்படும். [சிவன் என்றது தனித் தமிழ்ச் சொல் லென்றும், அதற்குச் செந்நிறத்தன் என்பது பொருள் என்றும் சொல்வாரும் உளர்.]

உருத்திர சிவன் என்பான் இருக்கு வேதத்தில் வணங்கப்பட்ட பல தேவர்களில் ஒருவன். உருத்திரன் புயற்கடவுள். மருத்துக்களின் தந்தை. மருத்துக்களும் புயற் கடவுள்களே. மருத்து என்னும் சொல்லடியாற் பிறந்தது மாருதம். மாருதம்—காற்று.

உருத்திரன் வடிவழகன்; செம்மேனியன்; தன் ஆயுதமாகிய இடியேற்றைத் துஷ்ட நிக்கிரகத்துக்காக உபயோகிப்பவன். சாதுக்களுக்கு நன்மை செய்பவன். வருணன், வாயு, அக்கினி, யமன் முதலிய தேவர்கள் இருக்கு வேதத்திலே சிரேஷ்டமுடையவர். அவ்வளவு சிரேஷ்டம் இருக்கு வேத காலத்திலே உருத்திர சிவனுக் கில்லை.

* * * * * *

II. புராண கதைகள் தோன்றின காலத்திலே* பிரமா விஷ்ணு உருத்திரன் என்னும் திரிமூர்த்திகள் உயர, வருணன்

* புராண கதைகள் தோன்றின காலம் முந்தியது. புராணங்கள் எழுதப்பட்ட காலம் பிந்தியது.

வாயு அக்கினி யமன் முதலிய தேவதைகள் தாழ்ந்தனர். திரிமூர்த்திகளிலே பிரமா என்ற தெய்வம் இருக்கு வேதத்திற் சொல்லப்படவே யில்லை. விஷ்ணு என்னும் பெயர் துவாதச ஆதித்தியருக்கு அடை மொழியாக இருக்கு வேதத்தில் வந்துள்ளது. விஷ்ணு என்னும் சொல்லுக்கு வியாபக முள்ளது என்பது பொருள். துவாதச ஆதித்தியர் பன்னிருவர் சூரியர். பன்னிரண்டு மாதங்களுக்கும் பன்னிருவர் சூரியர் அதிதேவதைகள் ஆகவே, விஷ்ணு என்னும் பெயர் இருக்கு வேதத்திலே சூரியனையே குறித்தது.

புராண காலத்திலே, சூரியன் வேறு விஷ்ணு வேறு என ஏற்பட்டது. பிரமா படைக்கும் கடவுள் என்றும், விஷ்ணு காக்கும் கடவுள் என்றும் கொண்டனர். அப்படியே, முதலிலே புயற் கடவுளா யிருந்த உருத்திரனை, அழிக்கும் கடவுள் என்று கொண்டனர். பிரமா எப்போது எப்படித் தோன்றினர் என்பதற்கு ஆதார மில்லை. பிரமா விஷ்ணு உருத்திரன் என்னும் மும்மூர்த்திகள் எப்படி உயர்ந்தன ரென்றும், வருணன் வாயு அக்கினி யமன் முதலிய தேவதைகள் எப்படித் தாழ்ந்தனர் என்றும் தெரிய வில்லை. ஆயினும் மும்மூர்த்திகள் உயரவும், மறு தெய்வங்கள் தாழவும் பல நூறு வருஷங்கள் சென்றன என்பது மட்டும் நிச்சயம்.

இருக்கு வேத காலத்திலும் புராண காலத்திலும் ஹிந்துக்கள் எல்லாத் தெய்வங்களையும் வணங்கி வந்தனர் என்பதும் நிசம். ஆயினும் பல மனைவியரையுடைய கணவ னொருவன், ஒவ்வொரு காலத்திலே ஒவ்வொருத்தியைச் சிரேஷ்டமாய் எண்ணுவதும், பின்பு தன் பல மனைவியருக்குள் சிலரை மிகக் கொண்டாடுவதும் போல, எல்லாத் தெய்வங்களையும் வணங்கி வந்த நம் முன்னோர், காலகதியால் அவர்களுள் மூவரைச் சிலாகித்ததும், அம் மூவருள்ளும் பிரமா மிகத் தாழ, விஷ்ணு சிவன் என்னும் இருவருமே மிக உயர்ந்ததும், இவ் விருவருக்குள்ளே விஷ்ணுவே பெரியவர் என்று சிலரும், சிவனே பெரியவர் என்று சிலரும், விஷ்ணுவும் சிவனும் சம பக்திக் குரியர் என்று பலரும் கொண்டார்கள்.

(இன்னும் வரும்.)

குசிகர் குட்டிக் கதைகள்
மூன்று பாகங்களில் 22 கதைகள்
மொத்தம் விலை, ராப்பர் 1—8—0.
ஷை டக்லீன் 1—12—0.
பஞ்சாமிர்தம் பத்திரிகை ஆபீசு,
மயிலாப்பூர், சென்னை.

எங்கள் அயர்லாந்து வாழ்க்கை ஞாபகங்கள்

ஸ்ரீ. T. ஆதிநாராயண செட்டியார், பாரிஸ்டர், M.L.C., சேலம்
(அவர் மனைவியாரின் உதவிபெற்று எழுதியது.)

(174-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மூன்றாவது அத்தியாயம்.

"ப்ரயன் போரு" என்பவருக்குப் பின் தகுந்த யோக்கியதை வாய்ந்த அரசர் அயர்லாந்தில் காணவில்லை யென்பது உண்மை யாயினும், அத் தேசத்தின் நாகரிகம் சோர் வடையாமல் ஓங்கி வளர்ந்து வந்த தென்றே சொல்லவேண்டும். பாண்டித்தியத்தில் எவ்வாறு அயர்லாந்து புகழ் பெற்றிருந்ததோ அவ்வாறே நேர்த்தியான கட்டிடங்கள், முக்கியமாகத் தேவாலயங்கள், கட்டுவதிலும் திறமை அடைந்து வந்தது. இவ்வாறிருந்தும், அக்காலத்திலே தேசம் க்ஷீணதசையை அடைவதற்குப் பல முகாந்திரங்கள் காணப்பட்டன. இயற்கையில் இத்தேசம் ஐரோப்பாவின் மற்றத் தேசங்களிலிருந்து தனித்திருந்ததால், ஐரோப்பாவில் "க்ருஸேட்ஸ்" என்று சரித்திரத்தில் வழங்கும் மத யுத்த முயற்சியில், அயர்லாந்து கலந்து கொள்ளாமல் போய் விட்டபடியால், ஐரோப்பா கண்டத்தி லுள்ள அனேக தேசங்களுக்கு இந்தத் தர்மப் போர்களிலிருந்து ஏற்பட்ட சில முக்கியமான நன்மைகள், அயர்லாந்துக்குக் கிடைக்காமல் போயிற்று. அந் நன்மைகளில் முக்கியமானவை:—மதவிஷயத்தில் முக்கியமான திருத்தப்பாடுகள்; ஸ்திரீகளிடத்திலும் தீனர்களிடத்திலும் நடந்துகொள்ள வேண்டிய புது மரியாதை முறைகள்; சமூக வாழ்வில் பிரபுக்களுக் குள்ளும் நிலசுவான்தார்களுக்குள்ளும் பற்றுமுள்ள ஜனங்களுக்குள்ளும் ஏற்பட்டிருந்த படிப்படியான அந்தஸ்து, என்று சொல்லலாம். இம்மாதிரியான மேம்பாட்டில், ஐரோப்பாவைவிட்டு அயர்லாந்து தனித்து நின்றது. இந்தக் காரணங்களால், கி.பி. ஒன்பதாவது நூற்றாண்டு வரையில் விருத்தி யடைந்து வந்த இத் தேசமானது, தற்காலம் க்ஷீணதசையை அடைந்து வரலாயிற்று.

தவிர, அயர்லாந்து மீது படையெடுத்து வந்த ஆங்கில (நார்மன்களுக்கு)ர்களுக்கு, அவர்கள் சொந்தத் தேசத்திலேயே பல

தொல்லைகளிருந்தமையால், அயர்லாந்தில் அவர்கள் ராஜ்யத்தை ஒருவாறு நிலை நிறுத்துவதற்கு, ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு ஆயிற்று. அயர்லாந்திலுள்ள சிற்றரசர்களுக்குள் ஒற்றுமை யென்பது கொஞ்சமேனும் இருந்திருந்தால், ஆங்கிலேயர் என்னும் பொது எதிரிகளை ஒற்றுமையுடன் எதிர்த்து வென்றிருக்கவும் கூடும். தேசத்திற்கே பொதுவாக ஏற்பட்ட பேராபத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகவாவது, தமக்குள்ளிருந்த சிறு விரோதங்களை மறந்து ஒன்று சேரவேண்டுமென்னும் உணர்ச்சி, இந்த துர்பாக்கிய நாட்டில் தோன்ற வில்லை. ஆயினும், ஒரே முயற்சியின் பலனைச் சற்றேறக்குறைய ஒரே காலத்தில், அயர்லாந்து இங்கிலாந்து வசமாயிருந்தாலும், இங்கிலாந்தில் அக்காலத்திலுள்ள மேலான நாகரிகத்தின் நன்மையை, அயர்லாந்து தேசத்து ஜனங்கள் பெற்றிருப்பார்களென்று ஊகிக்க இடமுண்டு. ஆனால் ஆங்கிலேயர்கள், தாங்கள் வேறு அயர்லாந்து தேசத்து ஜனங்கள் வேறு என்றே பாவித்து நடத்தி வந்த படியால், ஆங்கில கவர்ன்மெண்டு "அந்நிய" ஆட்சியாகவே நடந்து வந்தது. அந்நியர்கள் ஆட்சியில், அயர்லாந்திலுள்ள பட்டணங்கள் வந்தன என்பது உண்மையாயினும், முக்கியமாய் இந்தப் பட்டணங்களிலுள்ள ஜனங்கள் ஆங்கிலேயர்களாகவேயிருந்து வந்தபடியால், அயர்லாந்தின் வியாபாரம் எல்லாம் ஆங்கிலேயர்கள் பாலாயின. ஆகையால், "மத இலாகா"வில் கூட பெரிய உத்தியோகங்கள் இங்கிலீஷ்காரர்களுக்கே வழங்கப்பட்டு வந்ததென்பது ஆச்சரியத்தைக் கொடுக்காது. இந்தச் சந்தர்ப்பங்களை நோக்குங்கால், கி. பி. 12, 13-வது நூற்றாண்டுகளில் ஆங்கிலேயர் நாட்டில் அனேக சர்வ கலாசாலைகள் ஏற்பட்டு வந்தபோதிலும், பல நூற்றாண்டுகளாகக் கல்வியில் புகழ் பெற்றிருந்த அயர்லாந்தில், இப்பேர்ப்பட்ட ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட வில்லை யென்பதும் ஓர் ஆச்சரியமா?

இது மாத்திரமல்ல; "நார்மன் ப்ரெஞ்சு"க்காரர்கள் இங்கிலாந்தைக் கைப்பற்றிய காலத்தில், இங்கிலாந்தில் பூர்விகமாக ஆசாரத்திலிருந்து வந்த சட்ட திட்டங்களையே அவர்கள் அமுலில் வைத்து வந்தார்களாயினும், அதே நார்மன் ப்ரெஞ்சுக்காரர் அயர்லாந்தைக் கைப்பற்றியபோது, அத் தேசத்தில் அநுஷ்டானத்திலிருந்து வந்த சட்ட திட்டங்களை அடியோடு நிராகரித்து, தங்களால் அதாவது இங்கிலாந்தில் அனுஷ்டிக்கப்பட்டு வந்த சட்டதிட்டங்களை அதிகார முறைகளை ஏற்படுத்தினார்கள். இதன் பயனாக, ஆங்கிலேய சட்டங்களின் கொடுமைகள் மாத்திரம் அயர்லாந்து தேசத்தினருள் பலித்ததே தவிர, அவ்வேற்பாட்டின் நன்மைகளை அவர்கள் சிறிதேனும் அடைய வில்லை. இதற்கு ஒரே காரணம் தான் சொல்லக்கூடும். அதென்னவெனில், அயர்லாந்து தேசத்தினரை

தங்களுடன் சமமாகப் பாவிக்கக்கூடாது என்னும் ஆங்கிலேயருடைய இறுமாப்பு ஒன்று தவிர வேறில்லை.

ஆங்கிலேய மன்னன் அயர்லாந்தில் அடி வைத்த நூறு வருஷங்களுக்குப் பின் அயர்லாந்தின் ஸ்திதி எப்படியிருந்ததென்றால், ஆங்கிலேய மன்னர்களால் தங்கள் சகாக்களுக்கு இனாமாகக் கொடுக்கப்பட்ட ஏராளமான பிரதேசங்களில், அந்த அந்தப் பிரபுவுக்குத் தோன்றியபடி நியாயம் நடத்திவரப் பட்டது. அவர்கள் நடத்தையைக் கட்டுப்படுத்த ஒரு வழியுமில்லை. ஆங்காங்கு சுதேசச் சிற்றரசர்கள் அதிகாரம் செலுத்தி வந்த சிறுசிறு பிரதேசங்களில் மட்டும், அயர்லாந்தில் அனேக நூற்றாண்டுகளாக அநுசரிக்கப்பட்டு வந்த சட்டதிட்டங்கள் அமுலிலிருந்து வந்தன. ஆனால், கி.பி. 13-வது நூற்றாண்டின் முடிவில், இச் சிற்றரசர்கள் மறைந்து, அயர்லாந்தில் எங்கே பார்த்தாலும் ஆங்கில சட்டங்களே வழங்கி வந்தன.

இங்கிலாந்து தேசம் அயர்லாந்தில் தன் ஆதிக்கியத்தை எப்படி வளர்த்து வந்ததென்பதையும், எப்படி அயர்லாந்திலுள்ள தேசிய உணர்ச்சியை இங்கிலாந்து ஒழிக்க எத்தனித்ததென்னும் விஷயத்தையும், அடுத்த அத்தியாயத்தில் விவரிப்போம். ஆனால், அயர்லாந்து சுதந்திரத்தை இழந்து அந்நியருக்குட்பட்ட அடிமைத் தேசமாவதற்கு முன், அத் தேசத்தில் வழங்கி வந்த பழைய சட்ட திட்டங்கள் எப்பேர்ப்பட்டவை யென்று, நாம் சற்று ஆராய்ச்சி செய்வது மிகையாகாது. ஏனெனில், இவர்கள் ஆரியர்களானபடியால், ஆரியர்களுக்குள் "கெல்டிக்" என்னும் வகுப்பினர் எப்பேர்ப்பட்ட சட்டதிட்டங்களை ஐரோப்பாவில் நாகரீகம் உதிப்பதற்கு முன்னிட்டே அற்புதமாக ஏற்படுத்தி யிருந்தார்கள் என்பது, ஆரியரில் மற்றொரு வகுப்பினராகிய நம் தேசத்தினருக்கு ருசி யில்லாமலிராது.

இந்தச் சட்ட திட்டங்களுக்கு "ப்ரிஹன்லா" என்று பெயர். "ப்ரிஹன்" என்றால் "நியாயாதிபதி", அல்லது "மத்தியஸ்தர்" என்று அர்த்தம். இந்தத் திட்டமானது, தற்போதுகூட ஆச்சரியத்தை உண்டாக்கும்படி, ஜனங்களுடைய, ராஜ்ய, ராணுவ, சமூக, கிரஹ கிருத்திய வாழ்க்கையைக்கூடக் கவர்ந்திருந்தது. எந்த எந்தக் காலத்தில் எந்த எந்த விதமான, சந்தர்ப்பங்கள் ஏற்படக் கூடுமோ, அவை யெல்லாவற்றையும் சாதுரியமாக எதிர் பார்த்து; விவரமாக விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பற்றிய முழு விவரங்களையும் எடுத்துச் சொல்ல எங்களுக்கு வசதி கிடைக்காமல் போனபோதிலும், சில அம்சங்களையாவது எடுத்துச் சொல்லாமலிருக்க முடிய வில்லை.

II—6—28

"ப்ரிஹன்" சட்டப்படி, பிரதிவாதி அல்லது கடன்காரன் கோர்ட்டுக்குப் போக மாட்டேன் என்று சாதிக்கலாம். அல்லது கோர்ட்டுக்கு வரச் சம்மதித்தாலும், எந்த நியாயாதிபதியினிடம் தான் தன் வாதத்தை முடிவு செய்து கொள்வேன் என்று வற்புறுத்த, அவனுக்குச் சுதந்திரமுண்டு. கோர்ட்டுக்கு வரமாட்டேனென்று சொல்லும் பிரதிவாதியைக் கோர்ட்டுக்கு அழைப்பதற்கு ஒரே முறை தான் உண்டு. அதாவது, "ஜப்தி." ஆனால் அந்தத் திட்டத்தில் ஜப்தி யென்பது சாதாரணமாக நமக்குள் வழங்கி வரும் "ஜப்தி" போலில்லாமல், மூன்று வகையாக விருந்தது. (1) பிரதிவாதிக்குத் தவணைகள் கொடுத்துச் செய்யும் ஜப்தி (2) உடன் ஜப்தி (3) "தார்ணு" என்று நமக்குள் பண்டைக் காலத்தில் அமுலிலிருந்து வந்த, "பட்டினியிருந்து நடத்தும் ஜப்தி." "இந்த ஜப்தி"களை நடத்துவதில் அனேக நிபந்தனைகளுண்டு. தப்பு வழியிலாவது அல்லது எதிரியை ஏமாற்றி மோசம் செய்ய உத்தேசித்து வழி தவறியாவது "ஜப்தி"யை நடத்தினால், வாதிக்கு அனேக அபராதங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

முதல் விதமாகிய "தவணை" ஜப்தியில் எட்டு நடவடிக்கைகள் உண்டு:

(1) வாதி, சாக்ஷிகளுக் கெதிரில் பிரதிவாதியினிடம் என்ன தொகை தனக்கு (பிரதிவாதியால்) கிடைக்க வேணு மென்பதை பஹிரங்கமாகத் தெரிவித்தல்; (2) அடுத்த நடவடிக்கைக்கு முந்தி, ஒரு "வாயிதா" (3) அடுத்தபடி என்ன வென்றால், வாதி "ஜப்தி" சொத்தை சுவாதீனப் படுத்திக்கொள்ளல்; ஆனால், பின்னும் சொத்து பிரதிவாதி வசத்தில் தான் இருக்கும். (4) இன்னுமொரு வாயிதா. (5) பிறகு "ஜப்தி" சொத்தைப் பிரதிவாதி வசமிருந்து எடுத்து வந்து பஹிரங்கமாகப் "பவுண்டில்" வைத்தல். (6) பிறகு, பிரதிவாதிக்குக் கொடுக்கவேண்டிய தொகை எவ்வளவு; "ஜப்தி" சொத்து எந்தப் பவுண்டில் வைக்கப்பட்டிருக்கிறது; காரியத்தை நடத்தி வரும் ஏஜண்டு இன்னார் என்று கண்டு, வாதி பிரதிவாதிக்கு நோட்டீஸ் கொடுத்தல். (7) இன்னுமொரு வாயிதா. (8) இப்போதுதான், ஜப்தி சொத்தில் பிரதிவாதிக்குள்ள பாத்தியம் வாதிக்கு மாறும்.

விஷயத்தைச் சுருக்கமாக எடுத்துச் சொன்னோம். ஆனால், அனுஷ்டானத்தில், ஒவ்வொரு நடவடிக்கையை நடத்தும் முறையிலும், அனேக நுட்பமான திட்டங்களும் விதிகளுமுண்டு. உதாரணமாக, பவுண்டில் வைத்திருக்கும் "ஜப்தி" சொத்தை, யார் எவ்விதம் பாதுகாக்க வேண்டும், அல்லது, சொத்து நஷ்டமாய் விட்டால், ஜவாப்தாரித்தனம் யாரைப் பொறுத்தது என்னும் விஷயங்கள், நன்றாக இத் திட்டத்தில் விவரிக்கப் பட்டிருக்கின்றன.

மேல் கண்ட விவரப்படி வாயிதா ஜப்திக்குப் பிரதிவாதி ஒத்துக்கொள்ளாமல், சாக்குப்போக்குக்கள் சொல்லி வந்தாலும், அல்லது, பிரதிவாதி ஐவேஜு அற்றவனாய், ஊரைவிட்டு ஓடிப்போகக் கூடியவனா யிருந்தாலும், இரண்டாவது முறையாகிய "உடன் ஜப்தி"யை அனுஷ்டிக்கலாம்.

வாதி, காலக்கிரமத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய ஜாக்கிரதையை எடுத்துக் கொள்ளாமல் தூங்கிவிட்டால், அவனுக்கு "ப்ரஹன்" சட்டத்தில் பரிஹார மில்லை. வாதி பிரதிவாதிக்குக் கொடுக்கவேண்டியது ஏதாவ திருந்தால், அதைத் தள்ளிவிட்டுப் பாக்கித் தொகைக்குத்தான் வாதி ஜப்தி செய்ய முடியும். வீட்டில் கிரஹ கிருத்தியத்திற்கு அவசியமான சாமான்களையும், விவசாயத் தொழிற் கருவிகளையும், கிருஹ கிருத்தியத்திற்கும், விவசாயத்திற்கும் அவசியமான கால் நடைகளையும், ஜப்தி செய்ய அனுமதி கிடையாது. பிரதிவாதி யிடத்தில் ஒரு சொத்தும் இல்லாவிடில், ஆளைப்பிடித்து வேலை செய்யும்படி செய்து, கடன் தொகையை அவ்வாறு வாதி வசூல் செய்யச் சட்டம் அனுமதித்தது. 'ஜப்தி" செய்யும் உரிமை ஸ்திரீகளுக்குமுண்டு. அரசன் சொத்தை ஜப்தி செய்ய இடமில்லை யாயினும், அதற்கென்று ஏற்படுத்தப்பட்டிருந்த ஓர் அரண்மனை அதிகாரியின் மீது (அரசரின் பிரதிநிதியாக) "ஜப்தி" நடவடிக்கை எடுக்கக்கூடும்.

மூன்றாவது வகை "ஜப்தி" யில், கடன் கொடுத்தவன், முன்னாடியே தெரிவித்துவிட்டு, பிரதிவாதியின் வீட்டு வாசலில் குறிப்பிட்ட காலத்திற்கு உண்ணாவிரதம் பூண்டு காத்திருக்க வேண்டும். அப்பொழுது, வாதிக்குச் சாப்பாடு போட்டு, கடனைத் திருப்பிக் கொடுத்து விடுவதாக வாக்குறுதி செய்து, கெடுப் பெற்றுக் கொள்வதும், அல்லது கடன் திருப்பிக் கொடுப்பதற்குத் தகுந்த ஜாமீன் கொடுப்பதும் சஹஜம். பிரதிவாதி இவ்விதம் நடந்து கொள்ளாவிடில், வாதிக்குப் பிரதிவாதி சொத்தை "ஜப்தி" செய்ய உடனே உரிமை ஏற்பட்டு விடுகிறது. ஆனால், தனக்குக் கிடைக்கவேண்டிய கடன் தொகையின் இரட்டிப்பு மடங்கு சொத்தை அவன் ஜப்தி செய்ய அதிகாரமுண்டு.

ஸ்தாவர சொத்தைக்கூட "ஜப்தி" செய்யலாம். ஆனால் அதற்கென்று பிரத்தியேக நிபந்தனைகள் ஏற்பட்டிருந்தன. ஜன சமூகம், சுயேச்சையாய் நடக்கும் சாதாரண ஜனங்கள் என்றும், பிறருக்கு ஸ்வாதீனப்பட்டவர்களென்றும், இரண்டு வகுப்பாக அக்காலத்திலிருந்தது. ஜனங்கள், 'சாதிக்கட்டு' 'குடும்பக்கட்டு' என்று, இருவிதக் கட்டுப்பாடுகளுக்கு உள்ளடங்கி யிருந்தனவென்று சொல்லக் கூடும். இங்கிலாந்திற் போலில்லாமல், மிராசுபாத்திய முறை (System of Land tenure) அயர்லாந்தில் வேறு விதமாக விருந்

தது. ஒதுக்கி வைக்கப்பட்ட சில பாகம் தவிர, சாகுபடி நிலம் முழுதும் சமூஹத்தைச் சேர்ந்த பொதுச் சொத்தாகவும், நிலப் பகுதிகள் யாருடைய அனுபவத்திலிருந்த போதிலும், முழு நிலமும் சமுதாயத்தின் சொத்தாகவும் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால், சமுதாயத்தைச் சேர்ந்த ஒவ்வொரு தனி நபருக்கும், சமுதாயப் பொது நிலத்தில் ஒரு தனிப்பாகம் பிரிக்கப்பட்டிருந்த தென்றாலும், நிலம் முழுதும் சமுதாயத்தின் பொது நன்மைக்கென்றே ஏற்படுத்தப்பட்டிருந்ததென்பது நிச்சயம். ஆனால் ஒவ்வொரு தனி நபருக்கும், குடி யிருப்புக்கும், புழைக்கடைக்கும் வேண்டிய சிறு பாகம், ஒதுக்கிவிடப் பட்டிருந்தது. பொது நிலத்தில் ஒரு பாகம் அரசனுக் கென்றும், உத்தியோகஸ்தர்கள் உபயோகத்திற்கென்றும் பிரித்து வைக்கப்பட்டிருந்தது.

மேய்ச்சல் காடு, தரிசு முதலியவைகள் போக, பாக்கியுள்ள சாகுபடிக்கு யோக்கியமான நிலம் தான், சமுதாயச் சொத்து. இது, ஜனங்களுள் ஒவ்வொருவருக்கும் பாகம் பிரித்துக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், சமூஹத்தில் யாராகிலும் காலகதி யடைந்த போதிலும், அல்லது புதிதாக (மெஜாரிடி யடைந்த காரணத்தினால்) பாகஸ்தர்கள் ஏற்பட்ட காலத்திலும், சமுதாய நிலத்தை, மறுபடி பாகம் பிரிப்பது வழக்கம். ஆனால், ஒருவர் வசத்திலுள்ள நிலம் அடிக்கடி மாறாமல், கூடிய வரையில், அவருக்கே அதே நிலம் கிடைப்பதற்கும்; ஒருக் கால் மாறினாலும், எரு முதலானவை நிலத்தில் உபயோகப்படுத்தி யிருந்தால், அதற்கு ஏற்றபடி பணம் அவருக்குக் கொடுக்க வேண்டியதற்கும் ஏற்பாடுகளுண்டு. நிலத்தில் குடிகளுக்கு சாஸ்வத உரிமை உண்டு. அரசாங்கத்தை நடத்துவதற் கென்று ஜனங்கள் அரசனுக்குக் கொடுத்து வந்த சிறு தொகையைத் தவிர, ஜனங்கள் வேறு எந்த வரியையும் கொடுக்கத் தேவை யில்லை.

அனாதைக் குழந்தைகள், வாரிசற்ற வயது முதிர்ந்த பெற்றோர்கள், முதலியோர் போஷணைக் கென்று, கொஞ்ச நிலம் ஒதுக்கப்பட்டிருந்தது மல்லாமல், இம்மாதிரி அவசியமான தர்மங்களுக் கென்று, நில ஸ்வான்தார்களிடமிருந்து ஒரு கட்டணமும் வாங்கப்பட்டு வந்தது.

“ப்ரிஹன்” திட்டத்தில், “கிரிமினல்” பகுதியின் அடிப்படையான கோட்பாடு என்ன வெனில், குற்றம் யாதாக யிருந்த போதிலும், குற்றத்திற்குத் தக்க அபராதம் விதித்தலே என்பதேயாம். உலகத்தில் ஏற்படக்கூடிய எல்லாக் குற்றங்களுக்கும் ஜாப்தா ஏற்படுத்தி, அவைகளுக்குத் தக்கவாறு அபராதங்களும் குறிப்பிட்டிருந்தது. அபராதம் குற்றத்தைப் பொறுத்ததாக மாத்திரம் இல்லாமல், வாதியின் அந்தஸ்தையும் அனுசரித்து விதிக்கப்

பட்டு வந்தது. வாதியே குற்றம் ஏற்படுவதற்கு அனுகூலமாக நடந்து கொண்டிருந்தால், அபராதம் விதிக்கும்போது, அந்த விஷயமும் கவனிக்கப்பட்டு வந்தது. தவிர (ஆபத்துக் காலத்தில்) வேறு வழியில்லாமல் ஒருவன் செய்த குற்றத்திற்கும், கெட்ட எண்ணத்துடன் செய்த குற்றத்திற்கும் வித்தியாசமான அபராதம் விதிக்கப்பட்டு வந்தது.

குற்றவாளியைத் தூக்கிலிடுவது, அயர்லாந்து தேசத்தின் பிராசீன சட்டத்தில் இல்லை; அவ்வாறே பழிக்குப் பழி வாங்குவதென்பதையும் ஆதரிக்க வில்லை. கிரிமினல் சட்டத்தில் மற்றொரு விஷயமும் குறிப்பிடத்தக்கது. ஒருவன் கொலை செய்யப்பட்டால், அக் குற்றம், கொல்லப்பட்டவனுக்கு நேர்ந்த நஷ்டமாக மாத்திரம் கருதப்படாமல், அவன் சொந்தக்காரர்களுக்கும், அவன் குடியிருந்து வந்த வீட்டின் சொந்தக்காரருக்கும் கூட, ஏற்பட்ட நஷ்டமாகப் பாவிக்கப்பட்டு, கொலை செய்தவனிடமிருந்து வாங்கப்பட்ட அபராதத் தொகையில், இவர்கள் எல்லோருக்கும் பாகம் கிடைக்கும். இந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்படக்கூடிய எல்லா அம்சங்களுக்கும் தக்கவாறு, அபராதத் தொகைகள் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தன. (கொலை) குற்றம் செய்தவனிடத்தில் அபராதத் தொகையை வசூலிப்பதற்காகப் போதுமான திரவியம் இல்லாவிடில், அவனுடைய சமீப உறவு முறையாரிடமிருந்து அந்தத் தொகையை வசூலிக்க ஏற்பாடு இருந்தது. இதன் காரணம் என்ன வென்றால், அவனிடத்தில் சொத்திருந்திருந்தால், அவனுக்குப் பின் அதை அடைய எவரெவருக்கு பாத்தியமுண்டோ, அவர்க ளெல்லாம் அவன் கொடுக்க வேண்டிய அபராதத்தில் ஒரு பாகத்தைக் கொடுப்பது உசிதமென்பதே. தற்காலத்தில், சட்டங்களில் ஏற்படும் கோட்பாடு, அதாவது, “குற்றம் செய்தவன் இறந்தால் அவனுடன் குற்றமும் இறந்து விடுகிறதெ”ன்பதும், அக்காலத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது.

சாக்ஷியம் கூறும் முறையும் (Law of Evidence) நன்றாகவும் தெளிவாகவும் ஏற்பட்டிருந்த தென்றே சொல்லவேண்டும். 17 வயதிற்குட்பட்ட எவருக்கும், வழக்கில் சாக்ஷியம் சொல்ல அனுமதி யில்லை. யஜமானனுக்கு விரோதமாக வேலைக்காரனுக்குச் சாக்ஷியம் சொல்ல அனுமதி யுண்டு. பெண்களும் கோர்ட்டில் சாக்ஷியம் சொல்லலாம். அரசன் சொல்லும் சாக்ஷியத்திற்கு எதிர்ச் சாக்ஷி கூற, மதாசாரியர் (பிஷப்), அல்லது, கல்வியிற் பெரியோர் (Dr. of Learning), அல்லது ஒரு தேசாந்திரி (அன்னிய நாட்டான்) இம் மூவர்கள் தவிர மற்றவர்களுக்கு அதிகார மில்லை.

ஒருவருக்கொருவர் ஒப்பந்தம் செய்துக்கொள்ளும் முறையின் சட்டமும் (Law of Contract), மரண சாசனங்களை ஏற்படுத்

தும் சட்டமும், நமக்குள் வழங்கி வரும் "ஸ்வீகாரம்" என்பதற்குச் சற்றேறக்குறைய ஒப்பாகச் சொல்லக்கூடிய "அபிமான புத்திர" சட்டமும், நன்றாக ஏற்படுத்தப்பட்டிருந்தன.

ஆனால் அவைகளைப்பற்றி இங்கு விவரிக்க நமக்கு இடமில்லை. நாம் மேல் சொல்லியவற்றிலிருந்தே, அயர்லாந்து தேசத்தினர்கள், தங்கள் சுதந்திரத்தை இழந்த காலத்தில், அத்துடன் எப்பேர்ப்பட்ட நல்ல சட்ட திட்டங்களையும் இழந்தார்களென்பதை நன்கு காட்டக்கூடிய அளவு கூறிவிட்டோம். ஆனால், இந்தப் பிராசீன சட்ட திட்டத்தில், புருஷனுக்கும் மனைவிக்கும் ஏற்பட்டிருந்த சட்ட சம்மந்தத்தைக் குறித்து, இரண்டொரு வார்த்தைகளையாவது சொல்லாமலிருக்க மனம் வரவில்லை.

இந்தத் திட்டத்தில், ஸ்திரீகளின் சுதந்திரங்கள் நன்கு காப்பாற்றப்பட்டிருந்தனவென்பதற்கு ஐயமில்லை. புருஷனுடைய அதிகாரத்திற்கு உட்படாமலே, சொந்த ஹோதாவில் ஒரு ஸ்திரீ சொத்தை ஆண்டு வந்து, அச்சொத்தைப்பற்றி விவஹாரங்களையும் நடத்த முடியும். கலியாண காலத்தில், ஒரு ஸ்திரீ, புருஷன் வீட்டுக்கு ஏராளமான சொத்தைக்கொண்டு வந்திருந்தால், அவன் வீட்டில் அவள் அந்தஸ்து உயர்ந்ததாகவே இருந்தது. கல்யாணத்தினால் ஒரு ஸ்திரீ தன் அந்தஸ்தை எவ்வளவேனும் இழந்தவளல்ல. மேலும், சம்பாதிக்காமல் தன் மனைவியின் சொத்தைச் சாப்பிட்டுக்கொண்டு ஜீவனம் செய்த புருஷனை, "அடிமைப் புருஷன்," என்று ஹாசியமாகக் கூறப்பட்டிருக்கிறது. கோர்ட்டு நடவடிக்கையில், புருஷன் தன் மனைவிக்கு விரோதமாகச் சாக்ஷியம் கூறினால், அவனுக்கு விரோதமாக சாக்ஷியம் அவள் சொல்லவும், அவளுக்குச் சட்டம் இடம் கொடுத்தது தவிர; புருஷன் சொத்து, அவன் சந்ததியாருக்கு எப்படிக் கிடைக்குமோ, அவ்வாறே, ஒரு ஸ்திரீயின் சொத்தும், அவள் சந்ததியாருக்குப் பிரத்தியேக சட்டத்தின்படி அவளுக்குப் பின் கிடைத்து வந்தது. அடுத்த அத்தியாயத்தில் அயர்லாந்தை ஆங்கிலேயர் எவ் வண்ணம் ஆண்டு வந்தனர் என்பதை எடுத்துக் கூறுவோம்.

(தொடரும்)

பரிசுகள் விஷயம்

(80-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

போதுப் பரிசுக்கு ஒரு கட்டுரையும், விசேஷப்பரிசுக்கு ஒரு கதையுமே கிடைத்தன; அவையுந்தான் அத்துணைச் சிறப்பு வாய்ந்தனவா யில்லை; ஆதலால், பரிசுகள் கொடுக்கப்பட்டில. இவ்விஷயத்தில் வாசகரின் உபேக்ஷைக்கு வருந்துகிறேன் - ப-ர்.

ஸயாம் நாடு*

வெள்ளையானைப் பிரதேசம்

பண்டிதர் ஸ்ரீ. வி. சுப்பிரமணிய ஐயர்,

திருவண்ணாமலை.

இந்து சீனைகற்பத்தி லுள்ளதோர் பிரதேசம் ஸயாம் நாடு. 1923-ம் வரு ஜூலை மாதத்தில் நான் அந்நாட்டுக்குச் சென்றேன்.

புத்த தேசங்களில் யாத்திரிகர்கள் செல்வது போலவும், இந்திய சீன தீப கல்பத்தின் நாணயச் செலாவணி வகைகளை யறிந்து கொள்ளும் பொருட்டும், நான் ஸயாம் சென்றேன்.

சிங்கப்பூர்—கல்கத்தாவிலிருந்து பன்னிரண்டு நாட்கள் கப்பல் பிரயாணம் செய்து சிங்கப்பூர் சேர்ந்தோம். இந்து சீனதீப கல்பத்தி லுள்ள பெரிய நகரங்கள் தோறும் சீனர்களின் ஜனத்தொகையே அதிகமாயிருப்பினும், சிங்கப்பூர் பல ஜனங்கள் நிறைந்த பட்டணமென்றே சொல்ல வேண்டி யிருக்கிறது. சிங்கப்பூரின் தெருக்களில் ஸஞ்சாரம் செய்பவரெவரும், மலேயர்கள், சீனர்கள், இந்தியர்கள், ஜாவானியர்கள் ஜப்பானியர்கள், 'அராபியர்கள்,' ஐரோப்பியர்கள் முதலிய பல ஜாதியார்கள், ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகி வருவதைப் பார்க்காமலிரார்கள். இத்தனை ஜாதியார்களுள்ளும், இத்தேசத்தில் சீனர்கள் மிக்க மேம்பாடடைந்தவர்களும், மலேயர்கள் மிக்க சிறுமைப் பட்டவர்களுமாம். மலேயர்கள், தம் பிரதேசத்தில் மர மறுக்குந் தொழிலாளராயும், ஜலமிறைப்பவராயும் வாழ்ந்து வருகிறார்கள். அராபிய வம்சத்தார், இங்கு கொஞ்சம் கொஞ்சமாய் முன்னேற்றமடையும் ஜாதியா யிருக்கிறார்கள். இவர்கள், பூர்வம் அரேபியாவி லிருந்து இங்கு வந்து குடியேறிய அராபிய வம்சத்தவர்களும், மலேயாவிலிருந்த பூர்வீக மலேயர், ஹிந்துக்கள், இஸ்லாம் மதத்திற் சேர்க்கப் பட்டவருமே யாவார். சென்னையிலிருந்து இங்கு வந்து வியாபார முறையை அனுசரிக்கும் ஆளியா ஜாதியர், இந்திய வியாபாரிகளில் இங்கு சிறந்து விளங்கி வருகிறார்கள்.

* "மாடர்ன் ரிவ்யூ" பத்திரிகையில், ஸ்ரீ. பிஜனராஜ சத்திராஜ் எழுதியதைத் தமிழில் அமைத்தெழுதியது. இந்தக் கட்டுரையை விளக்கும் சித்திரப் படங்கள் மதராஸ் C.L.S. காரியதரிசி உதவியன.— ப—ர், ப—ம்.

சிங்கப்பூரின் தற்காலநிலை—சிங்கப்பூரில் முன்னமிருந்த கைத்தொழில், குன்றிவரும் நிலைமையிலிருக்கிறது. 1920-ம் வருஷம் வரையில் இவ்விடத்தில் பிரபலமாயிருந்த ரப்பர் கைத்தொழிலினால், அக்காலம் வரையில் இந்நகரம் சிறப்படைந்திருந்தது. ரப்பர் கைத்தொழிற் குறைவினால் இந்நகரம் சீர்குலையநேரிட்டது. சிங்கப்பூர்த் துறைமுகத்தினால், இந்நகரத்திய வியாபாரத்திற்கு விருத்திமுகம் ஏற்படும் போல் காணப்பட்டது. ஆனால், இத்துறைமுக வேலை ஏற்பாட்டின் நிறுத்தத்தினால், வியாபாரமுறைக்கு விசேஷ ஏமாற்றத்தைத் தந்து விட்டது.

ஸயாம் நாட்டு நாடகப் பெண்.

ஸ்டிரெயிட்ஸ் டாலர் நாணயம் ஐரோப்பிய யுத்தத்திற்கு முன்னால், எவ்விதம் செலாவணியிலிருந்ததோ, அதே முறையில், இப்பிரதேசத்தில் அதே டாலர் நாணயமே செலாவணியிலிருந்து வருகிறது. சீனவர்த்தகர்கள் பலர், இங்கு வெகு தனவந்தர்களாயிருக்கிறார்கள். இந்தத் தீவில் கடற்கரையோரத்தில் காடிங்கு என்றவிடத்திலுள்ள இவர்களமைத்திருக்கும் அழகான வாஸஸ்தலங்கள், அவையிருக்குமிடத்தை அழகு செய்கின்றன. இப்பிரதேசத்திலுள்ள இந்தியர்கள், தமக்கென்று தற்கால நாகரிகத்திற்கொத்த சங்கமொன்றைச் சமீபத்தில் ஏற்படுத்திச் செவ்வையாக நடத்திவருகிறார்கள்.

பாங்காக்குப்பிரயாணம்—வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் பாங்காக் எக்ஸ்பிரஸ் என்ற புகைவண்டித் தொடரொன்று, பினாங்கிலிருந்து ஸயாம் தேசத்திற்குச் செல்லுகிறது. அவ்வண்டியிலேறி, ஸயாம்செல்லுவதற்கென்று நான் சிங்கப்பூரைவிட்டுச் செவ்வாயன்றே புறப்பட்டேன். சுருக்கான வழியில் ஸயாம் செல்ல விருப்பமுடையவர்கள், சிங்கப்பூருக்கு வராமல், பினாங்கிலேயே இறங்கிப் போகலாம். சிங்கப்பூர் ஒரு தீவு. மலேயா விடுபட்ட நாடுகளின் வண்டித்தொடரில் ஏற, ஜோஹோர் சலசந்தியைப் படகு மூலமாய்க் கடந்து செல்லவேண்டியிருக்கிறது. இந்த ஜல சந்தியின்மீது பாலமொன்று கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இது முடிந்ததும், சிங்கப்பூருக்கும் பினாங்கிற்கும் நேராகவே ரெயில் வண்டித் தொடர் செல்லக்கூடும்.

கூலாலம்பூர் பிரதேசம்—காலையில் நாங்கள் மலேயா விடுபட்ட நாடுகளின் தலைநகராகிய கூலாலம்பூர் போய்ச் சேர்ந்தோம். இஃது அழகியதோர் பட்டினம், சிங்கப்பூரைக் காட்டிலும் இவ்விடத்தில் வட இந்தியாவிலிருந்து வியாபாரிகள் அதிகம் வந்திருக்கிறார்கள். இந்நகரத்திலுள்ள, மயில் தோகை விரித்தாற் போன்றுள்ள, பிரயாணிகளின் பனைமரத்தின் ஓலைகள் எங்கு பார்த்தாலும் விரிந்திருப்பன, மிக்க அழகான காட்சி தருவதாயிருக்கிறது.

இவ்விடமிருந்து வண்டித் தொடர் புறப்பட்டு, முடிவில்லாத ரப்பர் தோட்டங்களினூடே புகுந்து சென்றது. மலையுச்சிகளில் கூட ரப்பர் மரங்களே மிகுதியும் மலிந்திருந்தன. ரப்பர் வியாபாரக் குறைவினால் இந்நகரமும் சிரமமடைய நேரிட்டுவிட்டது. இங்கு ரப்பர் தோட்டங்களில் வேலைசெய்யும் இந்தியக் கூலிகளின் பாடு வெகு திண்டாட்டமாயிருக்கிறதாகத் தெரிய வந்தது. இவர்கள் பட்டினி கிடப்பதனால், அப்படிக் கிடக்காமலிருக்க வேண்டிய தர்மக் கூலிகளைப் பெறுகிறார்கள். இந்தியா தேசத்திலிருந்து இங்குக் கூலிகள் ஓயாமல் வந்து கொண்டிருப்பது தடுக்கப் படாமையால், இங்கு ஏற்கனவே இருக்கும் கூலியாளர்கள், இன்னும் மிகவும் சிரம தசையை அடைகிறார்கள். ஆகவே, மலேயா விடுபட்ட தீப கற்பத்தில், இனிக் கொஞ்சகாலமாவது, இந்தியக் கூலிகள் போகாமல் தடுப்பதே சிறந்த காரியமாகும் என்பது, கற்றறிந்த இந்தியர்களின் அபிப்பிராயமும் மனோரதமுமாயிருக்கிறது.

வண்டித் தொடரில் போய்க்கொண்டிருக்கையில், அநேகம் தகரச் சுரங்கங்களைப் பார்க்கலாம். இச் சுரங்கங்களுக்கு, பெருத்த சீனதேசத்து முதலாளிகள் சொந்தக் காரர்களென்றும், இச்சுரங்கங்களைத் தோண்டி வேலை செய்வோர்கள் அச்சாதியினரே யென்றும், அறிந்தேன். இத்தொழிலும் இப்போது மலினமடைந்திருக்கிறது.

மறுநாள் பிற்பகலில், ஸயாம் தென்பாகத்துப் புகை வண்டித் தொடரிலேறி, ஸயாம் எல்லைப்புறத்துள்ள படாங்கு பேஸார் என்னுமிடம் சென்றோம். இங்கு விடுபட்ட மலேய பிரதேசத்து ரெயில்வே உத்தியோகஸ்தரிடமிருந்து ஸயாமிய ரெயில்வே உத்தியோகஸ்தர்கள், இந்த வண்டித் தொடரை ஒப்புக்கொண்டார்கள். இந்த ஸ்டேஷனில் மலேயா தேசத்துப் பணத்தை ரெயில் பிரயாணிகள் ஸயாம் தேசத்து நாணயமாக மாற்றிக் கொண்டார்கள். பிறகு வண்டித்தொடர் ஸயாம் தேசத்தினூடே ஓடப்புறப்பட்டது. மலேயாதேசத்தில் செலாவணியாகும் நாணயமும், ஸ்டிரெயிட் ஸெடில்மெண்டு நாணயமும், ஏறக்குறைய ஒத்துள்ளன என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

ஸயாம் தேசத்தின் வனப்பு—வண்டித் தொடர் ஸயாம் தேசத்தில் செல்லச்செல்ல, இதுவரையில் பூமி ரப்பர் தோட்டமாயிருந்தது மாறி, மலைப் பிரதேசங்களே கண்ணுக்குத் தென்பட்டன. இந்த ரெயில்பாதையில், இரவு காலங்களில் காட்டானைகள் கூட்டம் கூட்டமாகக் கூடிக்கொண்டுவந்து வண்டித் தொடருடன் எதிர்க்குமாதலால், இதுவரையில் இராக்காலங்களில் வண்டித்தொடர் சென்றதில்லை. மலையுச்சிகளில் சிறந்து விளங்கும் ஸ்தூபிகள் பலவற்றின் தோற்றத்தினால், இஃதோர் புத்த பூமி யென்பது செவ்வையாய் விளங்கியது.



ஸயாம் நாட்டுப் படகு

மறுநாட்காலையில் தேசத்தின் காட்சி வேறு விதமாக மாறியது. பின்பு வண்டித் தொடர் நெற்பயிற் நிறைந்து பயிரான பிரதேசங்களின் வழியாய்ச் சென்றது. ஸயாம் தேசத்து நெல், மலேயாத் தீப கலபத்திற் கன்றி, ஜாவாவுக்கும் ஏராளமாய் ஏற்றுமதியாகின்றது. இத்தேசத்து அரிசி மிகவும் நன்றாக இருக்குமாதலினால், இந்த அரிசிக்கு ஏராளமாக ஐரோப்பாவிலும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு ரெயில்வே ஸ்டேஷன்களிலும், ஸயாமியர்கள் தம்மை உடைகளால் அலங்காரம் செய்து கொண்டு வந்திருக்கும் மாதிரியும், பார்வைக்கு ரமணீயமான காட்சியை யளித்தது. வர்ணமிட்ட பட்டுத் தோவத்தியும் வெள்ளைக் காலுறையும், கழுத்துப் பட்டையும், நல்ல தொப்பியும் தரித்து, ஸயாமியர் விளங்குகிறார்கள். இதே பானம் என்னும் வஸ்திரத்தையே ஸயாமியப் பெண்மணிகள் தரித்து விளங்குவதைப் பார்த்தால், அவர்கள் மஹாராஷ்டிர பெண்மணிகளோ எனச் சந்தேகிக்கும்படியா யிருக்கும்.

ரம்மியமான நந்த வனங்களும் விளையாட்டிடங்களும் நிறைந்த ஹூவாஹின் கடற்கரை யோரமாயுள்ள விடங்கள் வழியாய், நாங்கள் ஏறிச் சென்ற வண்டித்தொடர் சென்றது. இங்கே சீனக்கடலின் தோற்றம் செவ்விய காட்சி தருகின்றது. இப்படியே கொஞ்சதூரம் சென்றதும், நகரப் பிரதம் என்னும் நாகன்பட்டணம் தோன்றுகிறது. ரெயிலி லிருந்தபடியே, உலகத்திலேயே பெரியதோர் கோயில் என்று சொல்லப்படுகிற ஆலயம், கண்ணுக்குப் புலப்படுகிறது. மாலையில் பினாங்கிலிருந்து 36 மணிநேரம் பிரயாணம் செய்தபிறகு, ஸயாமின் பிரதான நகரமாகிய பாங்காக்கு பட்டணத்தை எங்கள் வண்டித் தொடர் போய்ச் சேர்ந்தது.



பாங்காக்கு நகரம்

பாங்காக்கு நகரம், ஆசியாதேசத்து 'வெனிஸ்' நகரம் என்று சொல்லப்படும். எண்ணிறந்த கிளாங்குகள் என்று சொல்லப்பெறும் கால்வாய்கள் நகரத்தில் நிறைந்திருத்தலினாலும், குறுக்கேயும் நெடுக்கேயும் இக்கால்வாய்கள் செல்லுதலினாலும், பாங்காக்கு பட்டண

த்தை ஆசியாதேசத்து வெநிஸ் நகரமென்று சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லுவதைக்-காட்டிலும், பாங்காக்கு பட்டணத்தை, அழகான சிறந்த கோயில்கள் அதிகமிருப்பதனால், கோயிற் பட்டணமென்று சொல்லுதலே சிறப்புடைத்தாகும். சென்ற 20 வருஷங்களுக்குள்ளாக, பாங்காக்கு பட்டணம் நாகரிகத்தில் மிக்க மேம்பாடடைந்து, தற்காலத்திற்கேற்ற பட்டணமாக மாறியிருக்கிறது. மின்சார விளக்குக்கள், மின்சாரவண்டிகள் முதலிய நவநாகரிகமான உபகரணங்கள் நிறைந்து, கீழ்நாட்டுத்தன்மைகளை மாற்றுவனவாயிருப்பினும், ஸயாம்தேசம், கீழ்நாட்டு வாசனை மாறாமல், பூர்விக நலங்களின் பெருமைகளிற் சிறந்து விளங்குவதே, ஸயாமியப் பிரதான நகரத்தின் பெருமையைக் காட்டுவதாகும். ஸயாம் தேசத்தின் தெருக்களில், இந்தியாவின் ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் வந்துள்ள இந்தியர்களைக் காணலாம். பட்டாணியர்கள் பலரும் இத்தெருக்களில நிறைந்துள்ளார்கள். குஜரான்வாலாவிலிருந்து நாமதாரி சீக்கியர்களின் சிறு கூட்டத்தினர் இங்கு பிரபலமடைந்திருக்கிறார்கள். உள்நாட்டு இந்தியர்கள் பாங்காக்கு பட்டணத்தில் மிகவும் பெருமைபெற்றுச் செழித்திருப்பதற்கடையாளமாக, பாங்காக்கு பட்டணத்தில் சீக்கிய குருத்துவாரமொன்றும், அழகிய பெருமாள் கோயிலும் சிறந்து விளங்குகின்றன.

(தொடரும்.)

"தாருல் இஸ்லாம்"

சித்திரப்படத்துடன் கூடிய சிறந்த செந்தமிழ்ச் சஞ்சிகை.

இதன் மேன்மையையும் அழகையும் அறியாதவர் இத்தமிழுலகிலும் உண்டோ? இது வரையில் 5000-த்துக்கு மேற்பட்ட அறிஞர்கள் இதனால் பெரும்பயன் அடைந்து வருகின்றனர். இஸ்லாத்துக்கும் இதர மதங்களுக்கும் இடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும், மேன்மை தாழ்மைகளையும் நன்குணர்வதற்கு இஃதொன்றே சிறந்த பத்திரிகையாயிருக்கிறது. மத சீர்திருத்தத்துக்கும், ஆசார சீர்திருத்தத்துக்கும் கல்வியின் முன்னேற்றத்துக்கும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கும் இப்பத்திரிகையே கங்கணங் கட்டிக் கொண்டிருக்கிறதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இதன் அருமையையும் பெருமையும் ஆழ்ந்து நோக்குங்கால் இதன் சந்தா மிகக் குறைவானதாகவே காணப்படும்.

வருஷசந்தா ரூ. 3. தான். வெளிநாடுகளுக்கு ரூ. 4.

ஹிந்து சகோதரர்களுக்கும் பொதுஸ்தாபனங்களுக்கும் எல்லா மாணவர்களுக்கும்.

வருஷசந்தா ரூ. 2. வெளிநாடுகளுக்கு ரூ. 3.

ஒவ்வோர் ஆண் பெண் கையிலும் இப்புஸ்தகம் ஹஸ்த பூஷணமாய் விளங்கத் தக்கது. உடனே எழுதுங்கள்.

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ்
தபாற்பெட்டி நெ. 15, சென்னை.

சிசு மரணம்

அதன் காரணங்களும் பரிகாரங்களும்

ஸ்ரீமதி Dr. S. முத்துலக்ஷ்மியம்மாள், M. B., & C. M.,
சென்னை.

(158-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பரிகாரங்கள்—இந்தக் கேடுகளுக்கெல்லாம் பரிகாரங்களைக் கண்டுபிடிப்பது எளிதன்று; கல்விப்பயிற்சி விஷயமாயும், பொருளாதார விஷயமாயும், மத சம்பந்தமாயும் இந்நாட்டில் காணும் பல சிக்கலான பிரசினைகளை, அவை பொறுத்திருக்கின்றன. சுருக்கிக் கூறின், (1) மகாஜனங்களைப் படிப்பித்தல் (2) ஏழைகளுக்குச் சுகசௌகரியமுள்ள வீட்டு வசதிகளையும், நகரத்தில் சுகாதார அபிவிருத்தியையும், பிரசவ வசதிகளையும், சிசுபோஷணை வசதிகளையும், போதிய அளவு, ஆங்காங்கு அமைத்தல் (3) சுத்தமான பால், வேண்டிய அளவு கிடைக்கும்படி, ஏற்பாடு செய்தல் (4) குழந்தைகளுக்கு ஆசுபத்திரியும், சூலிகளைப் பேணிப் பாராமரித்து, ஸ்திரீ ரோகங்களுக்குச் சிகிச்சை செய்யும் வைத்தியசாலைகளையும் அமைத்தல் (5) சிசுக்களையும் பிரசவத் தாய்மாரையும் சோதித்து, வேண்டியவாறு பேணும் இடங்களையும், நன்றாய்ப் பழக்கப்பெற்ற மருத்துவச்சிகளின் தொகையையும், அதிகப்படுத்துதல் (6) மருத்துவச்சிகள் சட்டம் ஒன்று ஏற்படுத்துதல் (7) கூடியவரை, சூலுற்றோர், முன்கொண்டே தங்கள் நிலைமையை வைத்தியருக்குத் தெரிவிக்க வேண்டுமென்று, கட்டாயமான ஒரு விதியை ஏற்படுத்துதல் (8) நாட்டிலே படித்து நாகரிகமுற்றவர்கள், தங்களுக்குள் சங்கங்கள் ஏற்படுத்திக்கொண்டு, பிரசவத் தாய்மாரின், சிசுக்களின், க்ஷேமத்தை நாடி உழைத்தல் (9) பெண்களுக்கென்றே பிரத்தியேகமான ஒரு வைத்திய கலாசாலையை ஸ்தாபித்தல். இவ்வொன்பதும் அவசிய சாதனங்களாகும்.

சிசுக்கள் அபரிமிதமாகச் சாவதன் மூலகாரணம், பொதுஜனங்களின் அறியாமையும், முக்கியமாக, ஸ்திரீகளின் அறியாமையுமே. அறியாமையும் மூட நம்பிக்கைகளுமாக நமக்குள் மண்டிக்கிடக்கும் அந்தகாரத்தை, கல்விப்பயிற்சி என்னும் வெளிச்சத்தைக் கொண்டுதான் போக்கமுடியும்; பால்ய விவாகம் என்றும், கோஷா வழக்கமென்றும், இந்திய சமூகத்தின் ஜீவசக்தியைக் குழந்தைப் பருவ முதற்கொண்டே அரித்துவிடும் தீங்குகளைப் போராடித் தொலைப்பதற்கு, கல்விப் பயிற்சியே இன்றியமையாத

ஆயுதமாகும். ஆகையால், நமக்குக் கிடைக்கும் பணத்தையெல்லாம், நமக்குள்ள முழுப்பலத்தையும், ஜனங்களைப் படிப்பிப்பதில் செலவிடுவதே தகுதியெனத் தோன்றுகிறது; அப்படிச் செய்தால்தான், அவர்கள், தங்கள் தினசரி வாழ்க்கையில், சாதாரண சுகாதார விதிகளை அறிந்து, அநுஷ்டிக்கத் தொடங்குவார்கள். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இலவசமாகக் கட்டாயமாகக் கல்வியைப் போதிப்பதன்றி, சாஸ்திரோக்தமாய்க் குழந்தைகளை பேணி வளர்க்கும் முறையையும் அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். இதைச் செய்யும்படி, பட்டணத்திலே பலவிடங்களில், தாய்மாருக்குக் கல்வி போதிக்கும் பாடசாலைகள் ஏற்படுத்தவேண்டும்; மேல்தரப் பள்ளிக்கூடங்களிலும் வைத்தியப் பள்ளிகளிலும், தாய்மைத் தொழிலை நமது யுவதிகளுக்கு நன்கு கற்பிக்கவேண்டும்; அப்படிச் செய்தால்தான், ஸ்திரீகளின் உத்தம கடனாகும் மக்கட்பேற்றை நன்கு வகிக்க, அவர்கள் அருகர்களாவர். கல்வியில் தேர்ந்துள்ள தாய்மார்களில் சிலர்கூட, தங்கள் மக்களைப் பேணி வளர்க்கும் முறைகளை அறிந்துகொள்ளாமலிருப்பதை, நான் கண்டிருக்கிறேன். நாட்டில் வழங்கும் தாய்மொழிகளில், குழந்தைகளின் ஆகார முறைகளையும் வேறு சுகாதார முறைகளையும் விளக்கும் துண்டுப் பிரசுரங்களையும் சிறு புஸ்தகங்களையும் எழுதி, எல்லோரும் வாசிக்கும்படி எளிதில் கிடைக்கச் செய்யவேண்டும். பிரசங்கங்களாலும், சிசுபோஷணை சுகாதார சம்பந்தமான பொதுக் காட்சிகளாலும், இவ் விஷயத்தில் ஜனங்களின் அறிவைப் பெருக்கலாம். நல்ல ஆகாரம், நல்ல ஜலம், சுத்தமான காற்று, சுகமான வீடுகள் என்றால் என்ன அர்த்தம் என்பதைத் தெரிந்துகொள்ளும் சக்தியை, ஜனங்களிடத்தில் உண்டுபண்ணுதல், நமது முதற் கடனென்று நான் நினைக்கிறேன்.

ஜனநெருக்கத்துக்கும், வசதிக் குறைவுக்கும், குழந்தைகளுக்கு நல்லுணவு கொடுக்காமல், நன்கு பேணாமல் இருப்பதற்குக் காரணமாகும் நமது வறுமையை, அறியாமைக்கு அடுத்த படியில் வைக்கலாம். இந்தியாவின் வறுமையை நீக்குதல், அமைச்சர் பொருள் நூலாசிரியர்களின் பாலதாகும். அதுவரை, ஏழைகள் படும் கஷ்டங்களை நீக்கி, சிசு மரணத்தைக் குறைக்கும் வழிகளையும் சாதனங்களையும் நாம் தேடவேண்டும். ஏழை ஜனங்களுக்குச் சுகவசதிகளை அமைத்து, சேரிகளின் சுகாதாரத்தை விருத்தி செய்வது, நகர பரிபாலன சபையாரின் கடமையாகும்.

நகரத்தில் வாழும் ஏழைகளின் வீடுகளில் பல, ஆபத்துக்கிடமின்றி; விஷநோய்க்கிடமின்றி, பிரசவ சிகிச்சைகள் செய்யத் தகாத அளவு, அசுத்த நிலைமையிலிருக்கின்றன. இப்படிப்பட்ட வீடுகளில் பிரசவம் பார்க்கச் சென்றால், பலவித இடையூறுகள்

ஏற்படுகின்றன: இடம் போதாமை; தாய்க்கும் சிசுவுக்கும் ஏற்ற ஆகாரமும் ஆடையும் படுக்கையும் இல்லாமை; இவற்றினும் மேலாக, பெரியவர்களின் மூட நம்பிக்கைகளும், புது முறைகளில் அவர்களுக்குள்ள வெறுப்பு முதலியன. இப்படிப்பட்ட நிலைமையில், பிரசவத்தில் ஏதாவது சிக்கலோ கோளாறோ ஏற்பட்டுவிட்டால், முடிவு எவ்வாறாகுமென்று சொல்லவேண்டாமே. இப்படிப்பட்ட வில்லங்கங்களுக்கிடையே, ஒரு தாதிப்பெண், அல்லது டாக்டர் தான், என்ன செய்யக்கூடும்?

இந்த ஜனங்களில் அநேகர், ஆசுபத்திரிகளுக்குப் போகமாட்டோமென்று பிடிவாதம் செய்கின்றனர். பிரசவிக்கும் தாய்மாரும் குழந்தைகளும் மிதமிஞ்சிச் சாவதைத் தடுக்க, இவர்கள் வசிக்கும் இடங்களின் மத்தியிலே, 'பிரசவக் கிரகங்கள்' ஏற்படுத்தி, முனிஸிபல் மருத்துவச்சிகளும் தாதிகளும் இந்தக் கிரகங்களில் வருவோருக்குப் பிரசவம் பார்த்து, வேண்டிய சிகிச்சை செய்வதென்றும்; ஏழைகளுக்கு இலவசமாயும், பணக்காரர் மாத்திரம் பணம் கொடுக்கிறதென்றும், ஏற்பாடு செய்யவேண்டும்; ரண வைத்தியம் அவசியமாயுள்ள கஷ்டமான கேஸுகளைமாத்திரம், அடுத்துள்ள ஆசுபத்திரிக்கு அனுப்பிவரலாம். சர்க்கார் சேவகத்திலின்றிச் சொந்தத்தில் வைத்தியம் செய்துவரும் வைத்தியர்களும்கூட, ஏழைகளிடம் சிறிதே கைம்மாறு பெற்று, இந்தப் பிரசவக் கிரகங்களிலே தங்கள் நோயாளிகளுக்கு மருத்துவஞ் செய்துவரலாம். பணமுள்ளவராயும் படித்தவராயுமுள்ள நடுத்தர ஜனங்கள், ஆசுபத்திரிகளிலும், தேர்ந்த வைத்தியர்களிடத்தும், வேண்டிய உதவி பெறுகின்றனராதலின், அறியாமையும் வறுமையும் ஒன்றுசேர்ந்துள்ள ஏழைகளைக் கவனித்துக்காப்பாற்றுவதே, நமது கடமையாகிறது. இப்படிப்பட்ட வசதிகளை அவர்களுக்காக நாம் ஏற்படுத்தாவிட்டால், தாதிகளையும் சுக சாரணர் (health vtsitors) களையு மட்டும் அதிகப்படுத்துவதால், அவர்களுக்கு எவ்வித நன்மையும் விளையாது. உதாரணமாக, ஏழை முகம்மதியர்களின் கஷ்டங்களையும் அசங்கியமான நிலைமையையும் பற்றிப் பேசுவோம்: தரித்திரமும் அறியாமையும் மூடநம்பிக்கைகளும் குடிகொண்டு கொலுவீற்று ஆண்டுவரும் இவர்களுடைய அனாரோக்கியமான வீடுகளிலே, எத்தனை சுகசாரணர்கள் சென்றாலும், என்னதான் செய்யமுடியும்? ஸ்திரீகளும் குழந்தைகளும் இயற்கையில் திடகாத்திர சுகசரீரிகளாயிருக்கும்வரை, எல்லாம் நன்றாய்த்தான் நடந்தேறி வருகிறது; ஆனால், இயற்கை நிலைதவறி, யாதேனும் கோளாறு ஏற்பட்டுவிட்டாலோ, அப்பால், இப்படிப்பட்ட இடங்களிலே, உயிருக்கே ஆபத்து வந்துவிடுகிறது. இந்த ஜனங்களுக்கு, இவர்கள் குழந்தைகளுக்கேனும், நாம் ஏதாவது பரிகார வழி தேடவேண்

டாமா? பெற்ற தாய் ஒவ்வொருத்தியும், அவள் எவ்வளவு நாகரிகமற்றவளா யிருந்தாலுமே, நோயுற்ற தன் குழந்தையின்மீது உழுவலன்பு கொண்டு, அதற்காக வருந்துகிறாளென்பது மெய். ஆயின், அவள் குழந்தை மரித்துவிடாமல் காப்பாற்றும் பரோபகாரிகளிடத்து, எவ்வளவு நன்றியறிவு செலுத்தமாட்டாள்!

இப்படிப்பட்டவர்களின் குழந்தைகளுக்காக, ஒரு 'சிசுக்கள் ஆசிரமம்' ஏற்படுத்தி, பிரசவக் கிரகங்களில் போலவே, நோயுற்ற குழந்தைகளுக்கு அவ்விடத்தில் வைத்தியஞ் செய்து பராமரிக்கலாம். இப்படிப்பட்ட (அசௌக்கியமான) இடங்களின் மத்தியிலிருந்து குழந்தைகளை எடுத்துக்கொண்டுபோய், நானே என் வீட்டில் வைத்து வைத்தியஞ் செய்ய, எத்தனையோ தடவைகளில் நான் ஆசைப்பட்டிருக்கிறேன். குழந்தை பிழைக்குமோ பிழையாதோ என்று நோயால் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் தறுவாயில், அந்த ஏழைப்பெற்றோர்கள், வைத்தியரின் சொற்படி செய்ய, எவ்வளவு ஆவலோடும் கவலையோடும் முயன்றுபார்க்கிறார்கள்!

ஆசுபத்திரியில் போல், இப்படிப்பட்ட சிசுக்கள் ஆசிரமங்களில், கண்டிப்பான விதிகளை ஏற்படுத்த வேண்டிய தில்லை. வீட்டிலிருக்கும்பொழுது குழந்தைக்கு வைத்தியம் செய்த டாக்டரே, இவ்விடத்திலும் சிகிச்சை செய்யலாம். ஒரு ஸ்வகீய போஷணகிரகத்தைப் (private nursing home) போலவே அது நடைபெறும்; ஆனால், அவ்வளவு செலவு பிடிக்காது. சுகசாரணர்கள், அசங்கியமான, சுகாதாரக் குறைவான இடங்களில் நோயுற்ற குழந்தைகளைக் கண்டால், இவ்விடத்துக்கு அனுப்பலாம்; ஐவேஜுள்ளவர் சொற்பப் பணம் கொடுத்தும், பரம ஏழைகள் இலவசமாயும், இங்கே வைத்திய உதவியைப் பெறலாம். இந்த ஆசிரமங்களில், நோயுற்ற குழந்தைகளின் தாய்மாருக்குச் சிகிச்சை வேண்டியிருந்தாலும், செய்யலாம்.

ஏழைகளின் குழந்தைகளுக்கென்று இப்படிப்பட்ட சிசுபோஷண கிரகம் ஒன்றில்லாதவரை, சுகசாரணர்களால் மட்டும் அதிக நன்மையுண்டாகாது. இவர்கள் வீடுகளிருக்கும் நிலைமையில், சுகசாரணர்களும் முனிஸிபல் தாதிகளும் இலவசமாய்க் கூறும் சுகாதார முறைகளையும் பரிகாரங்களையும், இவர்களால் நிறைவேற்ற முடியாது. படிப்பும் பணமு முள்ள நடுத்தர ஜனங்கள், முனிஸிபல் தாதிகளாலும் சுகசாரணர்களாலும் நன்மையடைகின்றன ரென்பது திண்ணம்; ஆனால் ஏழை ஜனங்க ளல்ல.

(தொடரும்)

பதின்மூன்றாம் அதிகாரம்

"உன் காதல் மெய்யானால், உன் சபதங்கள் எல்லாம் உண்மையானால், உடனே என் தகப்பனாரை நேரில் வந்து பார்த்து, ஏதாவது ஒரு விதமாக என்னைக் கலியாணஞ் செய்து கொள்ள ஏற்பாடு செய். இந்த நிர்ப்பந்தம், இனி என்னால் பொறுக்க முடியாது. நாம் இருவரும் பரோடாவுக்கோ, நம் கலியாணம் சட்டப்படி ஒழுங்காகும் வேறு எந்த இடத்துக்கோ, இரகசியமாய் ஓடிப்போய், கலியாணத்தை முடித்துக் கொண்டுவந்து விட்டால், அப்புறம் அவர் மனம் ஒரு விதமாய் சமாதான மாகிவிடும்; அது தான் சரியான யுக்தி என்று, பாக்கியம் சொல்கிறாள். எனக்கு அது பிடிக்க வில்லை; அவர் மனசை அவ்வாறு புண்படுத்த, நான் எப்படி இசைவேன்? அவர், முன் கோபமும் பிடிவாதமும் உள்ளவர்; இல்லை, அது சரியென்று தோற்ற வில்லை. எனக்குத் தாயும் தகப்பனுமாய், இவ்வளவு அருமையாய்,—இல்லை, அது என்னால் முடியாது. வேறொரு வரனைக் கூட்டிக்கொண்டு வந்து நெருக்கி, இன்னும் இரண்டு வாரத்திற்குள் மணவினையை முடித்து விட வேண்டுமென்று, அவர் நிர்ப்பந்தப் படுத்துகிறார்; இனித் தாமதிக்க முடியாது. உடனே, எப்படியாவது, ஏற்பாடு செய். ஒவ்வொரு நிமிஷமும் உன் பதிலை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண் டிருக்கும், உன் காதலி ஜேன்.?'

இந்தக் கடிதத்தைக் கையில் வைத்துத் திரும்பித் திரும்பிப் படித்து, மனங்குழம்பி, ஆலோசனை செய்து கொண்டிருந்தார், டாக்டர் கோபாலையர். வழி யொன்றும் புரிய வில்லை; நாலுபுறமும் புத்தி முட்டாகவே இருந்தது. கடைசியில், தன் சிநேகிதர் நாராயணையரைக் கலந்துகொள்ளத் தீர்மானித்தார். 'அவன் என்ன, எப்பொழுதும் போல் தர்மோபதேசம் செய்வன்; வேறென்ன சொல்லப் போகிறான்? நீ கிறிஸ்தவனாகி, அவளை மணந்துகொள்'

என்று சொல்லப் போகிறுளு? அல்லது அவளோடு ஓடிப் போய்க் காரியத்தை முடித்துக்கொண்டு வந்து விடு; அப்பால் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லப் போகிறுளு?' என்று, தனக்குள் தானே பின்னும் நினைத்தார். அந்தச் சமயத்தில், தற் செயலாய் நாராயணையர் வந்து சேர, அது தெய்வ சங்கல்பம் என்று நினைந்து, அவரிடத்தில் கதை முழுதையும் கொஞ்சம் கொஞ்சமாய் வெளி யிட்டார்.

வேறு விதமாய் எண்ணிக்கொண் டிருந்த நாராயணையர், இவ்வாறு உண்மையை அறிந்தவுடன், அளப்பரிய ஆச்சரியத்தை அடைந்தார்.

"அடா பாவிப்பயலே! ஒருவருக்கும் தெரியாதே. ஏதேதோ சட்டைக்காரச்சி என்றும், துலுக்கச்சி என்றும், ஊரெல்லாம் தூற்றினர்கள். அப்படியே நானும் நம்பி வந்தேன்! 'கண்ணலே கண்டதும் பொய், காதாலே கேட்டதும் பொய்' என்பது, ருசுவாய் விட்டதே. ஆனல், பத்மிமட்டும், நான் சொன்னதை முழுதும் நம்ப வில்லை; நீ முன்னைப் போலில்லை என்று சொல்லிக்கொண்டே இருந்தாள். உனக்கு இவ்வளவு காவும் நெஞ்சாழமும் எப்படி வந்தது? என்னிடத்தில் கூட ஒன்றும் சொல்லவில்லையே! உன் மச்சினன் உன்னை ஏசினதை யெல்லாம் எப்படிப் பொறுத்துக்கொண் டிருந்தாய்? ஆனலும், நீ—"

கோபாலையர்.—அதெல்லாம் இருக்கட்டும், நாணு; நான் அப்பொழுது என்ன சொல்லக்கூடும்? போனது போகட்டும்; இப்பொழுது நீ இதற்கு என்ன வழி சொல்கிறுய்? உன் யுக்தி என்ன?

நாராயணையர்.—வழியா? யுக்தியா? என்ன சொல்கிறது? பாக்கியம் என்கிறவள் யாரு?

கோபா.—ஜானகி வீட்டில் அவளுக்குத் துணையாயிருப்பவள்; அவள் தோழி; ஒரு திருட்டு நரி; மாய்மாலக்காரி.

நாரா.—உனக்கு அநுகூலமாகவே அவள் போதனை தோன்றுகிறது?

கோபா.—எல்லாம் சாணக்கிய தந்திரம். அவளுக்கு அவர்மேல், தாமஸ்கேயின் மேல், நாட்டம் என்று எண்ணுகிறேன். ஜானகிக்கும் அவருக்கும் மனஸ்தாபம் வந்தால், ஜானகி வீட்டைவிட்டு வெளியேறி அவர் கோபத்துக் குள்ளானல், தன் காரியம் சுலபமாய்க் கைகூடும்; தானே வீட்டு யஜமானி யாகிவிடலாம் என்பது, அவள் சூழ்ச்சிபோல் தோன்றுகிறது. அதுதான் இப்படிப் போதனை.

நாரா.—ஆனல், இவளுக்கு அது தெரியாதோ?

கோபா.—இவளா,—கறந்த பாலும் சரி, இவளும் சரி; கள்ளம் கபடு கனவிலும் நினையாதவள்;—நீ அவளைப் பார்த்த தில்லையே, நாணு: நானும் படித்த பேர், படியாத பேர், அழகுள்ளவர், அழகில்லாதவர், எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறேன்; அவளைப் போல எவளையுமே கண்ட தில்லை.

நாரா.—அதற் கென்ன, மனங்கொண்டது மாளிகை, உனக்கு; இவளே ரதியும் ஸரஸ்வதியும் லக்ஷ்மியும் சேர்ந்து வந்து அவதாரமானவள் போல், இப்பொழுது தோன்றுகிறது.

கோபா.—அப்படிச் சொல்லாதே, நாணு: உனக்கு அவளைத் தெரியாது; என் மனத்திலுள்ளதை விண்டு காட்டவும் முடியாது. ஆனல், இந்த ஒரு விஷயத்தை மட்டும் கவனித்துப் பார். என் சங்கதிதான் உனக்குத் தெரியுமே; அதிலும், கல்யாணம் செத்துப்போன பிறகு,- சொல்ல வேண்டாம். ஆனல், ஜானகியை—'ஜென்கே' என்னும் பெயரை, அப்படி எங்களுக்குள் மாற்றிக்கொண் டிருக்கிறேம்—அவளை ஆசுபத்திரியில் கண்டு, அவள் மேல் நான் காதல் கொண்டது முதல், இத்தனை நாளாக, என் பழைய பழக்கங்கள் எல்லாம் தொலைந்தது மட்டுமோ, வேறு எந்த ஸ்திரீயையும் பற்றி நான் சொப்பனத்திலும் நினைத்த தில்லை. இங்கிலீஷ் புஸ்தகங்களில் நாம் உண்மைக்

காதல் என்று வாசித்த தெல்லாம், இப்பொழுதுதான், இவள் விஷயத்தில்தான், எனக்கு விளங்குகிறது. கல்யாணத்தைக்கூட நான் இப்படிக் காதலிக்க வில்லை என்றுதான் தோன்றுகிறது.

நாரா.—அறுபதுக்கு மேலே குறுகுறுப்பு!

கோபா.—அறுபதோ எழுபதோ, அதெல்லாம் தெரியாது. எனக்கும் வயசு முப்பத்தைந் தாகப்போகிறது, குழந்தைகளு மிருக்கிறார்கள்; ஆயினும், இந்தக் காதல், இது வரையில் நான் அறியாத ஒன்று, அதன் ஆவேசம் என்னைப் பிடித்துக்கொண் டிருக்கிறது என்பது, கேவலம் சத்தியம்.

நாரா.—ஆனால், ஒரு வேளை, வேறு வழியில்லா விட்டால், இதற்காகக் கிறிஸ்தவனாகி விடுவாயோ? என்ன, பதிலில்லை?

கோபா.—என்ன பதில் சொல்லுகிறது? நம்ம நாட்டிலே, எத்தனையோ ஏழை ஜனங்கள், வயிற்றுப் பிழைப்பு நிமித்தமும்; மற்றவர் உத்தியோகங்கள், பெண்கள் காரணமாயும், கிறிஸ்தவர்களாகிவிடுவது, நமக்குத் தெரியாதா? அது புதிதில்லை. ஆனால், நான் அப்படிச் செய்வேனோ என்பது, எனக்கே சந்தேகமா யிருக்கிறது. ஜானகிக்குக் கிறிஸ்து மதத்திலே அதிகப் பற்றுண்டென்று நான் நினைக்க வில்லை; அவள் தாய், பிராமண குலத்தைச் சேர்ந்தவளென்று சொன்னேன் அல்லவா; இவளுக்கும் நம்ம பழக்க வழக்கக்களில் தான் அதிகப் பிரியம். இவள் இன்னும் புடைவை தான் உடுத்திக் கொள்கிறாள்; தகப்பனாரைப்போல, ஐரோப்பியர் உடை தரிப்ப தில்லை.

நாரா.—ஆனால், அவளை ஒரு வேளை பிராமணத்தி ஆக்கி விடலா மென்று பார்க்கிறாயா? அது கூடுவதானாலும், அவளே இசைந்தாலும், அவர் அதற்குச் சம்மதிப்பாரா?

கோபா.—அது தான் திகைக்கிறேன். அவர் கிறைஸ்தவப் பழம், பிராமணத் துவேஷி என்றே, சொல்லவேண்

டும். நான் கிறிஸ்தவனாவதானால், உடனே இரட்டைச் சம்மதம்; என்னிடத்தில், நேரிலே, அப்படியே தான் கேட்டார்.

நாரா.—நீ கிறிஸ்தவனானாலுமே, அவளைப் பிராமணத்தியாகப் பாவித்து, நீ வீட்டில் வைத்துக் கொண்டாலுமே, உன் குடும்பத்தின் கதி என்னாகும்? அவர்களும் கிறிஸ்தவர் ஆவார்களா? பிராமணர்களா யிருப்பார்களா? குட்டியின் கலியாணம், சாமியின் உபநயனம், எல்லாம் எப்படி? உன் மாமனார் மச்சினர்களை நீ கவனியாவிட்டாலும், சாவித்திரிக்கு என்ன சொல்வாய்!

கோபா.—நம்மகதி நம்ம குழந்தைகளுக்கும் என்று துணிந்துதான், குட்டியின் கலியாணம் இப்பொழு தில்லை என்று, ஒரே பிடிவாதமாய் என் மாமனாரிடம் சொன்னது.

நாரா.—சாவித்திரியோ? அவளும் இசைவளா, அல்லது, அவளை விட்டுப் பிரிய முடியுமா?

கோபாலையர் ஒன்றும் பதிலுரைக்க வில்லை; யோசனையில் ஆழ்ந்திருந்தார். சிறிது நேரத்துக்குப் பின்:—

கோபா.—எனக்குப் பிதிர்ப்போடவா, உன்னிடத்தில் இவ்வளவையும் சொன்னேன்? எனக்குப் புத்தி முட்டாயிருக்கிறது; ஒன்றும் ஓடவில்லை; ஏதாவது வழியுண்டானால், யுக்தி யுண்டானால், சொல்லு.

நாரா.—நான் என்ன சொல்லட்டும்? எனக்கும் புத்தி முட்டாகத்தா னிருக்கிறது. நம்முடைய ஆசாரச் சீர்திருத்தங்களை யெல்லாம் கடந்து, அப்பால் போவதாயிருக்கிறது இந்த சங்கதி. ஜாதிபேத மாத்திர மில்லாமல், மதபேதமும் கூடி, ஒரே சிக்கலாயிருக்கிறது. உன் சுபாவத்தை அறிந்து, வேறு கலியாணம் செய்து கொள்ளென்று நாங்கள் எல்லோரும், உன் மாமனார் மச்சினருங்கூட, கட்டாயப் படுத்தினதை யெல்லாம், நீ ஒரே [illegible]ர்வையாய் மறுத்துவிட்டது, அப்பொழுது ஆச்சரியமா[illegible]; இப்பொழுது தான், அதன் காரணம் துலங்கு

கிறது. அவ்வளவு பேய்ப்பிடியாக உன்னை இந்தக் காதல் பிடித்துக்கொண் டிருக்கிறது. இத்தனை வருஷங்களாயும் மாறவு மில்லை, குறையவு மில்லை என்றால், இதுதான் உன் கடமை, இதுதான் நியாயம் என்று, ஹிதோபதேசம் செய்ய என் மனம் துணிய வில்லை.

கோபா.—நாணு! இந்த மட்டும் என் மனோ நிலையை அறிந்து நீ இப்பொழுது சொன்னது, எனக்கு எவ்வளவோ சந்தோஷமா யிருக்கிறது. 'இதெல்லாம் கிறுக்கு; உனக்குத் தடிபோல வயசாக வில்லையா? குழந்தைகள் இல்லையா? பைத்தியமா? காதலும் கூதலும் என்ன பேச்சிது!' என்று, தர்மோபதேசம் செய்வா யென்றே பயந்தேன். இத்தனை நாளாக உன்னிடம் இதைப்பற்றி வாய் திறவாததற்கும், இந்தப் பயம் தான் காரணம்.

நாரா.—அது சரி; மேல் என்ன யோசனை? உள்ளதை எல்லாம் விவரமாய்ச் சொல்லி, சாவித்திரியையே கேட்கலாமா? பத்மியைக் கேட்கட்டுமா? சில சமயங்களில், நம்ம ஸ்திரீகளுடைய மனோ பாவமும் இயற்கை யறிவும், மெத்தப்படித்த நம்ம யுக்திகளைவிட, சிலாக்கியமா யிருப்பதை நான் கவனித்திருக்கிறேன்.

கோபா.—வேண்டுமானால் நீ கேட்டுப் பார்; அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள்? 'இப்படியும் உண்டா!' என்று திகைத்து, ஆச்சரியப்பட்டு, என்னை வெறுப்பார்கள்.

நாரா.—அப்படி யில்லை; நீ தெரியாமல் சொல்கிறாய். நான் கேட்டுப் பார்க்கிறேன்.

கோபா.—செய். எனக்கு என்னவோ, அது பிடிக்க வில்லை; இருந்தாலும், வேறு வழி ஒன்றும் இல்லாததால், அப்படியும் செய்து பார்க்கலாம். உன் ஆமுடையாள், ஒரு வேளை, எப்படி நினைப்பாளோ; சாவித்திரி அக்காள், ஒரு நாளும், இப்படி எதற்கும் இசைய மாட்டாள்.

அன்றிரவு, நாராயணையர், தன் மனைவி யிடத்தில்

விவரங்களை மெதுவாய் வெளியிட்டு, அவள் அபிப்பிராயத்தை அறிய முயன்றார். அதைக் கேட்டவுடன், 'பார்த்தாயா! நான் அப்பொழுதே சொல்ல வில்லையா? அவர் எப்பொழுதும போலில்லை; ஒரு மாதிரியாக மாறி யிருக்கிறார் என்று, எனக்கு வெகு நாளாகத் தோன்றிற்று" என்று சொல்லி, பத்மாவதியம்மாள் கெக்கலித்தாள்.

நாரா.—அதிருக்கட்டும், பத்மி, நீ மகா புத்திசாலி, ஜோஸ்ய சிகாமணி என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்வோம். உன் அபிப்பிராயம் என்ன? இந்த தர்ம சங்கடத்திலே அவன் என்ன செய்யலாம்? எது சரி?

பத்மா.—சரியாவேது பவழமாவேது! அவர் என்றைக்குத் தான், எல்லாரையும் போல, நேரே யிருந்தார்? அவள் இருக்கிறபோதே, சாலா என்றும் கீலா என்றும் தன்னிஷ்டம் போல் திரிந்து, அவள் பாவத்தைக் கொட்டிக்கொண்டார். அதுதான் பாதி மனோ வியாதி, அவளுக்கு; அவளும் போய்விட்டாள், தாலியோடு; அந்த மட்டும் மகாராசிதான் இனிமேல் இவருக் கென்ன? என்னைக் கேட்டால், இன்னும் கண்ட முண்டைகளை யெல்லாம் கட்டி யழுது சீரழிந்து போகாமல், ஊர் சிரிக்காமல், இவளைப் பிடித்திருந்தால், இவளோடு சுகமாய் வாழலாம். ஸ்திரீ புருஷன் என்றிருந்தால், மனம் ஒத்து, ஸந்தோஷமா யிருக்க வேண்டும்; ஊருக்கும் பேருக்கும் வெளிக்கு மட்டும் மெய்ப்பித்து, உள்ளுக்குள் அன்பும் ஸந்தோஷமு மில்லாத வாழ்வு, என்ன வாழ்வு!

நாரா.—நீ என்ன, முன் பின் யோசியாமல் பேசுகிறாய், பத்மி: இவள் ஒரு கிறிஸ்தவச்சி, பெற்ற தகப்பனாரோ, துரையாய் இலங்குகிறார். இவளைக் கலியாணம் செய்து கொண்டால் மட்டும் ஊர் சிரிக்காதா? இவன் ஒரு வேளை கிறிஸ்தவனாகி விட்டால், அப்புறம், இவன் குழந்தைகள் குடும்பம் எல்லாம் என்ன வாகும்?

பத்மா.—இப்பொழுது சந்தியும் ஜபமும் விபூதியும்

பழுக்கிறது! அல்லது, உதய சாயந்திரம் ஸ்வாமி தரிசனமும் கோவிலுக்குப் போகிறதும் தப்பாதாக்கும்! அல்லது, சூத்திரர் கூடவும் துரைமார் கூடவும் பறையன் சமைத்ததையும் சாப்பிடுகிற தில்லையோ? கிறிஸ்தவன் என்று இவர் பேரை மாற்றிக் கொண்டுவிட்டால், இப்பொழுதை விட என்ன கெட்டுப்போகப் போகிறது? குழந்தைகள் பாடு கஷ்டந்தான்; திரிசங்கு ஸ்வர்க்கம் ஆகிவிடும். குட்டியை முதலிலே கட்டிக் கொடுத்துவிட்டால், அல்லது மாமனாரிடத்திலே ஒப்பித்துவிட்டால், அதுவும் அவ்வளவு அவஸ்தையா யிராது. எப்படியோ, கொஞ்ச நாளாவது, இவர் மனசுக்கு ஸந்தோஷமாய், யோக்கியமாய், இருப்பரோ இல்லையோ? இவர் கிறிஸ்தவராகாதபடி, அவள் இவரோடு வந்திருப்பள் என்றால், இன்னும் இலே சாய்ப் போய்விடும். நீ சொல்கிறதைக் கேட்டால், அவள் அப்படிச் சம்மதிப்பள் என்று தோன்றுகிறதே?

நாரா.—அவளுக்கும் இவன் மேலே கனத்த கிறுக்காம். இவர்களுக்கு அநுகூலமாக, ஒரு குண்டுணிக்காரியும் ஏற்பட்டிருக்கிறாள் போலிருக்கு;—எப்படியாவது இவர்கள் இரண்டு பேரையும் சேர்த்து வைத்துவிட வேண்டுமென்று, அவள் பார்க்கிறாள். ஆனாலும், குட்டி, நீ சொல்வது எனக்கு ஆச்சரியமா யிருக்கு; நீ இவ்வளவு விசாலமான நோக்கத்தோடு, தாராளமான மனத்தோடு பேசுவாய் என்று, நான் நினைக்க வில்லை.

பத்மா.—பூவோடு சேர்ந்த நாரும் கொஞ்சம் மணமிராதா? அத்தானோடு இத்தனை நாளாகப் பழகினதற்கு இவ்வளவாவது வேண்டாயா?

நாரா.—அத்தானுக்கு இவ்வளவு மனத்தாராளம் இல்லையே, பயமா யிருக்கிறதே. நீ என்னோடு இத்தனை நாள்களாய்ப் பழகி யிருப்பது போலவே, சாவித்திரியும் என்னோடும் கோபுவோடும் பழகி யிருக்கிறாள். அவள் இதற்குச் சமமதிப்பாள் என்று நீ எண்ணுகிறாயா?

பலதுறைப் பொறுக்குமணிகள்

பத்திரிகை ஆராய்ச்சி

(163-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

I. மதவிஷயக் குறிப்புக்கள்.

7. பௌத்த மதம்:—பம்பாய் நகரத்திலே புத்தஜயந்தி யன்று கூடிய சபையின் தலைமை வகித்த ஸர். ஸி. சங்கரன் நாயர், கிறிஸ்து மதம் இஸ்லாம் பிராமண மதங்களை விட, புத்த மதமே இக்காலத்துக்குப் பல அம்சங்களில் ஏற்றதாகத் தோன்றுகிறதென்று கூறிவிட்டு, பௌத்த மதத்தின் முக்கிய சிறப்புக்கள் மூன்றைப் பற்றிப் பேசினார், அவையாவன:—(1) பிறவி பற்றி வரும் சாதி பேதங்கள் புத்த மதத்தில் இல்லை. (2) தெய்வ பக்தி, அருள் என்பதைவிட்டு, புத்த மதம், கர்ம பலனையும், எல்லாரும் அவரவர் செய்யும் கருமத்தின் பலனை அநுபவித்தே தீரவேண்டும் என்ற நியாயத்தையும், வற்புறுத்துகின்றது. இதனால், புத்த மதத்தில் மதச் சண்டைகளுக்கு இடமில்லை; நல்லொழுக்கம் என்பது, நியாயமான ஆதாரத்தைப் பெற்று, சீலம் சிறப்படைகிறது. (3) உயிரின் புனிதத்தையும், ஜீவகாருண்யத்தின் சிறப்பையும், புத்த மதம் எடுத்தோதுகின்றது.

II, கல்வி விஷயக் குறிப்புக்கள்.

5. ஆரம்பக் கல்வி:—'மதிப்புரை'ப் பகுதியிலே இதைப்பற்றிய ஒரு நூலின் விமரிசனத்தை நோக்குக; Dr. S. முத்து லக்ஷ்மியம்மாள் எழுதி வரும் 'சிசுமரணம்' என்ற வியாசத்தின் இம்மாதப் பகுதியிலே, கல்விப் பயிற்சியின் முக்கியத்தையும், நமக்குள்ள பணத்தையும் முழுப் பலத்தையும் கல்விப் பயிற்சியைப் பரவச் செய்வதில் செலவிடுவதே உத்தமம் என்பதையும், வற்புறுத்தி யிருப்பதையும் நோக்குக. உயர்தரக் கல்வி வளர வளர, அறிவு கீழ் நோக்கிப் பொசிந்து படிந்து, சாதாரண ஜனங்களுக்கு வேண்டிய அறிவு ஏற்பட்டுவிடு மென்ற கொள்கை, பொய்யாகி விட்டது. அம்மட்டோ; நாட்டிலுள்ள நாலாயிரஞ் சாதிகள் போதாமே, படித்தவர் படியாதவர் என்று, புதிய சாதி பேதங்களும் உதிக்கலாயின. 32 கோடி ஜனங்கள் கொண்ட இந்தியா முழுமைக்கும், 5 கோடி ரூபாவே ஆரம்பக் கல்வியில் செலவிடுதல், சமுத்திரத்தில் பெருங்காயத் துண்டைக் கரைத்ததுபோ லாகுமே யன்றிப் பயன்படாது. மொத்த ஜனத்தொகையில், நூற்றுக்கு 15 முதல் 20 பேர் வரை ஆரம்பப் பள்ளிகளில் கல்வி பயின்று வருவது நாகரிக நாடுகளின் இயல்பாயிருக்க நம்ம நாட்டிலே, நூற்றுக்கு மூவரே கல்வி பயின்று வருகின்றன ரெனின், வேறு என்ன சொல்வது. இது, அரசாங்கத்தாரின் முதற் கடமையாகும்; ஸதலஸ்தாபனங்களின் முயற்சியால் மட்டும் கைகூடுவ தன்று. இராணுவப் பாமரிப்

மாகச் செய்து, ஹார்வார்டு சர்வகலா சங்கத்தார், ஓர் அமெரிக்க எல்ம்' விருக்ஷத்தை நட்டு, அதன் நிழலிலே களைத்த வழிப்போக்கர் இளைப்பாறவும், கள்ளங்கபடறியாத குழந்தைகள் துள்ளி விளையாடவும், அம்மரம் நன்ருய் ஓங்கித் தழைத்து வளரும்படி, அவன் உடலுரத்தை அம்மரத்துக்கு எருவிட வேண்டுமாம். இதுவே ஸான்பார்ந் விட்டுப்போன உயில். அவன் இறந்து போய் 54 ஆண்டுகளாய் விட்டன. அவன் உயிலின்படி நிறைவேறிய விவரம் தெரியவில்லை.

21. ஒரு பெருங் கொடை:—வங்காளத்து ஹைகோர்ட்டு ஜட்ஜாயிருந்த ஸர் அஷுடோஷ் சௌதிரி என்பவர், சிலர் நாட்களுக்கு முன் இறந்தபோது, ரூ. நாற்பதினுயிரம் விலை மதிப்புள்ளதும், 5000 புஸ்தகங்கள் அடங்கியதுமான தன் புஸ்தகசாலையைக், காசியிலுள்ள ஹிந்து சர்வ கலா சாலைக்கு அளித்து விட்டாராம். அவர் தந்தையின் ஞாபகார்த்தமாக, இந்தப் புஸ்தகசாலை, துர்க்க தாஸர் லைப்ரெரி என்றழைக்கப்படும். இந்தியாவின் சரித்திரம், ஆசிய தேசங்களில் பிரயாணங்கள், கலைஞானம், முதலிய விஷயங்களைப் பற்றிய சிறந்த நூல்கள் பல, இந்த லைப்ரெரியில் அடங்கியிருக்கின்றன.

22. ஒரு பால ஸரஸ்வதி:—பர்மா தேசத்தில் ஐராவதி நதி தீரத்திலே பிறந்த ஓர் ஐந்து வயதுக் குழந்தை, சுபாவ குணத்திலும் சாதாரண நடபடிக்கைகளிலும், குழந்தைத் தனமாகவே யிருப்பினும், பிரசங்க மேடையில் ஏற்றி விட்டால், மணிக்கணக்காக, தர்ம சாஸ்திரங்களையும் மத விஷயங்களையும் பற்றி உபந்நியாசம் செய்வதுமன்றி, பழைய ஏட்டுச் சுவடிகள் எந்தப் பாஷையில் எதைக் கொடுத்தாலும், வாசித்துப் பொருளுரைக்கின்றதாம். யூத ரிஷியான மோசேயின் தசப் பிரமாணங்களையும், பௌத்த மத தத்துவங்களையும் பற்றி, டிப்டி கமிஷனர் உட்படக் கூடிய ஒரு பெருஞ் சபையார் முன் பிரசங்கம் செய்து, நன்னெறியில் ஒழுகும்படி எல்லோர்க்கும் உபதேசஞ் செய்ததாம்.

23. இந்தியர் பலவீனத்தின் மூல காரணம்:—இந்தியாவிலே, ஐரோப்பிய சைநியங்கள் உட்பட, மொத்தம் $1\frac{1}{4}$ லக்ஷம் வெள்ளையர்களில்லை. ஆயினும், இச்சிறு கூட்டத்தார், 32 கோடி ஜனங்களை அடக்கி யாண்டு வருகின்றனர். இது, இராணுவ பலத்தினுல் மாத்திரமன்று. ஹிந்து மதத்திலுள்ள ஜாதி பேதங்களால், ஹிந்துக்களுக்குள் ஒற்றுமை யில்லை; இஸ்லாம் மதக் கொள்கைப்படி, முகம்மதியர்களுக்குள் சமத்துவமும் ஒற்றுமையுமிருப்பினும், தங்கள் மதத்தைச் சேராத, முகம்மதியர்அல்லாத, ஜனங்கள் மற்றெல்லோரையும், முகம்மதியர்கள், புறம்பாக நினைப்பதால், அவர்களுடன் ஒற்றுமை பாராட்டுவதில்லை. இதுவே இந்தியாவின் பலவீனத்தின் மூல காரணம்.

24. பௌத்தமதப் பழஞ் சுவடிகள்:—மத்திய ஆசியப் பிரதேசத்திலே சில இடங்களைத் தோண்டிப் பார்த்து. ஆராய்ந்து வருவதில், பௌத்த மதமும் ஹிந்து நாகரிகமும் முற்காலத்தில் அங்கே தழைத்தோங்கியதைக் குறிக்கும் சாசனங்களும், மற்ற நாகரிகச் சின்னங்களும் அகப்படுகின்றன. இன்றைக்கு 1500 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட சில ஓலைச் சுவடிகள், பௌத்த மதத்தைப் பற்றிக் கூறுபவை, அகப்பட்டிருக்கின்றன. இந்தச் சாஸனங்களை ஆராயும் திறமையும் படிப்புமுள்ள மேதாவிகள் இல்லாமையாலும், இவ்வாராய்ச்சி செய்வோர் மேல் காட்டின

சட்ட விஷயம்

(142-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

4. கொலையும் சிசு ஹத்தியும் :—பண ஆசையினாலோ, பகைமையினாலோ, வேறு எந்தப் பொல்லாக் காரணத்தினாலோ, முன் சூழ்ந்து பிரயத்தனஞ் செய்து ஒருவனை ஒருவன் வதைக்கும் கொலையும்; அவமானத்தை அஞ்சி, புத்தி திரிந்து, பொறுக்கமுடியாத கஷ்டகாலத்தில், ஒரு தாயே தன் சிசுவைக் கொன்று மறைக்க முயலுவதும், இந்தியன் பீனல் கோடின்படி, ஒரேவிதமான (தூக்கிலிடுதல் அல்லது ஆயுள் முழுதும் தீவாந்தரம்) தண்டனைக்குரிய குற்றங்களாகின்றன. பிரான்ஸ், ஜெர்மனி முதலிய சில நாகரிக நாடுகளிலே இக்காலத்தில் இப்படியில்லை. வன்புற்ற கொலைக்குக் கொடிய தண்டனையும், சிசு ஹத்திக்குக் கொஞ்சகாலம் சிறைச்சாலையுமே, விதிக்கப்படுகின்றன. பம்பாய் மாகாணத்தில் தார்வார் ஜில்லாவிலே 22 வயதுள்ள ஒரு பிராமண விதவை சூலுற, அவள் தகப்பனார் வீட்டைவிட்டு வெளியே துரத்திவிட்டார். தன்னை இன்னாரென்று தெரியாத பிரதேசங்களில் சென்று, அவள் அலைந்து திரிந்துகொண்டிருக்கும்பொழுது, பிரசவித்து, தனக்குப் பிறந்த பெண் குழந்தையை உடனே கொன்று, ஒரு வேலிக்குள் எறிந்துவிட்டாள். போலீசார் அதையறிந்து அவள்மேற் குற்றஞ்சாட்ட, விசாரணை செய்த ஜெட்ஜு, குற்றத்துக்கேற்ற குறைந்த தண்டனையே விதிக்கத் தனக்குச் சட்டம் இடந்தராததற்காக வருந்தி, அவளுக்குச் சட்டப்படி தீவாந்தரம் விதித்தாராயினும், இரண்டு வருஷம் கடுங்காவல் விதித்தால் போதுமென்று சிபார்சு செய்தார். பம்பாய் ஹைகோர்ட்டாரும், அவ்வாறே ஸர்க்காருக்குச் சிபார்சு செய்திருக்கின்றனர். 'மனிதர் செய்யும் குற்றங்கள் வியாதிக் குறிகளே; குற்றவாளிகளைச் சிறைப்படுத்தி வதைக்காமல், ஏற்ற ஆசுபத்திரிகளிலும் ஆசிரமங்களிலும் வைத்துச் சிகிச்சை செய்வதே சரி' என்னும் அபிப்பிராயம் பரவிவரும் இந்நாளிலே, விதவா விவாகம் அநுமதிக்கப்படாத நம் நாட்டிலே, கொலைக்கும் சிசு ஹத்திக்கும் வெவ்வேறு தண்டனைகள் ஏற்படுத்துவதே நியாயமும் தருமமுமாகும்.

5. பெண்களின் சுதந்திரம் :—ருஷியா தேசத்தில் இப்பொழுது நடைபெறும் ஸோவியட் அரசியற் சட்டப்படி, ஆண்களுக்கும் பெண்களுக்கும், எல்லா விஷயத்திலும் சமசுதந்திரமும், ஒரேவிதமான பொறுப்பும் கடமைகளு முண்டு. இருவர் இஷ்டத்தையும் பொறுத்தது விவாகம்; அது, ஓர் ஒப்பந்தமே போலாம்;

தம்பதிகளில் எவர் அலுப்புற்றாலும், ஒப்பந்தம் நீங்கி, இருவரும் சுவாதீனராகிவிடுவர். இந்த ஏற்பாட்டினால், முன்னைவிட இப்பொழுது, வியபசாரம் குறைந்திருக்கிறதாம். வெளிப்படையாக, வியபசாரத்தை ஒரு தொழிலாக (வேசைகளைப்போல) நடத்துதல், சட்டப்படி குற்றமாகிவிட்டது; ஆனால், சட்டத்தை மீறி ஒழுகும் பெண்கள் மாத்திர மன்றி, அவர்களுக்குப் பணங் கொடுக்கும் புருஷர்களும், தண்டிக்கப்படுவர். முன் ஆட்சியிலே, துரைத்தனத்தாரே வியபசாரிகளுக்கு லைசென்சுகள் கொடுத்து, வியபசாரச் சாலைகளை யேற்படுத்தி, அதற்குக் கூலி இவ்வளவென்றும் ஏற்படுத்தி, வியபசாரத் தொழிலை, ஒழுங்காக, ஸர்க்கார் டிபார்டுமெண்டுகளில் ஒன்றாகப் பாராமரித்து, மேற்பார்த்துவந்தனர். இப்பொழுது அதெல்லாம் தொலைந்து போய்விட்டது.

நீதிமாலை

(114-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

4. மேரியின் பரோபகாரம்

பச்சோந்தி என்று மேரியை அவள் தோழிகள் பரிகசிப்பதுண்டு: அவ்வளவு நிமிஷத்துக்கு நிமிஷம் மாறும் குணமுடையவள் அவள். ஒரு நாள் பௌத்த மதத்தைப் பற்றி வாசித்துவிட்டு, 'இனிமேல் கொசுக்களைக் கொல்லலாகாது; நமது நண்பர் உறவினர்களின் ஆத்துமாக்கள் அவைகளில் புனர் ஜன்மம் எடுத்திருக்கலா மன்றோ' என்று, அவள் கவலைப்படலானாள். மற்றொருநாள், ஏழைகள் படும் கஷ்டங்களையும், செல்வத்தின் நிலையாமையையும், செல்வர்களின் கடமைகளையும் பற்றி, உருக்கமான ஒரு பிரசங்கத்தைக் கேட்டுவிட்டு வீடு திரும்பியவுடன், மேரி, தன் நகைகளை விற்று ஏழைகளுக்கு உதவி செய்யத் தீர்மானித்தாள். 'உனக்கு வேண்டாவிட்டால் எங்களுக்குக் கொடுத்துவிடு' என்று, அவள் அண்ணிமார் கேட்டதற்கு, 'உங்களுக்குக் கொடுத்தால் புண்ணியமா, புகழா ?' என்று மறுத்துவிட்டாள். கடைசியில், தன் உறவினர் சொல்லுக்கிணங்கி, மதாசாரியரும் தன் குருவு

மான பிஷப்பிடம் தெரிவித்து, அவர் புத்தி மதிப்படி நடக்க உடம்பட்டாள். அந்தப் பிஷப்புக்கு மேரியின் சபல சித்தமும் குணமும் தெரியும். மேரி, அவரிடம் சென்று, "ஐயா! என் மனம் மாறிவிட்டது; அநித்தியமான செல்வத்தால் என்ன பிரயோசனம்? அதனால் ஆத்ம சாந்தி உண்டோ? என் சகோதரி சகோதரரான ஏழைகள் கந்தையும் கூழுமே யின்றித் தவிக்கும் போது, நான் மட்டும் முத்துக்களாலும் வைரங்களாலும் ஜொலிப்பது தருமமோ? என் ஆபரணங்களை யெல்லாம் விற்று, ஏழைகளுக்கு உதவி செய்யத் துணிந்து விட்டேன்" என்றாள்.

பிஷப்:—குழந்தாய்! உன் எண்ணம் சிலாக்கியமானது தான்; ஆனால், உன் ஆபரணங்கள், கேவலம். சாதாரணமான வியாபாரச் சரக்குகள் அல்லவே; உன் அருமைத் தாய் உனக்கென்று கொடுத்தவைகளே.

மேரி:—அதனால் என்ன? 'துர் எண்ணங்களை மனத்தில் உண்டாக்கும் பாபக்கருவிகளே நகைகள்; ஒருவன் கல்லைக் கட்டிக் கொண்டு கசத்தில் இறங்குவது போல, இவைகளை அணிபவரும், நரகத்திற்குள் இழுக்கப்படுகிறார்கள்' என்று, உபந்நியாசகர் சொன்னது முழுதும் பொருந்தும்.

பிஷப்:—ஆஹா! அருமையான உபமானம்! உண்மை தான்? ஆனால், குழந்தாய், நீ மற்றொரு விஷயம் யோசித்ததுண்டா. நீ விற்க, உன் நகைகளை வாங்குவோரும், அவைகளால் நரகக் குழிக்குள் இழுத்துச் செல்லப்படமாட்டார்களா? உன் ஆத்மாவின் க்ஷேமத்தையே கருதி, நீ, மற்றவர் கழுத்தில் கல்லைக்கட்டி, அவர்கள் ஆத்மாக்களை நரகத்தில் புகுத்த முயலலாமா?

மேரி:—ஆமாம், ஐயா, அதைப்பற்றி நான் நினைக்க வில்லை; தங்களுக்கு வந்தனம்; நான் போய் வருகிறேன்.

அப்பால், மேரி, தன் ஆபரணங்களைத் தன் மதினிகளுக்குக் கொடுத்து விடலாமா என்று யோசித்துப் பார்த்தாள்; முடிவில், "நாமே வைத்துக்கொண்டிருப்பதுதான் உத்தமம்; மற்றெவருக்கும் அபாயம் வராது" என்று தீர்மானித்தாள். இதுவே அவள் செய்த பரோபகாரம்.

—மா

(192-ம் பக்கம் தொடர்ச்சி)

பிரான்ஸில்—13½; இலங்கைத் தீவில்—9½; பிலிப்பைன் தீவுகளில்-9; பரோடாவில்-8½; பிரிட்டிஷார் ஆட்சிக்குட்பட்ட இந்தியாவில்-2 விகிதமே ஆரம்பக் கல்வி நடை பெறுகின்றது. மொத்த ஜனத்தொகை வீதத்தில், ஆண்டு தோறும், தலைக்கட்டு ஒன்றுக்கு எவ்வளவு பணம், துரைத்தனத்தாரால், ஆரம்பக் கல்வியில் செலவிடப் படுகிறது என்பதைக் கவனிப்போம்: அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில்—ரூ. 19; ந்யூசிலந்தில்—ரூ. 13; இங்கிலாந்தில்—ரூ. 12; ஜெர்மனியில்—ரூ. 8; பிரான்ஸில்—ரூ. 3; பிலிப்பைன் தீவுகளில்—ரூ. 2½; பரோடாவில்—ரூ. ½; பிரிட்டிஷ் இந்தியாவில் இரண்டணா தான்! நமது இந்தியா தேசமோ:—

"மேட்டிமை இன்று விளம்பிடும் மேலையர்
காட்டினராக அலைந்திடு காலையில்
வித்தைமுற்றி, உலகத் தினைக்கும் உயர்
புத்தியிற் பெரிய சற்குருவே என,
நாகரிகங்களின் நாற்றங் காலென"

விளங்கிய மாபெருந் தேசம்; இந்தியர்களோ, புத்திக் கூர்மையில் மற்றெவருக்கும் பின்படாதவர். ஆங்கிலேயர் இந்தியாவை ஆளத் தொடங்கி ஒரு நூற்றாண்டுக்கு மேலாகின்றது; இப்படிப்பட்ட சிறப்பேது மில்லாத பிலிப்பைன் தீவுகளை அமெரிக்கர் ஆளத்தொடங்கி 25 வருஷங்களே ஆகின்றன, அந்நாட்டு ஜனங்களோ, காட்டு வாசிகளோடு சேர்த்து எண்ணப்பட்டவர்; இப்படியிருந்தும், இன்று, அத் தீவுகளின் படிப்பு மேன்மையையும் இந்தியாவின் படிப்பு மேன்மையையும் ஒத்துப் பார்க்குமிடத்து, ஆங்கிலேயர் தம் கடமையில் இந் நாட்டிலே எவ்வளவு தவறி விட்டனர் என்பது விளங்கும். இந்நூல், இவ்விஷயத்தைத் தெளிவாய் எடுத்துக் காட்டுகின்றது.

10. ஜாா துஷ்டிரன்:—(சோமாதேவி பாரத்துவாஜ ஆசிரமம், ஸ்ரீ. சுத்தானந்த பாரதியார் எழுதியது. விலை 0–1–6) ஜெந்தவஸ்த மதஸ்தாபகரின் சரித்திரத்தையும் கோட்பாடுகளையும், அலங்காரமான நடையில், சுருக்கிக் கூறுவது.

11. குரு கோவிந்த சிங்கன்—(சோமாதேவி-பாரத்துவாஜ ஆசிரமம், விலை 4 அணா) பஞ்சாபு தேசத்தில் வசிக்கும் சீக்கியர்களின் பத்தாவது குருவின் சரித்திரத்தை, செவ்விய தமிழ் நடையில் விளங்கக் கூறுவது. அகாலியர் சத்தியாக்கிரகப் போராட்டம் நிகழும் இந்நாளிலே, அதன் சூக்ஷுமத்தை அறிய விரும்புவோர், இந்நூலைப் படித்தல் தகும். இந்நூலும், முந்தியதும், பிற சமய உண்மைகளைத் தமிழர்க்குப் புகட்டுவனவாம்.

12. உண்மைக் காதலின் வெற்றி:—(விலை 0–1–0; 'ராம் வில்லா', இராயபுரம்) 16 பக்கங்களில் ஒரு சிறு கதை.

மாதர் பகுதி

ஹிந்து ஸ்திரீகள்

(110-ம் பக்கத்தின் தொடர்ச்சி—ஓர் இந்திய ஸ்திரீ எழுதியது.)

பூர்விக சொத்தில் உள்ளதை வைத்துக்கொண்டு, வெய்யிலில் அலையாமல் வீட்டிலிருந்து சாப்பிட்டுக்கொண்டு, சோம்பலாயிருக்கப்பட்ட புருஷனுக்குக் கூட, இதுவே எண்ணந்தான். இப்படிப் புருஷர்களை உயர்வாயும் பெண்களைத் தாழ்வாயும் எண்ண ஆரம்பித்தார்கள். ஒரு பெண் புக்ககத்துக்கு வந்தால், மாமியார் நல்லவளாயிருந்தால், வீட்டில் கஷ்டப்படாமல் வேலைகளைச் செய்து, ஏனென்று கவனியாத தன் புருஷனுடனிருந்து காலத்தைப் போக்கலாம் ஈவு இரக்கமில்லாத மாமியாயிருந்தால், வீட்டில் எந்த விதமாய் வேலை செய்தாலும் திருப்தியில்லாமல், வேலைகளைச் செய்யவென்று விலைக்கு வாங்கினது போல் நினைத்து, சரியானபடி சாதங்கூடப்போடாமலும், வீட்டில் ஒருவருடனும் பேசக்கூடாதென்றும், கணவனெதிரே வரக்கூடாதென்றும், கடுகடுத்த முகத்துடன், ஏதாவது சொல்லிக்கொண்டே இருப்பாள். புதிதாய் வந்த பெண்ணுக்கோ, வீட்டுவேலையைத் தவிர வேறொன்றுந் தெரியாததினாலும், பேசுவதற்குத் தன் சொந்த மனுஷாள் இல்லாததனாலும், அந்நியர் ஒருவருடனும் பேசக்கூடாத புக்ககத்தில், வேலை செய்வதைத் தவிர வேறு பொழுது போக்க ஒரு வழியுமில்லாமல் இருந்தது. படிப்பாவது தெரிந்திருந்தால், மனவெறுப்பும் உடம்புச் சளைப்புமாயிருக்கும் பொழுது, ஏதாவது சீதை, சந்திரமதி இவர்கள் கதைகளைப் படித்து, மனத் திருப்தியுடன் பொழுதைப் போக்கலாம். அந்த விதத்திலும் படிப்பென்ற வாசனையே கிடையாமல் வைத்திருந்ததனால், உடம்பு சலிக்கிற வரையில் வேலைகளைச் செய்வது தவிர, வேறு பொழுது போக்க முடியாது. அப்படி வேலை செய்யும்பொழுது கூட, மாமியானவள் அந்தந்த வேலைகளைப் பற்றிக் குற்றங்கள் கூறி, தான் மருமகளாய் வந்த பொழுது எவ்வளவோ பயபக்தியுடனிருந்து வேலைகள் செய்ததாயும், அப்படியிருந்துங் கூடத் தன் மாமியார் ஏதாவது புகார் சொல்லியதாயுஞ் சொல்லி, தன்னைத்தானே நல்லவளாக்கிப் புகழ்ந்து, தன் மருமகளிடத்தில் ஏதாவது தப்புச் சொல்லிக் கொண்டேயிருப்பாள். தான் செய்வது தப்பில்லாமலிருக்கும்பொழுது தப்பு என்று சொல்

கிறாளே என்று நினைத்து, மருமகள், 'அது சரிதானே; தப்பில்லையே' என்று பதில் சொன்னால் போதும். உடனே மாமிக்குத் தன்னை அறியாமல் கோபம் வந்து, "பதில் சொல்லுகிறாயா அதிகப் பிரசங்கி!" என்று சொல்லித் தூற்றுவாள். 'இட்ட சோற்றைத் தின்று, உள்ள வேலையை வாயைத் திறவாமல் செய்யவேணும்; இது தான் நல்ல பெண்களுக்கு அடையாளம்' என்றும் சொல்வாள். இந்த விதமாகக் குடித்தனம் பண்ணி வந்தார்கள். நாளுக்கு நாள் பெண்களுக்கு எவ்விதச் சந்தோஷமும் ஆசைகளுமில்லாமல், ஆடுகள் மாடுகள் கூடி குட்டிகள் போடுவதுபோல், கணவனுடன் திருடுவதுபோல இரகசியத்திலிருந்து, குழந்தைகளைப்பெற்று வந்தார்கள். பெண்களைப் பெண்களே அடிமைப்படுத்தி, மாமிக்கும் ஒரு மாமி உண்டு என்பதுபோல், தான் மருமகளாயிருந்த பொழுது, தன் மாமியார் எவ்வளவு தன்னை அடக்கி ஆண்டாளோ, அதிலும் பத்துப்பங்கு மேலாய், தான் மாமியான உடன், தன் மருமகளை அடக்கி ஆள ஆரம்பித்து, அடிமைக்குள் அடிமை ஆக்கி வந்தார்கள், இவைகளெல்லாம், நீதி இல்லாமலும் படிப்பில்லாமலும் மௌட்டியமாயிருக்கும் புருஷர்களுக்குச் சௌகரியமாயிருந்தன. பெண்கள் பெரியவர்களாகிக் கணவர் வீட்டுக்கு வந்தால், எல்லாருடனும் சந்தோஷமாயிருந்து, கணவனுடன் இஷ்டமாயிருந்து, குழந்தைகளைப் பெற்று, அவர்களை நன்றாய்ப் பழக்கிப் படிப்பித்துச் சற்பாத்திரர்களாக்கி, தாங்களும் அந்தி காலத்தில் எல்லாக் கவலைகளையும்விட்டுவிட்டு, சுவாமியைத் தியானித்து, முக்தி பெறவேணுமென்று எண்ணமே தோன்றாமல், தாங்கள் மாமியார் கீழிருந்தபொழுது எவ்வளவு கஷ்டப் பட்டார்களோ, அதிலும் மூன்று பங்கு தன் மருமகளைக் கஷ்டப்படுத்தினாலும் குற்றமில்லை என்று எண்ணி ஆளுங் காலத்தில், புருஷர்களும், தனக்கும் பெண்டாட்டிக்கும் அந்தரங்க அன்னியோன்னியம் சந்தோஷம் அன்பு ஆசை இவை இருக்க வேண்டுமென்று நினையாமலும், சுகம் துக்கம் இரண்டும் இருவருக்கும் பொது என்று கூட எண்ணாமலும், மனைவிமேல் அன்பு ஆதரவில்லாமலும், தனக்கு ஒரு அடிமையை வாங்கி விட்டதாக நினைத்து, நடந்து வந்தார்கள். மேலும் புருஷர்கள் பெண்களை இகழ்ந்து, 'துருத்திபோல் தின்பார்கள்' என்றும், பெண்களெல்லாம் இராக்ஷஸிகள் என்றும் சொல்லி, இழிவாய் நினைத்து நடத்தி வந்தார்கள். உலகத்தில் அக்கிரமங்கள் அதிகரித்தால் சுவாமி ஒரு நல்ல வழிவிடுவார் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது போலவே, சில புருஷர்கள் இங்கிலீஷ்ப் படிக்க ஆரம்பித்து, அதை நன்றாய்ப்படித்து, தகுந்த உத்தியோகமும் பண்ணிவந்தார்கள்; நம்ம சாஸ்திரங்கள் படிப்புகள் எல்லாம் மறந்து, முன் காலத்தில் நம் ஜனங்கள் எப்படியிருந்தார்கள் என்பதே தெரியாமல் பேரழி

பத்திராதிபர் குறிப்புக்கள்

(176-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

9. ஒரு புதுச்சுமை:—இராசப் பிரதிநிதியும் வேறு சில அதிகாரிகளும் இங்கிலாந்து சென்றுமீளும் பிரயாணச்செலவு,முன்பின்,பன்னீராயிரம் பவுனாகுமாம். இச் செலவினால் இந்தியாவுக்கு என்ன நன்மை விளைந்திருக்கின்றது? கடவுளே அறிவார்; நாம் அறிவது, சுமையின் பளுவேயாம்.

10. தமிழ்ப் பண்டிதர்க்குச் சம்மானம்:— 8—6—1925 அன்று மதுரைத் தமிழ்ச் சங்கம் கூடிய போது, பழைய சங்கநூல்களில் மிகப் பலவற்றை இந்நாளைய மேல்நாட்டு ஆராய்ச்சி முறைப்படி பரிசோதித்துப் பதிப்பித்து, ஒரு நூறாயிரம் பாட்டுக்களைப் பாடிக் குவிப்பதினும் மிகச்சிறந்த பேருதவியைத் தமிழகத்துக்குச் செய்தவரும்; இக்காலத்துத் தமிழ்ப் புலவர் திலகம்போல் விளங்குவோருமான, மஹாமஹோபாத்யாய ப்ருமஸ்ரீ பண்டிதர் உ. வே. சாமிநாதையர் அவர்கட்கு, ஐயாயிரம் ரூபா வரை அடங்கிய பணப்பையும், தங்கத்தோடா, ஜோடி சால்வைகளும், வெகுமதி யளிக்கப்பட்டன. பண்டிதர் அவர்களினும் சிறந்த தமிழறிவாளர் இன்மையை அறிந்தே போலும், அவ்வமயத்தில் தலைமை வகித்துப் பரிசை அளிக்க, ஐரோப்பிய பாஷைகள் பல கற்றுத் தேர்ந்தவராயினும், தன் தாய் மொழியை நன்கறியாத ஒருவரைத் தேர்ந்தெடுத்தனர்! இது நிற்க பண்டிதர் சாமிநாதையரைப்போல உழைத்தலும் பெருமை பெறுதலும், மிகச் சிலர்க்கே அமையும். அவ்வளவின்றி, குறைந்த அளவில் தமிழுக்காகப் பாடுபட்டு வரும் புலவர்கள் பலர், ஆதரவின்றி இக்காலத்தே தவிக்கின்றனர். மூளையின் வலியை மழுக்கிக் கெடுக்க, வறுமையென்னும் எஃகினும்கூரியதொன்றில்லை. இப்படிப்பட்ட சாமானியப் புலவர்களையும் ஆதரித்து, அவர்களால் தமிழ் வளர்ச்சிக்கு ஏற்ற பணியை ஆற்றிக்கொள்ளுமாறு, சங்கத்தார், ஒரு பொது நிதியைச் சேகரித்துக் கையாளுதல் நலமாகும்.

11. தேவஸ்தானங்களும் கல்விப் பயிற்சியும்:—திருப்பதி தேவஸ்தானத்தில் 40 லக்ஷம் ரூபா கையிருப் பிருக்கிறதாம். ஆண்டுதோறும் 18 லக்ஷம் ரூபாவரை வருமானம் கிடைப்பதால், சகல செலவும் போக, ஏழெட்டு லக்ஷமாவது மிஞ்சும். இதைக் கொண்டு, ஒரு சர்வகலாசாலையை அங்கே ஸ்தாபிக்க உத்தேசிக்கின்றனர். இக்கலாசாலையில் நமது பூர்விக வேத சாஸ்திர

ங்கள், தர்க்க நூல்கள், வேதாந்த விஷயம், லீலாவதி முதலிய கணித நூல்களும்; தற்காலத்துப் படிப்பும், போதிக்கப்படும். திருப்பதிச் சர்வகலாசாலை,விசேஷமாய் ஆரியர் நாகரிகம், ஆந்திரர் பயிற்சிகளை அநுசரித்ததாயிருக்குமாம். இவ்வாறே, திராவிடர்களின் பண்டை நாகரிகம் பயிற்சிகளை ஆராய்ந்து பரப்பி விருத்திசெய்ய, திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் முதலிய மடாதீனங்களின் வருமான சேஷத்தைக் கொண்டு, ஒரு திராவிடச் சர்வகலாசாலையும் பின்னர் ஸ்தாபிக்கப்படுமாம். ‘இவ்வண்ணம் கோயில் மடங்களின் சொத்துக்களை ஜனங்களின் கல்வி அபிவிருத்தியிற் செலவிடுவது, அவற்றை ஆதியில் ஸ்தாபித்தவர்களின் கருத்தொடு பொருந்தாது; அதனால், அப்படிச் செய்வது நியாயமன்று’ என்று, ஒரு சிறு பகுதியார் கூறுவர். இவர்கள், இரண்டு உண்மைகளை நினைக்கக் கடவர்: கோயில் மடங்களில் தெய்வத்தைப் பூசித்துத் தொழுது மனிதர் பக்தி செலுத்துவதற்கும்; தமது தினசரி வாழ்க்கையில் பொய் களவு முதலிய பாவங்களை யொழித்து, அறிவைப் பெருக்கி, இந்திரியப் பிரவிர்த்திகளைத் தம்வசப்படுத்தியடக்கி ஆண்டு, மிதமாக நியாய வழியில் போக போக்கியங்களை அநுபவித்து,ஆத்மசக்தியை நாளுக்குநாள் வளர்த்துப் பெருக்கி, தந்நயக் கருத்தைக் குறைத்துப் பரோபகாரச் சிந்தையையும் செயல்களையும் அதிகப்படுத்தி, தம்முயிர்போற் பிற உயிர்களையும் கருதி அன்பு செலுத்தி, தம்மனம் ஒப்பத் தமக்கும் உலகத்துக்கும்நற்சுகமும் பெரும்பயனும் உண்டாகும்படி வாழுவதற்கும், எவ்விதச் சம்மந்தமு மில்லை என்றெண்ணுவது, முழுமூடத்தனம் என்பது ஒன்று. மற்றொன்று முன்னோர் ஆஸ்தியைத் தம் இஷ்டப்படி கையாளப் பின்னோர்க்கு முழுச் சுதந்திர மிருப்பது மாத்திரமன்றி, இக்காலத்தில் இந்த ஸ்தாபனங்களுக்குக் கிடைக்கும் பொருள், இக்காலத்துப் பக்தர்கள் கொடுப்பதே யாதலால், இக்காலத்தவர் முன்னேற்றத்துக் கேற்க அதைச் செலவிடுவது தவறாகாது என்பது. ஆதலால், இந்த ஆக்ஷேபணையை நாம் கவனிக்க வேண்டியதில்லை ... இனி, பொருளைச் செலவிடும் முறையைக் கவனிப்போம்: இச் சந்தர்ப்பத்தில், லாலா லஜபதிராய் தேசியக் கல்வியைப்பற்றி எழுதியிருப்பது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது. இப்பொழுதுள்ள தென்னிந்தியர்களாகும் நாம், ஆதி ஆரியர்களுமல்ல, பழைய திராவிடருமல்ல ஆதலால், அவர்களுக்கு ஏற்றது நமக்கு ஏற்காது; காலத்துக்கு ஏற்றபடி மாற்றிக் கொள்வதே மதியாகும். இதை மறந்துவிடுவோமாயின், இப்பொழுது தர்மகர்த்தர்களும் மடாதிபதிகளும் பொருளை வீண் செலவு செய்வதுபோலவே,நாமும் பாழ்க்குவோர் ஆகுவோம். தவிர, தென்னிந்தியாமட்டில், ஆரிய நாகரிகம் பயிற்சி திராவிட நாகரிகம்,பயிற்சி, யென்று வரையறுத்துப் பிரிப்பது அசாத்தியம்; அனுகூலத்தைத் தருவதுமன்று. இப்பொழுது துரைத்

தனத்தார் பராமரிப்பில் நடைபெறும் கலாசாலைகளில்விட எவ்வளவோ விசேஷமாகவும் அதிகமாகவும், நமது பழைய வேதசாஸ்திரங்களையும் கலைகளையும் சரித்திரத்தையும், புதிதாய் ஸ்தாபிக்கப் போகும் கலாசாலைகளில் பயின்று ஆராய்ச்சி செய்யவேண்டும் என்பது மெய்யே. அதோடு நின்று விடாமல், தற்காலத்துக்குரிய பாஷைகள் கலைகள் கைத்தொழில்களையும் பயிலுவது, அத்தியாவசியமாகும். ஒவ்வொரு வித்தியார்த்திக்கும், கச்சேரிகளில் இறகோட்டி வயிறு கழுவும் தொழிலையன்றி, மானமாய்க் காலக்ஷேபம் செய்யக் கூடிய சக்தியையுதவும் இரண்டொரு தொழில்களையேனும் கற்பித்து, நாட்டிலே தொழில்கள் அபிவிருத்தியாகி, வித்தியார்த்திகள் பிழைப்புக்கு இடந்தரும் வழிகளைத் தேட வேண்டும். ரெயில் வண்டிகளில் 3-வது வகுப்பினரிடமிருந்தே அதிக வருமானம் கிடைப்பதுபோல, கோயில் மடங்களிலும், சாதாரண ஏழை ஜனங்கள் கொடுக்கும் சிறு பொருளே, பலதுளி பெரு வெள்ளமாகி, அதிக வருமானத்தைத் தருகின்றது; ஆதலால், இந்த மகா ஜனங்கள் எல்லோரும் கல்விப் பயனைச் சிறிதேனும் பெற்று விளங்கும்படி, ஆரம்பக் கல்வியில் ஏராளமான பொருளைச் செலவிடவேண்டும். அன்றியும், சங்கீதம், சிற்பம், ஓவியம், நடனம் முதலிய கலைகளைப் பேணுவதும்; ரஸ்தாக்கள், குளங்கள், சாலைகள் முதலியவற்றைச் செப்பனிட்டுப் பெருக்கித் தொண்டர்களுக்குச் சௌகரியஞ்செய்வதும், தேவஸ்தாபனங்களின் கடமையாகும். எனவே, பலகோடி ரூபா ஆண்டுதோறும் கிடைப்பதாயினும், செலவு செய்தற்குரிய நல்வழிகள் எத்தனையோ இருக்கின்றன. வீணாகாமல், பாழாகாமல், நன்மையினும் தீமையையே மிகுவிளைக்காமல், பெரும்பயனைத் தரக் கூடிய துறைகளில் செலவிடுவது ஒன்றையே கருதி, காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்கச் செலவு செய்தால், மடாலயங்களால் நாடு முன்னேற்றமடையுமென்பது திண்ணம்.

12. வங்காளத்தில் இரு கிளையாட்சி:—தேசபந்து சித்தரஞ்சனதாஸின் தலைமையின் கீழ், சுயராஜ்யக் கட்சியினர் அடுத்துத் தடுக்கும் திறமையினால், வங்காளச் சட்டசபையில், மூன்றுமுறை மந்திரிகளின் சம்பளம் மறுக்கப்பட்டுத் துரைத்தனத்தார் தோல்வியுற்றதனால், இப்பொழுதுள்ள சட்டசபையின் ஜீவியகாலம்வரை—அதாவது 21—1—1927 வரை— வங்காளத்தில் இரு கிளையாட்சிமுறை தொலைந்து, துரைத்தனத்தாரே (மந்திரிகளின்றி) ஆண்டுவருவர். குடியாட்சி என்னும் போலித் தோற்றத்தை இவ்வண்ணம் சாயம் துலக்கியது, சுயராஜ்பக் கட்சியின் பலத்தைக் காட்டும். 13—6—25 முதல் இந்த ஆக்கினை அமுலுக்கு வந்தது; 16—6—25 அன்று சித்தரஞ்சனர் இறந்தார். உத்திரவைப் பிரசுரிக்குமுன் அவர் மாண்டிருந்தால், இந்த உத்திரவு பிறந்திராது; துரைத்தனத்தார் 4-வது முறையும் முயன்று பார்த்திருப்பர்; ஒருவேளை செயித்துமிருப்பர். இனி என்ன நடக்குமோ தெரியாது.

13. இந்தப் பத்திரிகை:–177-ம் (இந்தக் காசின் முதற்) பக்கத்தில் காணும் வேண்டுகோளைப் படித்துப் பார்த்து, இயன்றமட்டும் உதவிசெய்ய, நண்பர்களையும் அபிமானிகளையும் வேண்டுகிறேன். பத்திரிகையின் பக்கங்களை அதிகப்படுத்துவதுபோய், குறைக்கவோ, அல்லது முற்றிலும் நிறுத்திவிடவோ, நேராதவாறு, செய்யவேண்டும்.

லக்ஷ்மி

சித்திரப் படங்களடங்கிய உயர்தர

மாதாந்த செந்தமிழ்ப் பத்திரிகை.

பலபண்டித சிரேஷ்டர்களாலும் கவிவாணர்களாலும் எழுதப்பெற்ற அரிய பெரிய உபந்யாஸங்கள், அழகிய சிறு கதைகள் முதலியன மாதந் தோறும் இதில் வெளி வருகின்றன.

வர்த்தகம் கைத்தொழில் சுகாதார விஷயங்களும் லக்ஷ்மியில் எப்பொழுதும் காணப்படும். மாதிரிப்பிரதி இனமாக அனுப்பப்படும்.

வருட சந்தா உள்நாடு 2-0-0

வெளி நாடு 2-8-0

லக்ஷ்மி இதழ் 12-ம் காலிகோ பைண்டு செய்யப்பட்டு கில்ட் எழுத்துடன் கூடிய "லக்ஷ்மி" மலர் ஒன்றுக்கு ஆர்டர் செய்யுங்கள். 800 பக்கங்கள் 30 படங்கள் உள்ளது. புஸ்தகம் வைத்துக் கொள்வதற்கு அழகான பெட்டியுடன் விலை ரூபா 3.

[illegible] லக்ஷ்மி ஆபீஸ்,

தபால் பெட்டி 99, சென்னை.

SRINIVASA VARADACHARI & Co.,

PRINTERS & BOOKSELLERS,

MOUNT ROAD, MADRAS.

தமிழ்ப் பிரசுரங்கள்

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. V. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M. A. விலை அணா 10.

2. போஜ சரித்திரம்.—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப்ஜட்ஜ், நாகபட்டணம். விலை அணா 10.

3. ராஜராஜசோழன் I.–ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள், R. ரங்காசாரியா ரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.

4. இட்டார்க்கு இட்டபலன்.—ஆசிரியர் மிஸ்டர் J. பொன்னுஸாமி ராவ். விலை அணா 10.

5. திலகவதி.–சகோதரி V. பாலம்மாள் எழுதியது. ராவ் ஸாஹெப், S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ 1–4–0.

6. தமிழ் வசன லக்ஷணம்.—G. தாமோதர முதலியார், B. A. எழுதியது. விலை அணா 12.

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1-6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7-12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

9. சுகாதார போதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது: விலை அணா 8.

சுதேசமித்திரன் புஸ்தகசாலை

ஸ்ரீமத் பகவத்கீதை:—

சி. ஆர். ஸ்ரீநிவாஸையங்கார் இயற்றியது

காலிகோ பயிண்டு ... 3—0—0

ஆழ்வார்கள் திவ்ய சரித்திரம்:—ஷையார்

இயற்றியது ... 1—8—0

தீர்க்க தரிசிகள்.—சங்கரர், இராமானுஜர், மத்வர், புத்தர், குருநானக், முகம்மது நபி, மகா வீரர் முதலிய எழுவரடங்கிய சரித்திரக் கொத்து—காலிகோ பயிண்டு - தனித்தனி அணா 5. ... 2—8—0

வஸந்தோத்தியானம்:—அல்லது நான்கு பக்கிரிகள் கதை - பண்டிட் நடேச சாஸ்திரிகள் இயற்றியது

2 பாகங்கள் ... 3—0—0

இரத்தினமாளிகை ... 0—12—0

பாமாலை ... 0—4—0

P. O. Box 126, MADRAS.

கராச்சி பட்டுச் சேலைகள்

விலை சரசமாகக் கிடைக்குமிடம்

இதுவே!

தென் இந்தியா ஸ்டோர்ஸ்

கேதாரகட்டம், காசி.

இந்தச் சேலைகள் தினந்தோறும் துவைத்துக் கட்டக் கூடியது. விளிம்பில் ஜரிகை களாவர் கரை, ருத்திராக்ஷக்கரை போடப்பட்டது. ஊதா, ரோஸ், ஸ்நப் (Snuff,) Pink, பச்சை, கருப்பு மேக வர்ணம் முதலிய கலர்களில் கிடைக்கும்; :—

12 மு. $2\frac{1}{2}$ அகலம் சேலை 1-க்கு ரூ. 28 முதல் 35 வரை.

16 × $2\frac{1}{2}$ அகலம் சேலை 1-க்கு ரூ. 35 முதல் 50 வரை.

18 × $2\frac{1}{2}$ அகலம் சேலை 1-க்கு ரூ. 40 முதல் 50 வரை.

விலாசம் தெரிவிப்போர்களுக்கு கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

Address:—

MANAGER,

South India Stores,

KEDARGHAT,

Benares City, U. P.